2021

# சுபிட்சத்தின் நோக்கு பற்றி இலங்கையின் பார்வை: கொடுத்த வாக்குறுதிகள் மற்றும் தற்போதைய போக்குகள் தொடர்பான ஒரு திறனாய்வு

அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) ஆட்சிமுறை மற்றும் முரண்நிலைக்கான தீர்வு போன்ற விடயங்களில் பிரதான கவனம் செலுத்துகின்ற சுயாதீனமானதும், பக்கச்சார் பற்றதுமான ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்கக் கொள்கைக் கலந்துரையாடலின் வலுப் படுத்தலுக்கான தேவையில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆராய்ச்சி மற்றும் வாதுரைத்தல் மூலம் அரசாங்கக் கொள்கை தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, மாற்றீடுகள் இனங் காணப்பட்டு, மற்றும் பரப்புரை செய்கின்றதுமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பற்றுறுதி கொண்டுள்ளது.

இல. 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386
தொலைநகல்: +9411 2081388 மின்னஞ்சல;: info@cpalanka.org
இணையத்தளம்: www.cpalanka.org
மின்னஞ்சல்: info@cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்:@cpasl

பதிப்பகத்தார்: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), கொழும்பு, இலங்கை
ISBN இல: ISBN978-624-5914-03-6
பார் குறியீட்டெண் - 9 786245 914036
பதிப்புரிமை © | CPA

# நன்றியுரைகள்

இத்திறனாய்வுக் கட்டுரை பவானி பொன்சேக்கா மற்றும் உவின் திசாநாயக்க ஆகியோர்களால் ஆராய்ச்சி மேற்கொண்டு எழுதப்பட்டது. ஆராய்ச்சி உதவி அட்ஹீப் அன்வர், ரஜனி சந்திரசேகரம், முஜிபூர் ரஹுமான் மற்றும் சந்தீப் திஸ்ஸராச்சி ஆகியோரால் அளிக்கப்பட்டது. முன்வரைதல்களுக்கான குறிப்புகள் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் லுவி கணேசநாதன் ஆகியோரால் வழங்கப்பட்டன. இந்த அறிக்கையின் கண்டறிதல்களுக்கான தகவல்கள் மற்றும் உட்பார்வைகளைப் பகிர்ந்து கொண்ட பலரினால் வழங்கப்பட்ட உதவிகளை கட்டுரையின் ஆசிரியர்கள் பாராட்டி நன்றியுரைக்கின்றனர்.

# சுருக்கப் பெயர்கள்

| | |
|---|---|
| CDF | சிவில் பாதுகாப்பு படை (சி.பா.ப) |
| ECT | கிழக்கு கொள்கலன் முனையம் (கி.கொ.மு) |
| FTZ | சுதந்திர வர்த்தக வலயம் (சு.வ.வ) |
| GSP | பொதுவான சலுகைகளுக்கான முன்னுரிமைப்படுத்தல் முறைமை (ஜி.எஸ்.பி) |
| GDP | மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) |
| ICCPR | சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (ஐ.சி.சி.பி.ஆர்) |
| KNDU | ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் (கொ.தே.பா.ப) |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் (த.வி.பு) |
| MCC | புத்தாயிரமாம் ஆண்டு சவால்களுக்கான கூட்டுத்தாபனம் (எம்.சி.சி) |
| NMRA | தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை (தே.ஔ.க.அ) |
| NPP | தேசிய மக்கள் சக்தி (தே.ம.ச) |
| PTA | பயங்கரவாத தடைச் சட்டம் (ப.த.ச) |
| SJB | ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச) |
| SLPA | இலங்கை துறைமுக அதிகாரசபை (இ.து.அ.ச) |
| SLPP | இலங்கை பொதுஜனப் பெரமுன (இ.பொ.பெ) |
| TNA | தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ) |
| TMTK | தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (த.ம.தே.கூ) |
| UNHRC | ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை (யு.என்.எச்.ஆர்.சி) |
| WCT | மேற்கு கொள்கலன் முனையம் (மே.கொ.மு) |
| WHO | உலக சுகாதார நிறுவனம் (உ.சு.நி) |

## பொருளடக்கம்


அறிமுகம் ....................................................................................................................5

1. ஆட்சிமுறைமை ..........................................................................................................7

*தொழில்நுட்பக் கோட்பாட்டு ஆட்சிமுறைமைக்கான வாக்குறுதி ................................... 7*

*ஓர் உறுதியான ஆட்சியாளர் பிம்பத்தை உருவாக்குதல் மற்றும் மாற்றத்திற்கான வாக்குறுதிகள் ............................................................................................................. 8*

*ஜனநாயகத்தின் சீர்குலைதல் மற்றும் அதிகாரத்தை அரசு கைப்பற்றுதல் ...................10*

*பெருந்தொற்றின் அதிகரிக்கும் செலவுகள் ....................................................................13*

*அதிகரிக்கும் தோல்விகள் மற்றும் கட்டவிழும் வாக்குறுதிகள் ...................................18*

*பொறுப்புக்கூறலின்மை, குற்ற விலக்களிப்பை ஸ்தாபித்தல் மற்றும் அரசியல் பழிவாங்கல் ......................................................................................................................22*

2. இராணுவமயப்படுத்தல் ..............................................................................................26

*இராணுவ நியமனங்கள் மற்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் .................26*

*பெருந்தொற்று பதிலிறுத்தலின் இராணுவமயப்படுத்தல் ................................................27*

*இராணுவமயமாக்கலுக்கான கருத்தியல் ரீதியான நியாயப்படுத்தல்கள் .......................30*

*நிலமும் இராணுவமயமாக்கலும் .........................................................................................31*

3. நல்லிணக்கம் ................................................................................................................35

*இனப் பெரும்பான்மைவாதம் மற்றும் புதிய கட்டமைப்புகள் .........................................35*

*பெருந்தொற்றுக் காலத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் .........................................36*

*நிலம்.்.காணி முரண்பாடுகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான பாதிப்புகள் .....................51*

4. அபிவிருத்தி உந்துதல் மற்றும் அதன் தாக்கங்கள் ....................................................62

*கொழும்பு துறைமுக நகர செயல்திட்டம் .........................................................................62*

*அபிவிருத்தி தொடர்பான ஏனைய முன்னெடுப்புகள் மற்றும் கரிசனைகள் ....................66*

*அதிகாரப் பகிர்வு, நல்லிணக்கம் மீதான பாதிப்பு மற்றும் பூகோள அரசியலுடனான தாக்கங்கள் .......................................................................................................................68*

*தீவிரமடையும் சமத்துவமின்மைகள் ...............................................................................70*

முடிவுரை .......................................................................................................................73

## அறிமுகம்

இலங்கை தற்போது முன்னொருபோதுமில்லாத சவால்களை எதிர்கொள்கிறது. இலங்கையில் கொவிட்-19 நெருக்கடிகள், உலகம் முழுவதிலும் வியாபித்துப் போயுள்ள உடனடிப் பொதுச் சுகாதாரம் மற்றும் பொருளாதாரச் சவால்களினால் மாத்திரம் தன்மைப்படுத்தப்படவில்லை. பெருந்தொற்றின் ஒரு பின்னணியில் வெளிப்படையாக்கப்பட்ட உள்ளார்ந்திருக்கும் ஓர் எண்ணற்ற பிரச்சினைகளையும் அது முன்னிலைக்கு கொண்டு வந்தது. ஆட்சிமுறைமையிலான பலவீனம், இலங்கையில் அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகத்தை பாதிப்பதற்கு அச்சுறுத்துகின்ற செயன்முறைகள் மற்றும் சமுதாயத்தினுள் உள்ள கட்டமைப்புச் சமத்துவமின்மைகள் ஆகிய ஒவ்வொன்றும் இந்தக் காலத்தின் போது வெளித் தெரிவிக்கப்பட்டன.

யுத்தம் முடிவுற்றதிலிருந்து இலங்கை இப்பொழுது 12 வருடங்களைக் கண்டுள்ளது, இருப்பினும் இன ரீதியான பதட்டங்கள், இராணுவமயமாக்கல் மற்றும் சர்வாதிகார ஆட்சிமுறைமை என்பன இலங்கையின் அரசியல் தளத்தில் இன்னமும் இருக்கின்றதை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம். ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் சீர்குலைதலை மேலும் சட்டபூர்வமாக்கும் மற்றும் துரிதப்படுத்தும் நிலைமைகளை இப்பெருந்தொற்று உருவாக்கிய, அதேவேளை நாட்டின் அரசியல் பாதையில் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தும் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் மீதும் அது வெளிச்சத்தைக் காட்டுகிறது.

நிர்வாகச் செயற்றிறனை அதிகரிக்கின்றதும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துகின்றதுமான வழியை உருவாக்கி, ஒரு கூடுதல் 'ஒழுக்கத்துடனான' நேரடி நடைமுறைத்தன்மை கொண்ட ஆட்சிமுறைமை நோக்கியதான ஒரு நகர்வை வாக்குறுதியளித்து வாக்காளர்களிடமிருந்து பெருவாரியான ஆதரவினை தற்போதைய அரசாங்கம் அனுபவித்தது.

அதிகரித்த வினைத்திறன் மற்றும் அபிவிருத்திக்கான வாக்குறுதிகள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச பதவியை ஏற்றதிலிருந்து அதிகரித்த சர்வாதிகாரத்துடன் பிணைக் கப்பட்டிருப்பதை நாங்கள் கண்டோம். நாட்டில் வினைத்திறன் மற்றும் அபிவிருத்தியைக் கொண்டுவருவதற்கு அதிகரித்த நிறைவேற்றதிகாரம் மற்றும் இராணுவமயமாக்கல் போன்ற செயன்முறைகள் சிறந்த பொறிமுறைகளாக உண்மையில், தேர்தலுக்கு முன்னதாகவே கட்டமைக்கப்பட்டன. புதிய அரசாங்கத்தின் அரசியலமைப்புத் திட்டம், நிறைவேற்றதி காரத்தின் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகளின் மட்டுப்படுத்தல்களிலிருந்து விடுபட்டதான ஓர் ஆட்சிமுறைமையை ஏற்படுத்தும், என வாதிடப்பட்டது. இந்தக் கட்டுப் பாடுகள் மற்றும் சமநிலைகள், அரசாங்கத்தினுள் நிச்சயமற்றதன்மையை மற்றும் வினைத் திறனின்மை என்பவற்றை உருவாக்கின, என வாதிடப்பட்டது. இதனை நடைமுறையில் வெளிக்காட்டுவதற்கான சிறந்தவொரு சந்தர்ப்பத்தினை இப்பெருந்தொற்று பிரதிநிதித்துவம் செய்தது. எனினும், கொவிட்-19 இன் பதிலிறுப்புகளைக் கையாள்வதிலான பல்வகைப் பின்னடைவுகள் இந்த வினைத்திறன் தொடர்பான விளக்கம் மீது கேள்விகளை எழுப்பியதுடன் உத்தேசிக்கப்பட்ட தொழில்நுட்பக் கோட்பாட்டு ரீதியான மற்றும் இராணுவமய ஆட்சிமுறைமை மாதிரியின் மட்டுப்பாடுகளையும் வெளிப்படுத்தியது. மேலும், இந்தப் பின்னணிச் சூழலினுள் அதிகார மையப்படுத்திய தலைமைத்துவம் பயனுறுதியற்றது என நிரூபிக்கப்பட்டு, முகாமைத்துவத் தவறுகள் மற்றும் ஓர் எண்ணற்ற கொள்கை முரண்நிலைகள் அரசாங்கத்தின் பிம்பம் மீது ஒரு குறிப்பிடத்தக்கதான பாதிப்பினை ஏற்படுத்தின.

பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னைய மற்றும் பின்னைய ஆகிய இரு சந்தர்ப்பங்களிலுமான இராணுவமயமாக்கல் அபிவிருத்திச் சேவையிலான வினைத்திறன் மற்றும் அவ்வாறே மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிறுவனமாக இராணுவத்தைக்

கருதும் ஒரு ஜனரஞ்சக எண்ணக்கரு ஆகிய இரண்டினாலும் உந்தப்பட்டது. எவ்வாறாயினும், அனைத்து மக்கள் தொகையினராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற கருத்துகளாக இவை இருக்கவில்லை என்பதுடன் அரசாங்கத்தில் இராணுவத்தின் அதிகரித்த ஈடுபாடு ஆட்சிமுறைமை தொடர்பான பிரச்சினைகள் மட்டுமன்றி, நல்லிணக்கம் மற்றும் கூடுதல் பரந்ததாக இனங்களுக்கிடையிலான உறவுகள் என்பவற்றிலும் கூட கணிசமான தாக்கங்களைக் கொண்டிருக்கலாம்.

ஏனைய அரசியல் அக்கறைகளைப் புறந்தள்ளி அபிவிருத்தி மீது செலுத்தும் கவனமானது, இந்தக் கவனக் குவிப்பால் நியாயப்படுத்தப்பட்டு மற்றும் தூய்மைப்படுத்தப்படும் ஜனநாயக விரோத செயன்முறைகளுக்கும் அப்பாற்பட்டு மேலும் தாக்கங்களைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு ஜனநாயக அக்கறைகளுக்கு மேலாக துறைமுக நகரச் செயற்றிட்டம் மற்றும் ஏனைய அவ்வாறான முயற்சிகள் போன்ற அபிவிருத்தி முன்னெடுப்புகளின் முன்னுரிமைப்படுத்துதல் நீண்ட காலத் தாக்கங்களைக் கொண்டிருக்கும். இந்தப் பெருந் தொற்றின் போது, பொருளாதாரம் செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கும் மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் தொலைநோக்கை நிதர்சனமாக்குவதற்கும் தேவையான பொருளாதார உற்பத்தியை உண்மையில் மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களால் முகங்கொடுக்கப்படும் கஷ்டங்கள் தொடர்பிலும் கூட இது காணப்படுகின்றதாகவுள்ளது.

சிறுபான்மையினர் உரிமைகள் மீது கணிசமான பின்விளைவுகளுடன், ராஜபக்சக்கள் அதிகாரத்திற்கு மீள்திரும்புவதில் ஒரு முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருந்த இன ரீதியான பெரும்பான்மைவாதக் கருத்தியலின் ஒரு பலம்பெறுதலையும் கூட நாங்கள் கண்டோம். நீண்ட கால அரசியலமைப்பு செயல்திட்டங்கள், பொதுக் கொள்கை உருவாக்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் இந்தக் கொள்கைகள் அமுல்படுத்தப்படும் விதங்கள் என்பவற்றில் செல்வாக்கு செலுத்துதல், என அரச நடவடிக்கைகள் மீதும் இந்தக் கருத்தியலின் செல்வாக்கு அனைத்து மட்டங்களிலும் காணப்பட்டது.

இந்த ஆய்வு, ஆட்சிமுறைமை, இராணுவமயமாக்கல், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகிய வில்லைகளூடாக இலங்கையால் முகங் கொடுக்கப்பட்ட பல்வேறு சவால்களையும் ஆராய்கிறது. ஒத்திசைவு மற்றும் கரிசனை என்பவையற்ற கொள்கையாக்கம், இன ரீதியான பெரும்பான்மைவாத அரசியல் கருத்தியல் மற்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறைமை ஆகியவை எவ்வாறு மோசமான விளைவுகளை ஏற்படுத்தின என அரசாங்கக் கொள்கை மீதான ஒரு விமர்சனத்தை இது வழங்கும்.

இந்த அரசாங்கம் ஆரம்பித்ததிலிருந்து, விசேடமாக தற்போது நாடு முகங் கொடுக்கும் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிப் பின்னணிச் சூழலில், சம்பந்தப்பட்ட விடயப் பரப்புகள் மீது ஒரு மாதிரி வகையான கண்ணோட்டத்தைத் தருவதற்கான ஒரு முயற்சியேன்றி ஒரு விரிவான ஆய்வு அல்ல என்பது இங்கு ஆரம்பத்திலேயே கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 1. ஆட்சிமுறைமை

### *தொழில்நுட்பக் கோட்பாட்டு ஆட்சிமுறைமைக்கான வாக்குறுதி*

ஒரு பல்வகையான விடயப் பரப்புகள் மீது பேசும் 'சுபிட்சத்தின் நோக்கு' எனும் கொள்கை ஆவணத்துடன் 2019 இல் ஆட்சிமுறைமையில் ஒரு வியத்தகு மாற்றத்திற்கு இலங்கையர்கள் வாக்குறுதியளிக்கப்பட்டனர். இந்த கருத்தியல்களை அடைவதற்கான வழிமுறையாக தொழில்நுட்பக் கோட்பாட்டு ரீதியுடனான இராணுவ வடிவ ஆட்சி முறைமையுடன், வினைத்திறன், சுபிட்சம் மற்றும் ஸ்திரத்தன்மை என்பன அதற்காக வாக்குறுதியளிக்கப்பட்ட சில இலட்சிய ரீதியிலான அளவுகோல் குறிகளாக அமைந்தன. 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னெடுப்பு, இந்த மாற்றத்தில் வழிகாட்டியாக உதவுவதற்கு கருதப்படும் முகவர்களாக பணிக்கப்பட்ட தொழில்சார் தகைமையாளர்கள் மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கிய 'வியத்கம' மற்றும் 'எலிய' போன்ற அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் உருவாகுதலையும் கண்டது. 2019 இல் பயங்கரவாதிகளின் ஒரு தாக்குதல் மற்றும் குழப்பமானதும் ஊழல் மிக்கதுமான ஆட்சிமுறைமையைக் கண்ட கூட்டணி அரசாங்கத்தின் ஒரு சில வருட மோசமான ஆட்சியின் பின், தேவையான ஒன்றாக காண்பிக்கப்பட்ட தொழில்நுட்பக் கோட்பாட்டு இராணுவ ஆட்சிமுறைமை மாதிரியினால் நன்கு ஆதரவளிக்கப்படும் ஒரு இராணுவப் பின்புலத்துடன் கூடியதான ஓர் உறுதியான தலைவரின் பிம்பம் முன்னிறுத்தப்பட்டது. பாரம்பரிய அரசியலிருந்து ஒரு முற்றிலுமான மாற்றம் நவெம்பர் 2019 இல் அவசியமானதாக பிரேரிக்கப்பட்டது.[1]

ஒரு முறைமை மாற்றத்திற்கான எதிர்பார்ப்பு உயர்வாக இருந்தது. முக்கியமான நிறுவனங்களுக்கு தொழில்சார் தகைமையாளர்கள் மற்றும் முன்னாள் மற்றும் சேவையிலிருக்கின்ற இராணுவ அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு பல்வேறு நியமனங்களை கோட்டபாய ராஜபக்ச அரசாங்கத்தின் ஆரம்ப நாட்கள் கண்டது. ஒழுக்கம், வினைத்திறன் மற்றும் தேவையான பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் அதிகரித்த இராணுவமய ஆட்சிமுறைமை மாதிரி ஆதரிக்கப்பட்டது.

இலங்கையில் பெருந்தொற்றின் முதலாவது அலை 2020 இன் ஆரம்பத்தில் தாக்கியதுடன் அது அதிகரித்த சர்வாதிகார மற்றும் இராணுமய ஆட்சிமுறைமைக்கு கதவுகளைத் திறந்து விட்டது. அளவுமீறிய நிறைவேற்றதிகாரம், சட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த இராணுவமயமாக்கல் என்பன ஒரு பெருந்தொற்றை எதிர்த்துப் போரிடல் என்ற அடிப்படையில் ஆதரவளிக்கப்பட்டது.[2] கீழ்வரும் பெருந்தொற்று தொடர்பான பிரிவு சுட்டிக்காட்டுமாற் போல, இந்தக் கால கட்டத்தில் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் அவற்றின் சட்டபூர்வத் தன்மை, அளவுவிகிதம் மற்றும் அவசியம் தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்பின. ஐந்து மாதங்களிற்கும் மேலாக செயற்படாத பாராளுமன்றம் மற்றும் அதிகாரம் மிக்க செயலணி சக்திகள் மீது அதிகரித்தளவில் தங்கியிருத்தல் என்பவற்றுடன் நிறைவேற்றதிகாரக் கட்டளையால் விடுக்கப்பட்ட விதிமுறையின் சிக்கலான அம்சமும் அங்கே இருந்தது.[3] பெருந்தொற்று தீர்க்கமான மற்றும் வலுவான அரசியல் தலைமைத்துவத்தைத் தேவைப்படுத்துகிறது எனும் நிலமையை உருவாக்கியும், மற்றும் உபயோகத்திலுள்ள

---

[1]இ.பொ.பெ இன் விஞ்ஞாபனம் - https://gota.lk/sri-lanka-podujana-peramuna-manifesto-english.pdf

[2]ப.பொன்சேகா, லு.கணேசநாதன் மற்றும் அ.வெலிக்கல 2021, இலங்கை: ஜனநாயகச் சீர்குலைவை பெருந்தொற்று ஊக்குவித்தது (Sri Lanka: Pandemic-Catalyzed Democratic Backsliding). வி.வி.ராமராஜ், ஆசிரியர்,2021. *ஆசியாவில் கொவிட்-19: சட்டம் மற்றும் கொள்கைப் பின்னணிகள்* (*Covid-19 in Asia: Law and Policy Contexts*) ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பதிப்பகம். பக்கங்கள் 349 – 364

[3]கொவிட்-19 பின்னணிச் சூழலில் உருவாகும் சட்டச் சிக்கல்கள் (2020) (Evolving Legal Issues in the Context of COVID-19 (2020). முன்குறிப்பிட்ட மூலம்; https://www.cpalanka.org/brief-guide-i-evolving-legal-issues-in-the-context-of-covid-19/

முறைமை சிக்கலானது என்பதால், ஜனநாயகச் செயன்முறைகள் எதனையும் கவனத்தில் கொள்ளாமல் நிறைவேற்று விதிமுறைகளை நாடுவதற்கான ஒரு தன்மைக்கு, முதலாவது அலை வெளிப்படுத்தியது. 2020 இல் பெருந்தொற்றின் முதலாவது அலையின் போது எண்ணிக்கைகளைக் கட்டுப்படுத்துவதிலான அரசாங்கத்தின் இயலுமை ஒரு தொழில்நுட்பக் கோட்பாடு மற்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறைமை மாதிரியின் உபயோகத்தை நியாயப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றதிகாரத்திற்கு மேலும் அதிகாரங்களைச் சேர்ப்பதற்கான அதிகரித்த கோரிக்கைகள் என்பவற்றை வலுப்படுத்தியது.

முதலாவது அலையை வெற்றிகரமாகக் கையாண்டதின் புகழ் மற்றும் 'சுபிட்சத்தின் நோக்கு' குறித்தான வாக்குறுதி என்பன ஆகஸ்ட் 2020 பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கம் ஒரு பாரிய வெற்றி பெற வைத்து, கணிசமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அவசியமான பெரும்பான்மையையும் வழங்கின. 20ஆவது திருத்தச் சட்டமூலம், தேர்தலின் பின் சில வாரங்களினுள்ளேயே அறிமுகப் படுத்தப்பட்டதுடன், அது 2015-2018 இல்களில் பயன்படுத்தப்பட்ட ஜனநாயகம் சார்ந்த சீர்திருத்தங்களைத் திரும்பப் பெற்றதுடன் அதனுடன் இணைத்து மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் சமனிலைகளுடன் அனைத்து அதிகாரம் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உருவாக்கியது.[4] கீழே ஆராயப்பட்டுள்ள, திருத்தத்தின் இந்த சட்டமன்ற வெற்றி, அரசாங்கத்தினுள் உள்ளகரீதியான விரிசல்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவுத் தளங்கள் சிலவற்றின் அதிருப்திப் பிரிவுகள் என்பவற்றுக்கான ஆரம்ப சமிக்கைகளை மட்டுமன்றி பாராளுமன்றத்தில் பலவீனமான எதிர்த்தரப்பு குறித்தும் கோடிட்டுக் காட்டியது.

முதலாவது அலையைக் கையாண்டமை, ஆகஸ்ட் 2020 இலான தேர்தல் வெற்றி மற்றும் 20 ஆவது திருத்தத்திற்கான வழி என்பவற்றின் வெற்றி, ஆட்சிமுறைமையில் ஒரு மட்டுமீறிய நம்பிக்கைக்கு பங்களித்ததுடன், அது இரண்டாவது அலையைக் கையாள்வதில் ஓர் அச்சுறுத்தும் சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளோடு கவலையளிக்கும் குறிக்காட்டிகளுடன் கூடியதான ஒரு பேரவலமான திருப்பத்தைக் கண்டது. தவறான முகாமைத்துவத்தின் பல்வேறு சம்பவங்கள் மற்றும் தொடர்ந்து வந்த மாதங்களிலான தோல்விகள், ஊழல்களின் அறிக்கைகள் மற்றும் ஆட்சிமுறைமையின் பல பரப்புகளிலான ஒட்டுமொத்தத் திறனின்மை என்பன தோல்வியுறும் தொழில்நுட்பக் கோட்பாட்டு இராணுவமய ஆட்சிமுறைமை மாதிரியை வெளிக்காட்டின. நிலைமைகள் அதிகரித்தளவில் இருண்டதாகத் தென்படுகையில், உடனடி எதிர்காலம் சொல்லமுடியாத சவால்களை இலங்கைக்கும் அதன் பலவீனமான ஜனநாயகத்திற்கும் கொண்டு வரும்.

### *ஓர் உறுதியான ஆட்சியாளர் பிம்பத்தை உருவாக்குதல் மற்றும் மாற்றத்திற்கான வாக்குறுதிகள்*

ஜனாதிபதியின் ஆரம்ப கால மாதங்களின் போது, வழக்கமான அரசியல்வாதிகளுடன் அதிகம் தொடர்புபட்ட நிலைமையிலிருந்து விலகிய ஓர் உறுதியான வினைத்திறனான ஆட்சியாளர் என்ற பிம்பம் கவனமாக செதுக்கப்பட்டது. வினைத்திறனை முன்னுரிமைப் படுத்திய ஒரு தலைவராக, பணிகள் தொடர்பில் நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்கு அரசாங்க அலுவலகங்களுக்கு ஜனாதிபதி விஜயம் செய்யும் படங்கள் மக்களுக்கு காண்பிக்கப்பட்டன. காண்பிக்கப்பட்ட பிம்பம் ஒரு தொழில்நுட்பக் கோட்பாட்டு அரசாங்கம் மற்றும் மக்களின் குறைகளைக் கவனிப்பதில் முன்னுரிமை கொண்ட ஒரு தலைவர் என்பதாகும். தேவையற்ற விதிமுறைகளைக் குறைக்கும், ஊழல் குற்றச்சாட்டுகளைக் கவனமெடுக்கும் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கைகளைக் கவர்வதற்கான முறைமைகளை இடுவதை

[4] டினேஷா சமரட்ன, இலங்கையின் அரசியல் பந்தாட்டம் (Sri Lanka's Constitutional Ping Pong), ஹிமல் சஞ்சிகை, 25 செப்டெம்பர் 2020; அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கான ஒரு வழிகாட்டல் சுருக்கம், மா.கொ.நி, ஜூன் 2021.

உறுதிப்படுத்தும் ஒரு அரசாங்கம் பற்றிய கருத்தே 2019 இல் கோட்டாபாய ராஜபக்சவின் வேட்புமனுவிற்கு ஆதரவாக பல வாக்காளர்களையும் கவர்ந்த முக்கியமான அம்சங்களில் (மற்றையது பாதுகாப்பு பற்றியதாக இருந்தது) ஒன்றாக இருந்தது. இப்பிம்பம், 'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலங்கள் உட்பட முன்னைய அரசாங்களின் ஆட்சிமுறைமையில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் பல்வேறு தடைக்கற்களுக்கு ஒரு வரவேற்கப்படும் மாற்றமாக இருந்ததுடன் ஈற்றில் மக்களின் குறைகளுக்கு செவி சாய்க்கும் ஒரு அரசாங்கத்தின் பால் பலரும் ஈர்க்கப்பட்டனர்.

முதலாவது அலையைச் சமாளித்தமை, நடைமுறைகள் மற்றும் சட்டங்களின் சிக்கலான விபரங்களில் ஜனாதிபதி சிக்கிக் கொள்ளாததையும் காண்பித்தது. பாராளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதின் பின்னதாக முதலாவது அலை ஏற்பட்டது.[5] பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மற்றும் ஒரு பெருந்தொற்றின் போது தேர்தல்களை நடத்துவதின் ஏற்றுக்கொள்ள முடியாமையை தேர்தல் ஆணைக்குழுவின் சுட்டிக்காட்டலுடன், இலங்கை ஓர் அரசியலமைப்பு ரீதியான நெருக்கடிக்குள் தத்தளித்தது. ஓர் அவசரகால நிலைமையின் போது பாராளுமன்றத்தை மீளக்கூட்டுவதற்கு அரசியலமைப்பில் ஏற்பாடுகள் இருந்தபோதிலும், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியை வலியுறுத்தி அரசியல் கட்சிகளிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் கூட, ஐந்து மாதங்களிற்கும் மேலாக பாராளுமன்றம் செயற்படாத நிலையில் ஜனாதிபதி நிறைவேற்றுக் கட்டளை மூலம் நாட்டை ஆளுவதற்கு தீர்மானித்தார்.[6] இலங்கையின் அரசியலமைப்பு ஜனநாயகத்தின் மீது கடுமையான பாதிப்புகள் இருந்த போதிலும், இறுதியில் 2020 ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் நடக்கும் வரை பாராளுமன்ற மேற்பார்வையின்றி நிறைவேற்றதிகாரம் நாட்டைத் தொடர்ந்து ஆண்டது.

வழமைகள் அல்லது நடைமுறைகளால் தடுக்கப்பட முடியாததும் மற்றும் காரியங்கள் மேற்கொள்ளப்படுவதை முன்னுரிமைப்படுத்தும் ஒரு நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக காண்பிக்கப்பட்டதுடன், அவ்வாறு காண்பிக்கையிலும் கூட 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தின் தேவை குறித்தான சந்தேகங்களும் எழுப்பப்பட்டன.[7] முதலாவது அலையைச் சமாளித்ததிலான வெற்றி மற்றும் பெருந்தொற்றை தோற்கடித்து விட்டதாக மக்களுக்கு அளிக்கப்பட்ட போலிப் பாதுகாப்பு என்பவை விசுவாசம் கொண்ட தொழில்சார் தகைமையாளர்கள் மற்றும் இராணுவக் குழுவொன்றினால் நன்கு ஆதரவளிக்கப்பட்ட ஓர் அதிதிறனான ஜனாதிபதித்துவ மாதிரிக்கான ஓர் ஆதரவை மேலும் உருவாக்கின.

[5] தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி), "பொதுத் தேர்தல் 2020 ஐ பிற்போடுவதற்கு தே.வ.க.நி கோருகிறது", 17 மார்ச் 2020; https://cmev.org/2020/03/17/cmev-calls-for-postponement-of-general-election-2020/

[6] அர்ஜுன ரணவன, "தேர்தல் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கும் அப்பாற் செல்வதால் அரசியலமைப்பு நெருக்கடி உருவாகிறது", ("Constitutional Crisis looms as poll date goes beyond three months of dissolution") 23 ஏப்பிரல் 2020, எக்னோமி நெக்ஸ்ட்; https://economynext.com/constitutional-crisis-looms-as-poll-date-goes-beyond-three-months-of-dissolution-67839/#modal-one; அசங்க வெலிக்கல மற்றும் சுரேன் பெர்ணான்டோ, "சட்டம் மற்றும் சுதந்திரத்துடன் வினைத்திறனை சமனிலைப்படுத்தல்; ஜனநாயகம் சீர்குலையாது பெருந்தொற்றைக் கையாளுதல்" ("Balancing efficiency with law and liberty: Dealing with the pandemic without democratic backsliding"), 8 ஏப்பிரல் 2020, த டெய்லி எப்டி (The Daily FT); https://www.ft.lk/opinion/Balancing-efficiency-with-law-and-liberty-Dealing-with-the-pandemic-without-democratic-backsliding/14-698609

[7] "இலங்கை ஒரு குடும்ப அரசாக வருகின்றது" ("Sri Lanka is becoming a one-family state") , 16 ஆகஸ்ட் 2020, த எக்னோமிஸ்ட்;https://www.economist.com/asia/2020/08/13/sri-lanka-is-becoming-a-one-family-state;அசங்க வெலிக்கல, "இலங்கையின் ஏகாதிபத்திய ஜனாதிபதி முறைமைக்கு திரும்புதல்: அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம்" ("The Return of Sri Lanka's Imperial Presidency: The Twentieth Amendment to the Constitution Bill") 8 செப்டெம்பர் 2020, constitutionnet;https://constitutionnet.org/news/return-sri-lankas-imperial-presidency-twentieth-amendment-constitution-bill

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற்றும் அதன் பின்னான வன்முறைகள் மற்றும் 'பினைமுறி மோசடி' போன்ற ஊழல்களுக்கு இட்டுச் சென்றவற்றைத் தடுப்பதிலான தோல்விகள் உட்பட, நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அனுபவித்த பல்வேறு அனர்த்தங்களுக்கு எதிரான ஒரு பின்னணியில், பலர் மத்தியிலும் காணப்பட்ட ஒரு பெரும் விருப்பமே ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கானதாகும். ஒரு வலுவான நிறைவேற்றதிகாரத்துடனான தொழில்நுட்பக் கோட்பாட்டு ஆட்சிமுறைமையின் மாதிரி இந்த அச்சங்களைப் போக்குவதற்கு அர்த்தம் கொள்ளப்பட்டது. இராணுவத்தாலான ஒரு வலுவான வகிபாகத்துடன் நிறைவேற்று அதிகாரத்தால் முதலாவது அலை வெற்றிகரமாக சமாளிக்கப்பட்டதின் யதார்த்தம், குழப்பங்கள் மற்றும் செலவுகளுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றம் மற்றும் ஜனநாயக நடைமுறையின் ஏனைய அம்சங்கள் தேவையானவையா என்ற கேள்வியை எழ வைத்தது.

பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களுள் 145 இனை இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சி பெறும் ஒரு பாரிய வெற்றியை முதலாவது அலையைக் கட்டுப்படுத்துவதிலான வெற்றி கண்டது. அரசாங்கத்தின் இலட்சிய சீர்திருத்தங்களை வழங்குவதற்கு இயலும் வகையில் ஒரு பாரிய வெற்றிக்காக அரசாங்கத்திலுள்ள பலரும் கேட்பதை பிரச்சாரக் காலம் கண்டது. இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சியின் முக்கிய வடிவமைப்பாளரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ச பின்வருவதை மேற்கோள் காட்டினார்[8] - *''ஆனால் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் அரசாங்கம் மற்றும் இலங்கை பொதுஜனப் பெரமுனைக் கட்சியிலிருந்தான மக்களின் எதிர்பார்ப்புகளே முக்கியமான விடயமாகும். ஓர் அரசாங்கம் அமைக்கப்படும் போது, மக்கள் பல விடயங்களை எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு, எங்களுக்கு ஒரு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. மக்களிடமிருந்து ஒரு தெளிவான ஆணையை நாங்கள் கொண்டிருக்கும் போது இது இலகுவானதாக அமையும். ஒரு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எங்களுக்கு தருவது மக்களைப் பொறுத்தது, ஆனால் அவர்கள் அதனை எங்களுக்கு அளிப்பார்களாயின் ஜனாதிபதி மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வார் என நான் உத்தரவாதம் அளிக்க முடியும்''.*

கூட்டணிகளின் ஆதரவுடன், அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டிற்கு அண்மித்த ஒரு எண்ணிக்கைக்கு ஆதரவளிக்கப்பட்டதுடன் அது அரசியலமைப்பிற்கு 20 ஆவது திருத்தம் சட்டமாக்கப்படுவதற்கான வழியை வகுத்தது. பெரும் தேர்தல் வெற்றியின் வெற்றி மமதை இரண்டாவது அலையையும் அதன் பின்னதாக மூன்றாவது அலையைக் ஏற்படுத்திய பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஓர் இயலாமை மற்றும் 2019 மற்றும் 2020 இல் மேற்கொண்ட வாக்குறுதிகளின் நிறைவேற்றுவதிலான தோல்விகள் என்பவற்றின் அதிகரிக்கும் சமிக்கைகள் உட்பட, பல்வேறு தவறுதல்களை ஏற்படுத்தியது.

### *ஜனநாயகத்தின் சீர்குலைதல் மற்றும் அதிகாரத்தை அரசு கைப்பற்றுதல்*

2020 தேர்தல்களில் சிறந்த பெரும்பான்மையைப் பெற்றதைத் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்ட ஆரம்ப நடவடிக்கைகளிலொன்று, அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தமாகும். தேர்தலுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட கூற்றுகளைக் கருதுகையில் இத் திருத்தம் நகர்த்தப்பட்ட வேகம் ஆச்சரியம் தருவதற்குரிய ஒன்றாக இருக்கவில்லை.[9] ஜனாதிபதியின்

[8] உதித்த ஜயசூரிய, ஒரு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எங்களுக்கு அளிப்பது மக்களைப் பொறுத்தது – பசில் ("Upto the People to give us a two-thirds majority-Basil") 29 ஜூலை 2020, த டெய்லி எப்டி (The Daily FT);https://www.ft.lk/opinion/Up-to-the-people-to-give-us-a-two-thirdsmajority-Basil/14-703809, 29 July 2020

[9] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) 2020., ''இருபதாவது திருத்தம் தொடர்பான அறிக்கை'' ("Statement on the Twentieth Amendment"), 4 செப்டெம்பர் 2020. https://www.cpalanka.org/statement-on-the-twentieth-amendment-2/ எனும் இணைய முகவரியில் கிடைக்கப் பெறும்.

நிறைவேற்றதிகாரத்தை வலுப்படுத்துதல், சட்டச் சவால்களிலிருந்து தண்டனை விடுபாட்டு உரிமையை வழங்குதல், பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையின் வகிபாகத்தைப் பலவீனப்படுத்தி ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துதல், பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் கொண்டதான ஒரு பாராளுமன்றப் பேரவையினால் அரசியலமைப்பு பேரவையை பிரதியீடு செய்தல், சுயாதீன நிறுவனங்களை பலவீனப்படுத்துதல், அவசர சட்டமூலங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் சட்ட வரைவாக்கத்துடன் பிரஜைகள் சம்பந்தப்படுவதற்கான நேரத்தைக் குறைத்தல் என்பவை ஏனையவற்றிடையே பிரேரிக்கப்பட்டதை 20ஆவது திருத்தம் கண்டது.[10] அண்மையில், 2018 இல் இலங்கையின் அரசியலமைப்பு நெருக்கடியின் போது அனுபவித்தது போன்று, இரண்டு அதிகார மையங்களின் உருவாகுதலைத் தடுப்பதற்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இயலும் வகையில் பரந்த அதிகாரங்கள் தேவையான ஒரு வலுவான ஆட்சியாளர் அவசியம் தேவை என்பதன் அடிப்படையிலும் இந்தப் பிரேரனைகள் நியாயப்படுத்தப்பட்டன.

முதலாவது அலையின் பின், அரசாங்கத்தின் தேர்தல் வெற்றி மற்றும் புகழ் என்பவற்றின் மத்தியிலும், 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கான பதிலிறுப்பு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. நிறைவேற்றப்படுவதற்கு முன்னான சட்டமூலம் அமைச்சரவைக்குள்ளேயே சில பகுதியினரிடமிருந்தும் மற்றும் பௌத்த குருமார் உட்பட, அரசாங்கக் குழு மற்றும் அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளர்களிடமிருந்து எதிர்ப்பினைக் கண்டது. அரசியல் ரீதியான பின்னோக்கிய தள்ளலுடன் இணைந்ததாக உயர் நீதிமன்றத்தில் சட்டமூலத்தை பலரும் சவாலுக்கு உட்படுத்தியமை, பாராளுமன்றத்தில் குழு நிலையில் அரசாங்கம் பல்வேறு திருத்தங்களை சட்டமூலத்திற்கு அவசரமாகக் கொண்டு வருவதை ஏற்படுத்தியது.[11] சட்டமூலத்திற்கான எதிர்ப்பு அரசாங்கத்திற்குள் ஏற்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இருந்ததுடன் அரசாங்கத்தினுள்ளும் மற்றும் அவர்களின் விசுவாசமான சில ஆதரவாளர்களினுள்ளேயும் விரிசல்கள் இருப்பதை பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியது.

இந்த எதிர்ப்பு இருந்த போதிலும், அதன் சொந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேலதிகமாக ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியிலிருந்து 8 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு அரசாங்கம் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு இயலுமாக இருந்தது. அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் சட்டவாக்கம் அரசாங்கத்திற்கு முதலாவது முக்கியமான சட்டப் பரிசோதனை என்பதுடன் அது எதிர்பார்க்கப்படாத சில தடைகளை வெளிப்படுத்தியது. எனினும், பல்வேறு பகுதியிலிருந்து எதிர்ப்புகள் இருந்த போதிலும் சட்டவாக்கத்தின் முக்கியமான பாகங்களை முன்னகர்த்துவதற்கான அரசாங்கத்தின் இயலுமையை இச்சட்டவாக்கம் எடுத்துக் காட்டியது. இது எதிர் கடசித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும் முதலாவது சோதனையாக அமைந்ததுடன் அவரது சொந்தத் தரப்பிலிருந்த பலரும் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததையும் கூட அது கண்டது.

20ம் திருத்தத்தின் தாக்கம் முக்கியமானது. அது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மட்டுப்படுத்தப்பட்ட தடைகளுடன் கூடிய அனைத்து அதிகாரம் கொண்ட ஒரு பதவியாக மாற்றியது. உதாரணத்திற்கு, மேனிலை நீதிமன்றங்கள் போன்ற சுயாதீன நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் பதவிகளுக்கு பாராளுமன்றப் பேரவை வெறுமனே பெயர்களை மட்டும் அனுமதிப்பதுடன் தற்போது அவர்கள் ஜனாதிபதியாலேயே நியமிக்கப்படுகின்றனர், இவ்வாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் விசுவாசிகளே முக்கியமான பதவிகள் வகிப்பது உறுதிப்படுத்தப்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்கள் காண்பித்தது மாதிரி, நிறைவேற்றதிகாரத்தின் மிகை பிரயோகத்தைத் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட சுயாதீன நிறுவனங்கள் எதேச்சாதிகாரமான நடவடிக்கைகள் தொடர்பில்

[10] அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்திற்கான ஒரு சுருக்க வழிகாட்டி, மா.கொ.நி ஜூன் 2021
[11] அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்திற்கான ஒரு சுருக்க வழிகாட்டி, மா.கொ.நி ஜூன் 2021

ஒத்திணங்காதிருப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டு அண்மைய வருடங்களில் கணிசமானளவு பலவீனப்பட்டிருந்தன. தனது நோக்கைப் பூர்த்தி செய்கையில் எதிர்ப்பு எதிர்பார்க்கப்படவில்லை என அவர் தெளிவுபடுத்தும் போது, *''எனது இந்தப் பற்றுறுதியின் நடைமுறைப்படுத்துதலில் குறுக்கிடுவதற்கு அரச அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நீதித்துறையையோ எதிர்நோக்கவில்லை''*[12], என ஜனாதிபதியால் குறிப்பிடப் பட்டவாறு முக்கியமான பதவிகளை வகிப்பவர்களிடையில் கூட மாற்றுக் கண்ணோட்டங்களுக்கு அங்கே இடமில்லாதிருந்தது. அவ்வாறான கூற்றுகள், தங்களிற்கு எதிர்க் குரல்களை எழுப்புவோர் என அவர்களின் நடவடிக்கைக்காக அவர்கள் எச்சரிக்கப்படுவதையோ அல்லது ஓரங்கட்டப்படுவதையோ விளைவித்தது.

முக்கியமான நிறுவனங்கள் மற்றும் பதவிகளுக்கு ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் மற்றும் விசுவாசிகள் நியமிக்கப்படுவது இதற்கு பலம் சேர்த்து அதிகாரத்தை அரசு உறுதியாகக் கைப்பற்றிக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்கிறதுடன் ஜனநாயக செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களை அது குறைமதிப்பிடுகிறது.[13] 2020 இலான மற்றொரு முக்கியமான நிகழ்வு, பல்வேறு செயலணிகளின் நியமித்தலாகும், இது ஆரம்பத்தில் பெருந் தொற்றுக்கான ஒரு பதிலிறுப்பாகவும் ஆனால் பின்னர் ஒழுக்கத்தைப் பேணவும் அவ்வாறே மற்றொன்று கிழக்கு மாகாணத்தில் தொல்பொருளாராய்ச்சி தொடர்பானது போன்ற ஏனைய விடயங்களுக்கும் என பரந்துபட்டது.[14] இந்த சில செயலணிகளின் சட்டபூர்வ தன்மை மற்றும் அவற்றின் ஆணை இருக்கும் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுகள் மற்றும் சிவில் நிர்வாகங்களிற்குள் அத்துமீறவில்லையா என்பது குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன. மேலும், இந்த செயலணிகள் சிலவற்றின் கட்டமைப்பு கரிசனைகளை எழுப்பின. அவற்றுள் பல, முன்னாள் மற்றும் சேவையிலுள்ள இராணுவ அதிகாரிகள் தலைமையைக் கொண்டிருந்தன அல்லது செயலணிக்குள் அவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர், முக்கியமாக, மாகாணத்தில் பெரும்பான்மையானவர்களாக தமிழ் மற்றும் முஸ்லிம்களைக் கொண்டிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்திற்காக நியமிக்கப்பட்ட செயலணி முற்றிலுமாக சிங்களவர்களைக் கொண்டிருந்தது.[15]

ஆட்சிமுறையில் அதிகரித்தளவில் இராணுவமயப்படுத்தும் தன்மை கணிசமான தாக்கங்களைக் கொண்டிருந்தது (இந்த அறிக்கையில் பின்னர் விபரமாகக் கலந்தாரயப்பட்டுள்ளது). பெருந்தொற்றுப் பதிலிறுப்பு உட்பட அரசாங்கத்திலுள்ள முக்கியமான பல பதவிகள் தற்போது ஓர் இராணுவப் பின்னணி கொண்ட ஆட்களால் வகிக்கப்படுகிறது,

---

[12] லஹிரு பொத்முல்ல, ''மக்களுக்கான கடமைகளைப் பூர்த்தி செய்யும் போது சட்டமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையிடமிருந்து குறுக்கீடுகளை நான் எதிர்பார்க்கவில்லை'' ("I don't expect interference from legislators, judiciary when fulfilling duties to people") 4 பெப்ரெவரி 2020, டெய்லி எப்டி (Daily FT); http://www.dailymirror.lk/breaking_news/Dont-expect-interference-from-legislators-judiciary-when-fulfilling-duties-to-people-Prez/108-182475

[13] வாக்குரிமை மற்றும் இறையாண்மைக்கு கணிசமான தாக்கங்களுடன், மிக அண்மையில், பசில் ராஜபக்ச தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார் - https://www.cpalanka.org/cpa-statement-on-the-constitutionality-of-the-slpp-national-list-appointment/; இலங்கை டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், ''ஒரு போதும் இடம்பெற்றிராத சீனி மோசடிக் குற்றச்சாட்டைத் மீள் நோக்குதல் ("Transparency International Sri Lanka, "A Look Back At The Alleged Sugar Scam That Never Took Place") 1 மே 2021; https://www.tisrilanka.org/a-look-back-at-the-alleged-sugar-scam/

[14] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), 2020. *இலங்கையில் கொவிட்-19 உடன் கையாள்வதற்கான கட்டமைப்புகள்: ஜனாதிபதி செயலணி தொடர்பான ஒரு சுருக்க குறிப்பு (Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force).* [தொடரலை] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். < https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/ எனும் இணையதள முகவரியில் கிடைக்கப் பெறும்.

[15] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), 2020. *இரு ஜனாதிபதி செயலணிகளின் நியமனம் (The Appointment of the Two Presidential Task Forces)* <https://www.cpalanka.org/the-appointment-of-the-two-presidential-task-forces/, எனும் இணையதள முகவரியில் கிடைக்கப் பெறும்.

இதன் மூலம் விடயதான நிபுணர்கள் மற்றும் அனுபவம் கொண்ட சிவில் நிர்வாகிகள் குறைமதிப்பிடப்பவும், ஓரங்கட்டப்பட்டப்படவும் வைக்கப்பட்டனர். பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் மற்றும் ஏனைய விடயத்துறைகளிலான முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு ஒரு கடும்போக்கு சிங்கள தேசியவாதக் கருத்தியல் கொண்டவர்களாக அடையாளம் காணப்பட்ட ஆட்கள் பலருக்கும் கூட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஒரு தொழில்சார் இராணுவத்தை அதிகரித்தளவில் அரசியல் ஆதரவு கொண்டதாகவும் அது மாற்றியது. அரசியல் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பு ராஜபக்சக்களால் வழங்கப்பட்டு இராணுவம், இலங்கையில் ஓர் அனைத்து சக்திமிக்க மற்றும் பிரபல்யம் கொண்ட நிறுவனமாக மாறியது. அண்மைய மாதங்களில் அவர்களின் அதிகார ருசியை கருதுகையில், இராணுவம் தனியே ஒரு தொழில்முறை ரீதியான போரிடும் சக்தியாக மீண்டும் மாற்றுவது ஏறத்தாழ அசாத்தியமானதா என்ற அச்சம் அதிகரிக்கிறது.

### *பெருந்தொற்றின் அதிகரிக்கும் செலவுகள்*

இலங்கையில் பெருந்தொற்று தொடர்பான பதில் நடவடிக்கையானது ‘பெருந்தொற்றின் மீதான போர்’ என்ற ரீதியில் கட்டமைக்கப்பட்ட பெருமளவில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஓர் அணுகுமுறையைக் கண்டது.[16] அது, சுகாதார மற்றும் ஏனைய தொழில்சார் தகைமையாளர்கள் அநேகம் ஓரங்கட்டப்பட்ட, புதிய கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட, சட்டபூர்வத்தன்மை, விகிதாசாரம் மற்றும் அத்தியாவசியம் தொடர்பான கேள்விகள் கொண்டதாக இருந்ததுடன் பல்வகையான மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட மற்றும் செய்முறைகள் மற்றும் நிதிகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றிய கேள்விகளும் அங்கே இருக்கக் காணப்பட்டன. கடுமையான சுகாதார மற்றும் பொருளாதாரப் பின்விளைவுகளுடன் தொழில்நுட்ப கோட்பாட்டு மற்றும் இராணுவ மயப்படுத்திய ஆட்சிமுறைமையை மேற்கொண்டபடி, அதில் தங்கியிருந்த ஜனாதிபதியின் தோல்விகளையும் கூட பெருந்தொற்று வெளிப்படுத்தியது.

**சட்டம் மற்றும் கொள்கை ஒத்திசைவின்மை -** 2020 இல் பெருந்தொற்றின் முதல் சில வாரங்கள் ஓர் ஒத்திசைவான கொள்கை மற்றும் பொதுத் தகவலளித்தல் கொண்டிருப்பதற்கு அரசாங்கத்தின் இயலாமையை வெளிப்படுத்தியதுடன், இதே போன்ற போக்கு இரண்டாவது மற்றும் மூன்றாம் அலைகளின் போதும் காணப்பட்டது. பெருந்தொற்றுக்கு பதிலிறுப்பதற்கு புதிய நடைமுறைகள் தேவை என அறியப்பட்ட வேளையில், பயணக் கட்டுப்பாடுகள் போன்ற அறிமுகப்படுத்தப்பட்ட சில நடவடிக்கைகளின் சட்டபூர்வத்தன்மை குறித்தான கரிசனங்கள் தொடர்ந்தன.[17] இதைப் போன்றே, அவசரகாலங்கள் மற்றும் அனர்த்தங்களுக்காக ஏற்பாடளிக்கும் இருப்பிலுள்ள சட்டங்கள் ஏன் உபயோகிக்கப்படவில்லை என்பது குறித்தான கரிசனைகள் தொடர்கையில், அந்தத் தீர்மானங்கள் ஒரு நிறைவேற்றுமுறையால் உந்தப்படும் அணுகுமுறைக்கும் மற்றும் சட்டபூர்வ மேற்பார்த்தலை தடுப்பதற்குமான அழுத்தத்தின் தேவையால் உந்தப்பட்டனவா என்ற கேள்வியை எழுப்புகிறது.

---

[16]ப.பொன்சேகா, லு.கணேசநாதன் மற்றும் அ.வெலிக்கல 2021, இலங்கை: ஜனநாயகச் சீர்குலைவை பெருந்தொற்று ஊக்குவித்தது (Sri Lanka: Pandemic-Catalyzed Democratic Backsliding).வி.வி.ராமராஜ், ஆசிரியர்.2021. *ஆசியாவில் கொவிட்-19: சட்டம் மற்றும் கொள்கைப் பின்னணிகள்* (*Covid-19 in Asia: Law and Policy Contexts)* ஒக்ஸ்போர்ட் பலகலைக் கழகப் பதிப்பகம். பக்கங்கள் 349 – 364

[17]சட்டப் பிரச்சினைகள் மற்றும் இந்த முன்னெடுப்புகளின் தற்காலிகத் தன்மைகளை வெளிப்படுத்தி, கட்டளைச்சட்டத்தின் படி ‘தனிமைப்படுத்தல்’ அல்லது ‘பயணக் கட்டுப்பாடுகள்’ மற்றும் ‘பொது முடக்கம்’ எனப் பின்னதான முயற்சிகளின் குறிப்பிடுதலுடன் இலங்கை ஓர் ‘ஊரடங்கைக்’ கொண்டிருந்ததா அல்லது இல்லையா என்ற குழப்பம் ஆரம்பத்தில் காணப்பட்டது. அவ்வாறே, ‘ஊரடங்கு’ மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளை விதிக்கும் முயற்சிகள் என்பவற்றின் மீறுதலின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் சட்டபூர்வதன்மை குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

பல சந்தர்ப்பங்களில் காணப்பட்டவாறு தீர்மானங்களைத் தெரிவிப்பதற்கு ஜனாதிபதி அலுவலகத்திலிருந்தான அறிக்கைகள் உபயோகிக்கப்படும் வேளையில் ஏனையவைகள் பொலிஸ் ஊடக அறிக்கைகளின் வெளியிடுதலைக் கண்டதினால் தீர்மானம் மேற் கொள்ளுதல் மற்றும் தீர்மானங்களைத் தொடர்பாடல் செய்வது யார் என்பது குறித்தும் குழப்பம் அங்கேயிருந்தது. மேலும், அரசாங்கம் காலம் கடந்த 1897 வருடத் திகதியிட்ட தனிமைப்படுத்தல் மற்றும் நோய்கள் தடுப்புக் கட்டளைச் சட்டம் மீது தங்கியிருந்தமை, மேலும் குழப்பத்திற்கு பங்களித்தது.[18]

**நடைமுறைச் சவால்கள் -** நாட் கூலியில் தங்கியிருப்போர்கள் மற்றும் முறைசார தொழில் துறை சார்ந்தவர்களை கடுமையாகப் பாதித்ததுடன், 'பொது முடக்கத்தின்' ஒரு சடுதியான தன்மை பலரும் சமூக-பொருளாதார சவால்களுக்கு முகங் கொடுத்ததையும் கருதியது. மிகவும் இடரேதுநிலையில் உள்ளவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு தெளிவான திட்டங்கள் இல்லாதிருந்த ஒரு நேரமும் அது தான்.

மேலும், முஸ்லிம் சமூகத்தின் மத நம்பிக்கைகள் மீதான ஒரு நேரடித் தாக்குதலும் எந்தவொரு விஞ்ஞானபூர்வ அடிப்படையும் இல்லாது, கட்டாய தகனக் கொள்கை (அறிக்கையில் பின்னர் விவாதிக்கப்படும்), போன்று சிறுபான்மையினரை அளவுக்கதிகமாக இலக்கு வைத்து பெருந்தொற்றுக் காலத்தின் போது பல கொள்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனம் உட்பட, மருத்துவ நிபுணர்கள் இந்நிலைப்பாட்டிற்கு முரணாக தெரிவித்த போதிலும், அரசாங்கம் கட்டாய தகனக் கொள்கையை பல மாதங்களுக்கு தொடர்ந்ததுடன் சமூகத்திலிருந்து அதிகப்படியான அழுத்தத்தின் பின்னரும் மற்றும் 2021 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (யு.என்.எச்.ஆர்.சி) செயன்முறையை ஒட்டி சர்வதேசத்தின் கண்டனங்களின் பின்னரே அதிலிருந்து பின்வாங்கியது.

முதலாவது அலை குறைவான நோய் தொற்றுச் சம்பவங்களையும் மற்றும் இறப்பு களையுமே பதிவு செய்ததைக் கண்டதுடன் பெருந்தொற்று வெற்றிகரமாக சமாளிக்கப்பட்டு விட்டதாக தங்களின் பிம்பத்தை பெருப்பிப்பதற்கு அதிகாரிகளால் அது உடனேயே உபயோகிக்கப்பட்டது. இந்த தவறுதலான வெற்றிப் பெருமிதம் பெருந்தொற்று வெற்றி கரமாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் தன்னைக் காட்டிக் கொள்வ தோடிணைந்து பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் பரப்புரைகளுக்கு மாற்றப்பட்டது. இது, தேர்தல் பிரச்சாரங்களின் போது பெரும் தேர்தல் பேரணிகள் மற்றும் மட்டுப் படுத்தப்பட்ட சுகாதார முன்பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றைக் கண்டது. தேர்தல்கள் மற்றும் 20 ஆவது திருத்தத்தின் சட்டவாக்கத்தின் உடன் பின்னதாக, இரண்டாவது அலை உறுதி செய்யப்பட்டதுடன் நோய்த் தொற்றுகளின் அதிகரித்தலும் அறிவிக்கப்பட்டன.

முதலாவது அலையின் போது தொற்றுச் சம்பவங்களை கட்டுப்படுத்திய இயலுமைக்கு மாறாக, 2020 இன் பிந்தைய மாதங்கள் மற்றும் 2021 பெருந்தொற்றுக்கான பதிலிறுப்பு களில் பல்வேறு பின்னடைவுகளைக் கண்டன. அதிகரிக்கும் நோய் தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கைகளுக்கு மத்தியில், பரிசோதித்தல், தனிமைப்படுத்தல் செயன்முறைகள், தடுப்பூசிப் பயன்பாடு, பொதுமக்கள் தகவல் பிரச்சாரம் மற்றும் பெருந்தொற்று பதிலிறுப்புக்காக ஒதுக்கப்பட்ட வளங்கள் தொடர்பான பல்வேறு குறைபாடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் எழுந்தன.

[18] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), 2021. *இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பு மீதான ஓர் இற்றைப்படுத்தல் (An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka)* <https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறும்.

தொற்றின் பரவுதலைத் தடுத்தல் மற்றும் அதன் பாதிப்பைக் குறைத்தல் என்பவற்றை ஏற்றுக்கொள்வதற்கு அரசியல்வாதிகளால் மறுக்கப்பட்டதும் உண்மையில் அங்கே காணப்பட்டது. நோய்த் தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கைகளில் உறுதியான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், ஜூன் 2021 வரை, சமூகப் பரவுதல் என்பதற்கு உத்தியோகபூர்வ அங்கீகரித்தல் இருக்கவில்லை, மாறாக 'கொத்தணி'[19] எனக் குறிப்பிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய வைரஸின் திரிபு மிகவும் பரவும் தன்மை கொண்டது என சுகாதார தொழில்சார் தகைமையாளர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு பின்னணியில் சமூகப் பரவல் என்பதை அங்கீகரிப்பதற்கான ஏற்பின்மையும் கூட இங்கே கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். முன்னைய திரிபைப் போலன்றி, தற்போதைய அலை இறப்பு உட்பட மோசமான சிக்கல்களை இளம் நோயாளிகள் பலரும் அனுபவிப்பதையும் காண்கிறது.

**சுகாதாரத் துறையை குறைமதிப்பிடல்** - பெருந்தொற்று பதிலிறுப்பு நடவடிக்கை இலங்கையிலுள்ள ஒரு வலுவான பொதுச் சுகாதார முறைமையிலிருந்து பயனடைந்தது, ஆனால் இதுவும் கூட முன்னொருபோதுமில்லாத வகைகளில் சோதனைக்குள்ளானது. பாதுகாப்பு பாதீட்டின் உறுதியான அதிகரிப்பிற்கு முரணாக சுகாதாரம் உட்பட சில துறைகளுக்கான செலவுகளைக் குறைப்பதற்கு ஒரு கடுமையான முயற்சி அண்மைய வருடங்களில் அவதானிக்கப்பட்டது. யுத்தம் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்த பின்னரும், ஓர் ஆச்சரியமளிக்காத வகையில், பாதுகாப்புத் துறை மிகவுயர்வான தொகையின் ஒதுக்கீட்டைப் பெறுகின்றது.[20] அவ்வாறான முன்னுரிமைப்படுத்தல் அரசாங்கத்தின் எண்ணம் மற்றும் மூலோபாயத்தை சுட்டிக்காட்டுகிறது, குறிப்பாக போருக்குப் பிந்தைய ஒரு சூழலில் இலங்கை மிகப் பெரிய சுகாதார நெருக்கடியை முகங் கொடுக்கிறது.

அரசியல் நியமனங்கள் மற்றும் இராணுவம் என்பன முன்னணி வகிபாகத்தை எடுத்துக் கொண்டு சுகாதாரப் பணியாளர்கள் ஓர் இரண்டாந்தர வகிபாகத்திற்கு கீழிறக்கப்பட்டதையும் கூட பெருந்தொற்று அவதானித்தது. உதாரணத்திற்கு, 2020 இல் பல வாரங்களாக சுகாதார சேவைகளுக்கான ஒரு பணிப்பாளர் நாயகம் இருக்கவில்லை என்பதுடன் பெருந்தொற்று தொடர்பான பதிலிறுப்பு நடவடிக்கைத் தீர்மானங்கள் அதிகம் இராணுவம் மற்றும் மருத்துவ நிபுணத்துவம் இல்லாத ஏனையவர்களால் பெரிதும் ஆதிக்கம் கொண்டிருக்க காணப்பட்டது.[21] விமர்சகராக அல்லது உத்தியோகபூர்வ பதவிக்கு கீழ்பணியாதவர்களாக காணப்பட்ட சுகாதார தொழில்சார் தகைமையாளர்கள் கீழிறக்கப் பட்டனர். பிரச்சினைகள் பற்றி பேசியவர்கள் குறைமதிப்பிடப்பட்டனர், உதாரணத்திற்கு சுகாதாரத்திற்கான இராஜாங்க அமைச்சர் ஒரு சக அரசாங்க அமைச்சரால் மனவழுத்தம் கொண்டவரென குற்றஞ் சாட்டப்பட்டார்.[22] நிலைமையின் உண்மைத் தன்மை, தவறான கையாளுதல் மற்றும் உள்ளகச் சிக்கல்கள் வெளிவருவதை மட்டுப்படுத்துவதற்கு எல்லா முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதுடன் அபாயங்கள் பற்றி பேசியவர்கள் தணிக்கைக்கு முகங்கொடுத்தனர்.

---

[19] 2020 இல், இவை மினுவன்கொடை கொத்தணி, கடற்படைக் கொத்தணி மற்றும் பேலியகொடக் கொத்தணி என்பவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் 2021 இல் 'புது வருடக்' கொத்தணி எனப் பெயரிட்டப்பட்ட ஒரு புதிய கொத்தணியையும் கண்டது.

[20] வெரிட் ரிசேர்ச் (Verite Research) 2021 வரவுசெலவு தொடர்பான பொது அறிக்கை: செலவு ஒதுக்கீடுகள் மற்றும் வரி விதிப்புக் கொள்கைகள் அரசாங்கத்தின் 2020 கொள்கையுடன் ஒத்திணங்குகிறதா தொடர்பான மதிப்பீடு.

[21] பவானி பொன்சேக்கா, "இலங்கையில் பெருந்தொற்று நடவடிக்கையுடன் சௌகரியமற்ற உண்மைகள்" ("Uncomfortable Truths with the Pandemic Response in Sri Lanka") 5 நவெம்பர் 2020. கிறவுண்ட்வியூஸ்; https://groundviews.org/2020/11/05/uncomfortable-truths-with-the-pandemic-response-in-sri-lanka/

[22] அருண பெர்ணான்டோ, "இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி மனவழுத்தத்தின் கீழுள்ளார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகிறார்", த கொழும்பு போஸ்ட்; http://www.thecolombopost.net/en/topstories-en/76824/

ஏப்பிரல் 2021 இல் பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுவதற்கான ஆலோசனை புறக்கணிக்கப்பட்டது போன்ற சுகாதார தொழில்சார் தகைமையாளர்கள் மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பான நிபுணத்துவம் கொண்ட ஏனையவர்களின் ஆலோசனைகள் புறக்கணிக்கப்படுகின்றமைக்கான குறிக்காட்டிகளும் அங்கிருந்ததுடன் பின்னதாக மூன்றாவது அலை தோன்றிதையும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் நோய்த் தொற்றுக் கொண்டவர்களாக பரிசோதித்து அறியப்பட்டதுடன் அதிகரித்தளவிலான இறப்புகளையும் அது கண்டது.[23] சுகாதார சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் கூட அநேகம் புறக்கணிக்கப்பட்டன அல்லது மீறப்பட்டன. அதிகளவான நோய்த் தொற்று கண்டு பிடிக்கப்பட்டதின் காரணமாக பிலியந்தலைப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் அமுல் படுத்தப்பட்ட ஒரு சம்பவத்தில் சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டதுடன் விரைவிலேயே அங்கு ஒரு குழப்பநிலை காணப்பட்டது.[24] பிரதேசத்திலிருந்தான ஓர் அரசாங்க அமைச்சர் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு மாறாக இருந்தாலும் தனிமைப்படுத்தல் நீக்கப்படுவதற்கு வலியுறுத்தினார் என பின்னர் அறிவிக்கப்பட்டமை, பெருந்தொற்றின் பதிலிறுப்பு நடவடிக்கை அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தமைக்கான ஒரு குறிக்காட்டியாக அமைந்தது.

**சிகிச்சை மற்றும் தடுப்பூசிகள் -** மருத்துவம் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பான அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுடன் ஒத்திசைவான கொள்கை மற்றும் திட்டமிடல் என்பவையில்லாமையையும் காணப்படக்கூடியதாக இருந்தது. விஞ்ஞானபூர்வ ஆதாரம் இல்லாத போதிலும், பிரித் ஓதுதல், ஆறுகளில் புனித நீர்க் கலசங்களை விடுதல், பௌத்த பிக்குகள் உலங்கு வானூர்தியில் சென்று பிரித் நீர் தெளித்தல் மற்றும் பயனுறுதித் தன்மைக்கு நிரூபிக்கப்பட்ட தரவுகள் இன்றி கசாய பாணியை ஊக்குவித்தல் போன்ற மத ரீதியான மற்றும் விஞ்ஞானபூர்வமற்ற முறைகளை அரசாங்கம் நாடியது. இதில் பலதும் சுகாதார அமைச்சர் உட்பட முக்கியமான அரசாங்க அமைச்சர்களால் ஊக்குவிக்கப்பட்டன. அதிலும், சுகாதார அமைச்சர் தான் வைரசிலிருந்து பாதுகாக்கப்படுவேன் எனக் கூறி, கசாய பாணியை ஊடகம் முன்பாக எடுத்துக் கொண்டார். பின் விரைவிலேயே இவ்வமைச்சர் சோதிக்கப்பட்டு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியதாகியது.[25] இவ்வாறான பகட்டு நடவடிக்கைகள் மக்களுக்கு ஒரு போலிப் பாதுகாப்பு உணர்வை அளித்ததுடன் இலங்கையை சூழ்ந்து அமிழ்த்தும் உண்மையான நெருக்கடியிலிருந்தான ஒரு கவனச் சிதறலையும் ஏற்படுத்தியது.

இதைப் போன்ற குழப்பம் தடுப்பூசிகளின் அனுமதி மற்றும் அமுல்படுத்துதலிலும் காணப் பட்டது. தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதில் உலகளவில் சவால்கள் இருந்த வேளையில், போதுமான வகையில் திட்டமிட்டு 2021 இன் ஆரம்பத்தில் அவற்றைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கமும் தவறியது. அஸ்ட்ரா செனக்கா (Astra Zeneca) உபயோகித்து தடுப்பூசி கொடுப்பதற்கான திட்டம் ஆரம்பித்த வேளையில், முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் பின்னர் இரண்டாவது ஊசியை எவ்வாறு பெற்றுக் கொள்வது தொடர்பாக தகவல் எதுவும் அங்கு பகிரங்கமாக கிடைக்கும் வகையில் இருக்கவில்லை. கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படுமா என்பது பற்றிய

[23]மேலும், நாளாந்தம் ஆயிரங்களில் மக்கள் இறக்கின்ற நிலையுடன் ஒரு மோசமான நெருக்கடியை இந்தியா முகங் கொடுத்துக் கொண்டிருந்த போதிலும், இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் பயணக் குமிழியுட்பட, சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையத்தை அதிகாரிகள் தொடர்ந்து திறந்து வைத்திருந்த போது நிபுணர்களின் ஆலோசனை கூட புறக்கணிக்கப்பட்டன.

[24]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), 2021. *இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று மீது கவனம் செலுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பு தொடர்பான ஓர் இற்றைப்படுத்தல்.* < https://www.cpalanka.org/ an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறலாம்.

[25]"மேலதிக சிகிச்சைக்காக ஐ.டி.எச் வைத்தியசாலை தீவிர கண்காணிப்பு பிரிவில் சுகாதார அமைச்சர் அனுமதிக்கப்பட்டார்", 29 ஜனவரி 2021. கொழும்புபேஜ்; http://www.colombopage.com/ archive_21A/ Jan29_1611905865CH.php

தகவலும் அங்கே இருக்கவில்லை. தடுப்பூசி வழங்குதலின் அமுல்படுத்துதலில் குளறுபடிகள் மற்றும் அரசியல்மயப்படுத்தல் அதே போன்று ஒரு திட்டமில்லாமையும் விரைவிலேயே வெளிப்படையானது. கொழும்பு மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தினிடையே, முன்களப் பணியாளர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் இடைவெளிகள் காணப்படுவதையும் ஏனையவர்களுக்கு தடுப்பூசி வழங்கு வதற்கு அரசியல் செல்வாக்கு உபயோகிக்கப்பட்டதையும் ஊடகங்கள் சுட்டிக்காட்டின.[26]

சீனாவின் சினோபார்ம் (Sinopharm) மற்றும் ரஷ்யாவின் ஸ்புட்னிக் (Sputnik) தடுப்பூசிகள் உட்பட, ஏனைய தடுப்பூசிகளுக்கான அனுமதியைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் போராடுகையில் தடுப்பூசிகளின் பற்றாக்குறை பற்றிய அறிக்கைகளும் அங்கே வெளிப் பட்டன. தடுப்பூசிகளை அனுமதிப்பதற்கு ஆணைப்படுத்தப்பட்ட, ஆனால் அதன் பாவனைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் இன்னமும் அனுமதியளிக்காததின் காரணமாக சினோபார்ம் தடுப்பூசிக்கான அனுமதியை தடுத்து வைத்திருந்த தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நான்கு உறுப்பினர்களை எவ்வாறு சுகாதாரத்திற்கான இராஜாங்க அமைச்சர் எதேச்சாதிகாரமான வகையில் பணிநீக்கம் செய்தார் என்பதையும் கூட ஊடகங்கள் அறிவித்தன.[27] இதன் ஒரு விளைவாக, ஆட்சேபனையைத் தெரிவிக்கும் முகமாக தே.ஔ.க.அ இன் தலைவர் பதவி விலகினார். தே.ஔ.க.அ சபை உடனேயே அரசாங்கத்தின் திட்டங்களோடு இணைந்து செயற்படக்கூடியவர்களால் மீளமைக்கப்பட்டு சினோபார்ம் தடுப்பூசி உடன் அனுமதிக்கப்பட்டது.

காலவொழுங்குகள் மற்றும் உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் சிக்கலான அமுல்படுத்தல் என்பவற்றுக்கான குழப்பத்துடன் தடுப்பூசி திட்டத்தின் மேலும் தவறான கையாளுதல் தெளிவாகியது. சிறப்புரிமைகளும் அரசியல் தொடர்புகளும் மற்றயவர்களை விட சிலருக்கு சாதகமாக இருந்த ஒரு சூழலில் இது அதிகரித்தது.[28] அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசியின் மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்புகள் இரண்டாவது ஊசி வழங்கலுக்காக வெளிச் செல்ல ஆரம்பித்த போது, அரசாங்கத் தொடர்புள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள், அரசியல் தொடர்புள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதையும் மற்றும் பௌத்த ஆலயங்களில் தன்னிச்சையான வகையில் தடுப்பூசி வழங்கல்கள் இடம்பெறுவதாகவும் மற்றும் தெளிவான பயணக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், சிலர் வெளி மாகாணங்களுக்கு சென்று தடுப்பூசிகள் பெறுவதாக சமூக ஊடக இடுகைகள் சுட்டிக்காட்டும் போது இவை தெளிவாகின.[29]

முழுச் செய்முறையையிலும் அரசாங்கத்தின் தவறான கையாளலை பல அதிருப்திக் குரல்கள் விமர்சிப்பது காணப்பட்டது. தடுப்பூசி அளிக்கும் முறைமையின் மந்த கதி, சிக்கலான பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் செய்முறைகள், அதிகரிக்கும் எண்ணிக்கையிலான

[26]சித்தாரா, "பலம் மற்றும் தொடர்பு உள்ளவரா? வரிசையின் முற்பகுதிக்கு செல்லுங்கள்", ("Powerful and Connected? Go to the Head of the Queue") 16 மே 2021. கிறவுண்ட்வியூஸ்; https://groundviews.org/2021/05/16/powerful-and-connected-go-to-the-head-of-the-queue/

[27]குமுதினி ஹெட்டியாரய்ச்சி, ருக்யஹா தீனே & மெலீசா ரத்நாயக்க, "தரவுகளில்லாது சீன தடுப்பூசிகளை இறக்குமதி செய்யும் முயற்சிகளிற்கிடையில், தே.ஔ.க.அ உறுப்பினர்கள் நால்வர் பணிநீக்கப்பட்டனர்"(" Amid moves to import Chinese vaccine sans data, four NMRA board members sacked") 14 மார்ச் 2021. த சண்டே டைம்ஸ்; https://www.sundaytimes.lk/210314/news/amid-moves-to-import-chinese-vaccine-sans-data-four-nmra-board-members-sacked-436357.html

[28]இமேஷ் ரனசிங்க, "மொரட்டுவை தடுப்பூசி கடத்தல் முயற்சி: இலங்கை பொலிஸ் நகரபிதாவைக் கைது செய்தது" ("Moratuwa vaccine hijack attempt: Sri Lanka police arrest mayor") 28 மே 2021. எக்னோமிநெக்ஸ்ட்; https://economynext.com/moratuwa-vaccine-hijack-attempt-sri-lanka-police-arrest-mayor-82518/#modal-one

[29]சாணக்க ஜயசிங்க, "அபயராமவின் அனுமதிக்கப்படாத தடுப்பூசி வழங்கல்: பிரதான விகாராதிபதி அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டுகிறார்" (Chanka Jayasinghe., "Abhayarama's unsanctioned vaccine rollout: Chief incumbent blames Sri Lanka govt") 31 மே 2021. எக்னோமிநெக்ஸ்ட்; https://economynext.com/abhayaramas-unsanctioned-vaccine-rollout-chief-incumbent-blames-sri-lanka-govt-82578/#modal-one

இறப்புகள் மற்றும் பரவுதலைத் கட்டுப்படுத்துவதற்கு இயலாமை என்பவற்றால் ஏற்பட்ட பலரின் விரக்தி மற்றும் கோபம் என்பவற்றுடன் தவறான முகாமைத்துவத்தின் விளைவு அரசாங்கத்தின் பிரபல்யத்தைப் பாதிப்படைய வைத்தது. பொருளாதாரச் சவால்களை இலகுவாக்குவதற்கு நிலையான உதவிகள் வழங்கப்படாத நிலையில், பலரினால் முகங் கொடுக்கப்பட்ட பொருளாதார கஷ்டங்களால் இது மேலும் அதிகரித்தது.

**நிதிசார் பொறுப்புக்கூறல் -** கொவிட்-19 ஐ சமாளிப்பதற்கு நிதிகள் பெற்றுக் கொள்வதற்கு ஸ்தாபிக்கப்பட்ட 'இட்டுக்கம நிதி' (Itukama Fund) உருவாக்கத்தின் நிதிசார் வெளிப் படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் மேலும் கரிசனைகள் எழுப்பப்பட்டன. நிதிக்கு 1.7 பில்லியன் ரூபாய்கள் கிடைக்கப்பெற்ற வேளையில், தனியே அதன் 23 சதவீதம் மாத்திரமே உபயோகிக்கப்பட்டதை அண்மையில் ஊடக அறிக்கைகள் சுட்டிக் காட்டியமை, பொதுமக்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியது.[30] அரச துறை, தனியார் துறை மற்றும் தனிப்பட்டவர்கள் என பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களிடமிருந்தான நன்கொடைகளுடன் நிதியின் உருவாக்கம் அதிக உற்சாகத்தைக் கண்டது ஆனால் பின் ஒரு வருடத்திற்கும் மேலாக அது எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்பட்டது மற்றும் நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது குறித்து மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே பகிரங்கமாகக் கிடைத்தது. இந்நிலை, இலங்கை பல்வகைச் சவால்களுக்கு முகங் கொடுக்கையிலும் மற்றும் பெருந்தொற்றைச் சமாளிப்பதற்கு தடுப்பூசிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு நிதிகளின் தேவையைக் கொண்டுள்ள போதிலாகும். தகவல்கள் பகிரங்கமாக இல்லாதவிடத்திலும் மற்றும் பெருந்தொற்று பதில்நடவடிக்கைகளிலான குளறுபடிகளைத் தொடர்ந்து, பதிலளிக்கப்படாத பல கேள்விகள் உள்ளன.

### *அதிகரிக்கும் தோல்விகள் மற்றும் கட்டவிழும் வாக்குறுதிகள்*

இந்த அரசாங்கத்தின் பிரபல்யம் 2019 மற்றும் 2020 இல் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, வினைத்திறன் மற்றும் சுபிட்சம் ஆகிய முக்கிய பிரச்சார வாக்குறுதிகள் மீது பிணைக்கப் பட்டிருந்தது, ஆனால் அநேகமான இந்த அடிப்படை வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்கு இயலாததை 'மறைந்து போகும் சுபிட்சம்'[31] விரைவில் காண்பிக்க ஆரம்பித்தது. பெருந்தொற்றுப் பதிலிறுப்பு நடடிக்கைகளில் ஏனைய பல காரணிகளிடையே, ஊழல் குற்றச்சாட்டுகள், சுற்றுச்சூழல் மற்றும் கடல்வாழ் உயிர்கள் என்பவற்றிலான அனர்த்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சி என பல பின்னடைவுகள் வாக்குறுதியளிக்கப்பட்டதிலிருந்து மிகவும் வேறுபட்ட, தவறான கையாளல் மற்றும் பொருத்தமற்ற ஒரு சேர்க்கைக்கு நேரடியாகக் காரணமாகின. இந்த தோல்விகள் மற்றும் முகாமைத்துவச் சீர்கேடுகளிடையே, மக்கள் மத்தியில் ஏமாற்றமும் கோபமும் வெளிக் காணப்பட்டது.

முன்னைய அரசாங்கத்தின் மீது வைக்கப்படும் ஒரு விமர்சனம் மற்றும் அதன் மீதான வெறுப்பு மற்றும் வீழ்ச்சி என்பவற்றுக்கான ஒரு நேரடிக் காரணம் 'பிணைமுறி மோசடி' மற்றும் அதன் விளைவாகும், இதனை அப்போதைய கூட்டு எதிர்க்கட்சி, அரசாங்கம் மற்றும் அதன் நம்பகத்தன்மையை இலக்கு வைப்பதற்கு உபயோகித்தது. ஒரு முறைமை மாற்றத்திற்கு வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், உண்மையான பாதுகாப்புகள் இல்லாமை மற்றும்

---

[30] சிலோன் டுடே, 2021. எஞ்சியுள்ள 'இட்டுக்கம' கொவிட்-19 நிதி (Remaining 'ITUKAMA' COVID–19 Fund for). சிலோன் டுடே, [தொடரலை] 11 மே. https://ceylontoday.lk/news/remaining-itukama-covid-19-fund-for இயைணத்தள முகவரியில் கிடைக்கப் பெறலாம்.

[31] அமீர் அலி, "கோட்டாவின் மறைந்து போகும் சுபிட்சமும் கவலையளிக்கும் முன்கணித்தல்களும் "( "Gota's Vanishing Vistas & Worrying Prognosis) 21 மே 2021, கொழும்பு டெலிகிராப்; https://www.colombotelegraph.com/index.php/gotas-vanishing-vistas-worrying-prognosis/

அதிகாரத்தை அரசாங்கம் கைப்பற்றும் அதிகரித்த ஒரு நிலைமை காரணமாக புதிய மோசடிகளின் சாத்தியம் குறித்தான அச்சங்களுடன் பல்வேறு நிதி மோசடிகள் மற்றும் தவறான முகாமைத்துவம் என்பவற்றால் இந்தப் புதிய அரசாங்கம் பாதிக்கப்பட்டிருந்தது.[32] இதில் மிகப் பெரிய மோசடிகளிலொன்று 'சீனி மோசடி' என்பதாகும். இலங்கையின் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்ட மிகப் பெரிய மோசடியாக, இது அரசாங்கத்திற்கு ரூ.15.9 பில்லியன் இழப்புகளை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்படுகிறது.[33]

அதன் மோசமான கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளுக்கான சடுதியான மாற்றங்களின் விளைவாக உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற நிலை என்பவற்றுக்காகவும் அரசாங்கம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இதற்கான ஒரு அண்மைய உதாரணம், இந்தப் பெருந்தொற்றின் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்தமையாகும். இந்தத் தீர்மானத்திற்கான நேரகாலம் மற்றும் கவனங்களைத் தேவைப்படுத்தும் பல்வேறு விடயப் பரப்புகளுடன் அரசாங்கம் பணப் பற்றாக்குறைக்கு முகங் கொடுக்கும் போது அரசாங்கத்தின் இந்த நகர்வு சமூக ஊடகங்களில் கடுமையான விமர்சனத்தைச் சந்தித்தது.[34] முறையான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யாது இரசாயனப் பசளைகளைத் தடை செய்வதற்கும் சேதனப் பசளைகளின் அறிமுகம் செய்வதற்குமான அவசரமான தீர்மானம் மற்றொரு உதாரணமாகும்.[35] இதன் ஒரு விளைவு, விவசாய ஸ்தாபனங்கள் பசளைகள் பற்றாக்குறையை அனுபவிப்பதையும் பலரினதும் வாழ்வாதாரங்கள் பாதிக்கப் பட்டு மற்றும் பல விவசாயிகளுக்கு மோசமான பொருளாதாரத் துயரங்களை ஏற்படுத்தும் ஒரு ஏது நிலையையும் ஊடகங்கள் அறிவித்தன.[36] ஒரு பெருந்தொற்றின் எதிர்கொள்ளலின் ஒரு விரிவான திட்டத்தில் பரிசோதனை முறையிலான குறைபாடுகளுடன் ஒரு தெளிவான திட்டமின்றி தடுப்பூசி வழங்குதலின் அரசியல்மயப்படுத்தலிலும் இதைப் போன்ற விமர்சனம் காணப்பட்டது.[37]

---

[32] "தாறுமாறான தீர்மானம் மேற்கொள்ளல் நிறுத்தப்படல் வேண்டும்" ("Muddled decision-making must end")19 ஜூன் 2021. டெய்லி எப்டி ; https://www.ft.lk/ft_view__editorial/Muddled-decision-making-must-end/58-719380

[33] "சீனி மோசடி இலங்கையின் வரி வருமானத்தில் ரூ.15.9 பில்லியன் இழப்பு ஏற்படுத்துகிறது: நிதி அமைச்சு" ("Sugar scam costs Sri Lanka Rs 15.9 billion in tax revenue: Finance Ministry") 19 ஜூன் 2021. எக்கனோமிநெக்ஸ்ட்;https://economynext.com/sugar-scam-costs-sri-lanka-rs-15-9-billion-in-tax-revenue-finance-ministry-79636/#modal-one; விடயத்தை தற்போது உயர் நீதிமன்றத்தின் முன்கொண்டு வந்து ஜே.வி.பி 'சீனி மோசடி' ஐ சவாலுக்குட்படுத்தியுள்ளது.

[34] "3.6 பில்லியன் ரூபாய்களுக்கும் மேற்பட்ட ஒரு தொகைச் செலவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள்" ("Preparations to import Luxury vehicles for MPs at a cost of over 3.6 billion rupees") 24 மே 2021. நியூஸ்பர்ஸ்ட்; https://www.newsfirst.lk/2021/05/24/preprations-to-import-luxury-vehicles-for-mps-at-a-cost-of-over-3-6-billion-rupees/

[35] கிறிஸ் கமலேந்திரன், "கப்பல்கள் திருப்பியனுப்பப்பட்டன; அரசாங்கம் இரசாயனப் பசளைத் தடையை முன்னெடுக்கிறது"( "Shipments turned away; Govt. pushes ahead with chemical fertiliser ban") 2 மே 2021.த சண்டே டைம்ஸ்; https://www.sundaytimes.lk/210502/news/shipments-turned-away-govt-pushes-ahead-with-chemical-fertiliser-ban-442126.html

[36] "இராசயனப் பசளைகள் மற்றும் பீடைகொல்லிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக பெரும் பொருளாதார இழப்பை SAEA எச்சரிக்கிறது" ("SAEA warns of big economic losses due to import restrictions on chemical fertilizers and pesticides ") 30 மே 2021. த ஐலண்ட்; https://island.lk/saea-warns-of-big-economic-losses-due-to-import-restrictions-on-chemical-fertilizers-and-pesticides/

[37] சசிக்க பண்டார, "கொவிட்-19 இற்காக ஒரு நீண்ட கால உபாயத்திற்கு இலங்கை எச்சரிக்கையளிக்கும் வகையிலான தாமதம் கொண்டுள்ளது" (Sri Lanka is Alarmingly Overdue for a Long-Term Strategy for COVID-19) 21 ஜூன் 2021. கிறவுண்ட்வியூஸ்;https://groundviews.org/2021/06/21/sri-lanka-is-alarmingly-overdue-for-a-long-term-strategy-for-covid-19/; காஞ்சன என்.ருவன்புர, சமந்தி கணவர்த்தன மற்றும் புத்திம பத்மசிறி, "தடுப்பூசி சமத்துவமின்மை மற்றும் ஆடைத் துறைப் பணியாளர்களுக்கு செலவு" ( "Vaccine Inequality and the Cost to Garment Sector Workers") 22 மே 2021. கிறவுண்ட்வியூஸ் ; https://groundviews.org/2021/05/22/vaccine-inequality-and-the-cost-to-garment-sector-workers/

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விடயத்தைக் கையாள்வதின் பயனாக ஏற்பட்ட அனர்த்தம், அரசாங்கத்தின் தவறுகளின் ஒரு நீண்ட பட்டியலிருந்தான அண்மைய ஒரு சம்பவமாகும். இரசாயனங்கள் மற்றும் ஏனைய பொருட்களை ஓர் ஒழுக்குடன் கூடிய கொள்கலனில் கப்பல் கொண்டு வந்ததாகவும் அதனால் அது இந்தியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளால் அவர்களது கடற்பரப்பிற்குள் நுழைவது மறுக்கப்பட்டது, என ஊடக அறிக்கைகள் சுட்டிக்காட்டின.[38] அந்த ஒரு ஒழுக்கின் கடுமையான பின்விளைவுகளின் சாத்தியம் இருந்த போதிலும், கப்பலை அதன் கடற்பரப்பிற்குள் நுழைவதற்கு இலங்கை அனுமதித்தது. அந்த ஒழுக்கு பின்னதாக கப்பல் தீ பற்றிக் கொள்ள வழிவகுத்ததுடன் கடல்வாழ் உயிர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சொல்ல முடியாதளவு அழிவை ஏற்படுத்தியது. முன்னதாக இரண்டு வேறு நாடுகள் கப்பல் உள்நுழைவதற்கு மறுத்திருந்த போதிலும் மற்றும் ஒழுக்கு கொண்டிருக்கக்கூடியதான பின்விளைவுகள் பற்றிய ஒரு தெளிவான புரிதலின்றி அரசாங்கம் ஏன் கப்பல் இலங்கையின் கடற்பரப்பிற்குள் நுழைவதற்கு அனுமதி அளித்தது என தற்போது கேள்விகள் எழுப்பப்படுகின்றன. விடயம் தற்போது புலன்விசாரணை செய்யப்பட்டு வருகின்றதுடன், மேலும் விபரங்கள் வெளிப்பட்டுள்ளதுடன் அவை அரசாங்கத்தின் செய்முறைகள் மற்றம் பொறுப்புகள் பற்றி கேள்விகளை எழுப்புகின்றன. தீப் பாதிப்பின் முழுமையான நட்டம் மற்றும் எண்ணெய் கசிதலின் அச்சங்கள் இன்னமும் தெரியவில்லை, ஆயினும் ஆரம்ப அறிக்கைகள் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் மீதான கடுமையான தாக்கங்களுடன் இலங்கையின் சுற்றுச்சூழலிற்கு மிக மோசமான அனர்த்தத்தை ஏற்படுத்திய இதன் பாதிப்பு பல பில்லியன்கள் தொகையாக இருக்குமென சுட்டிக்காட்டுகின்றன.[39] சுற்றுச்சூழல், மீன்பிடி மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்கள் என்பவற்றுக்கு இந்த அழிவு நீண்ட நாள் பாதிப்புகளைக் கொண்டிருக்கக் காணப்படுவதுடன் இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் தவறான கையாளுதல் குறித்து சமூக ஊடகங்களில் கடுமையான விமர்சனங்கள் காணப்பட்டன.

பொருளாதார நெருக்கடி மற்றும் வாக்குறுதியளித்த வினைத்திறன், ஸ்திரத்தன்மை மற்றும் சுபிட்சம் என்பவற்றை அளிப்பதற்கான இயலாமை என்பன அரசாங்கத்தின் வீழ்ச்சி காணும் மக்கள் அபிமானத்திற்கு நேரடியான காரணமாக அமைந்திருக்க முடியும். முதலீட்டாளர்களுக்கு ஒரு வினைத்திறனான முறைமையை வாக்குறுதியளித்த அரசாங்கத்தின் 'சுபிட்சத்தின் நோக்கு' அவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதை நோக்காகக் கொண்டது. இந்த உணர்வை பசில் ராஜபக்ச பின்வரும் கூற்றினால் தெரிவிக்கிறார் - *''அனைத்து இலங்கையர்களுக்கும், விசேடமாக வர்த்தக சமூகத்திற்கு ஒரு செய்தியை நான் தர விரும்புகிறேன், ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச நாட்டில் வர்த்தக சிநேகபூர்வமான ஒரு சூழலை உருவாக்குவார் என்பதுடன் அது ஊழல், போதைவஸ்து கடத்தல் மற்றும் பாதாளக் குழுக்கள் என்பவையில்லாத ஒரு நாடாக இருக்கும். இது அபிவிருத்தி, பொருளாதார மறுமலர்ச்சிக்கான தசாப்தமாக இருக்கும். எனவே எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். நாங்கள் கடுமையாகச் செயலாற்ற வேண்டும்''.*[40]

தவறுதல்கள் மற்றும் தவறான கையாளல்களின் பட்டியல் தொழில்நுட்பக் கோட்பாட்டு அரசாங்கத்தைத் தோலுரித்துக் காட்டியது. *வியத்கம* மற்றும் *எலிய* குழுக்கள் மற்றும் இராணுவம் என்பவற்றின் இணைதல் தொழில்சார்தன்மை, வினைத்திறன் மற்றும் முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்திற்கு நம்பிக்கை ஊக்குவித்தல் என்பவற்றைக்

[38]"கடலிருந்தான அவசர செய்தி" 2 ஜுன் 2021. டெய்லி எப்டி; https://www.ft.lk/ft_view__editorial/SOS-for-the-ocean/58-718684

[39]ரங்க ஸ்ரீலால் மற்றும் அன்டிரீஸ் இல்மர், "எக்ஸ்பிரஸ் பேர்ள்: ஒரு சுற்றுச்சூழல் அனர்த்தத்தை ஏற்படுத்திய 'நச்சுக் கப்பல்' ("X-Press Pearl: The 'toxic ship' that caused an environmental disaster") 10 ஜுன் 2021.பிபிசி செய்தி; https://www.bbc.com/news/world-asia-57395693

[40]உதித்த ஜயசூரிய, "மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எங்களிற்கு தருவது மக்களைப் பொறுத்தது – பசில்" ("Upto the People to give us a two-thirds majority- Basil") 29 ஜுலை 2020. டெய்லி எப்டி; https://www.ft.lk/opinion/Up-to-the-people-to-give-us-a-two-thirdsmajority-Basil/14-703809

கொண்டு வருவதற்கானவையாகக் கருதப்பட்டது. இது இன்னமும் பயனுறுவதற்குள்ளதுடன் பெருந்தொற்றின் மூன்றாவது அலையின் கையாளல் மற்றும் ஏனைய விடயங்களில் காணப்படும் தொடர்ச்சியான வீண்விரயம் என்பன வாக்குறுதியளித்ததிலிருந்து மிகவும் வேறுபட்டதைக் கொடுத்த ஓர் அரசாங்கம் தொடர்பில் ஏமாற்றமளிக்கும் பெரும் வெற்றிடத்தைக் கொண்டிருந்தது.

இலங்கையின் நாட்டுக்கான கடன் நெருக்கடிக்கு அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை கரிசனைக்குரிய ஒரு முக்கியமான பகுதியாக அமைந்தது. இலங்கையின் நாட்டிற்கான தரப்படுத்தல் கடன் தரப்படுத்தல் முகவர் பிட்ச் (Fitch) இனால் B- இலிருந்து CCC இற்கு தரமிறக்கப்படமை, கடன் மீள்கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான ஒரு நம்பகமான மூலோபாயத்தை உருவாக்குவதற்கு அரசாங்கத்தின் இயலுமை மீது குறைவடைந்து செல்லும் நம்பிக்கைக்கான ஒரு குறிக்காட்டியாக அமைந்து.[41] இந்தத் தரமிறக்குதல் அரசாங்கத்தின் 2021 வரவுசெலவுத் திட்டத்தின் வெளியிடலுக்கான பதிலிறுப்பாக நிகழ்ந்ததுடன்[42] வெளிநாட்டு முதலீட்டுச் சந்தைகளுக்கு இலங்கையின் அணுகுவழிகளில் கடுமையான மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. நாட்டின் கடன் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக தற்போது 115 சதவீதத்தில்[43] உள்ளதுடன் அந்நியச் செலாவணி கையிருப்புகள் கவலையளிக்கும் மட்டங்களிற்கு வீழ்ந்துள்ளதோடு நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் போன்ற நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.[44] உடனடியான சென்மதி நிலுவைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக சீனா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் இருதரப்பு நாணய மாற்றங்கள் மீதும் அரசாங்கம் தங்கியுள்ளது.[45] இந்தத் தற்காலிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கடுமையான கட்டமைப்புப் பிரச்சினைகள் கவனம் கொள்ளப்படாத ஒரு நிலையில் நீண்ட காலப் பொருளாதாரம் மீதான கண்ணோட்டம் இருண்டதாகவே உள்ளது.[46]

---

[41]“வரவுசெலவுத் திட்டத்தின் பின்னர் பிட்ச் இலங்கை நாட்டிற்கான தரப்படுத்தலை ‘CCC’ இற்கு தரமிறக்கிறது” (“Fitch downgrades Sri Lanka sovereign rating to ‘CCC’ after budget”) 27 நவெம்பர் 2020. எக்னோமிநெக்ஸ்ட்;https://economynext.com/fitch-downgrades-sri-lanka-sovereign-rating-to-ccc-after-budget-76360/ #modal-one “பிட்ச் இலங்கையின் தரப்படுத்தலை CCC இல் உறுதிசெய்கிறது” (“Fitch affirms Sri Lanka rating at CCC”) 16 ஜூன் 2021. டெய்லி எப்டி;https://www.ft.lk/front-page/Fitch-affirms-Sri-Lanka-rating-at-CCC/44-719284

[42]அதே மூலம்

[43]“2021 இல் இலங்கையின் கடன் மொ.உ.உ இன் 115 சதவீதத்திற்கு உயர்கிறது, வறுமை 10.9 சதவீதம்.: உலக வங்கி” (Sri Lanka debt to GDP to rise to 115-pct in 2021, poverty 10.9-pct: World Bank) 2 ஏப்பிரல் 2021. எக்னோமிநெக்ஸ்ட்;https://economynext.com/sri-lanka-debt-to-gdp-to-rise-to-115-pct-in-2021-poverty-10-9-pct-world-bank-80356/#modal-one

[44]“இலங்கை அந்நியச் செலாவணிக் கையிருப்புகள் மொத்த நிதிக் கையிருப்பின் 33 சதவீதத்திற்கு வீழ்ந்தது” (“Sri Lanka net forex reserves fall to 33-pct of reserve money“) 11 ஜூன் 2021. எக்னோமிநெக்ஸ்ட்;https://economynext.com/sri-lanka-net-forex-reserves-fall-to-33-pct-of-reserve-money-82874/#modal-one “இலங்கை ‘வரலாற்றிலேயே மிகப் பெரிய அந்நியச் செலாவணி நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்தல்’ இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தூண்டுகிறது: அமைச்சர்” (“Sri Lanka facing ‘biggest forex crisis in history’ triggering import controls: Minister”) 28 மே 2020. எக்னோமிநெக்ஸ்ட்;https://economynext.com/sri-lanka-facing-biggest-forex-crisis-in-history-triggering-import-controls-minister-70431/#modal-one

[45]இலங்கை மத்திய வங்கி, “இலங்கை மத்திய வங்கி சீனாவின் மக்கள் வங்கியுடன் இருதரப்பு நாணய மாற்ற உடன்படிக்கையில் பிரவேசிக்கிறது” (“The Central Bank of Sri Lanka enters into a Bilateral Currency Swap Agreement with the People’s Bank of China“) மார்ச், 22, 2021. https://www.cbsl.gov.lk/en/node/9944 இணையத்தள முகவரியில் கிடைக்கும். “பங்களாதேஷ் வங்கி இலங்கைக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய மாற்றத்தை அனுமதிக்கிறது: அறிக்கை” (“Bangladesh Bank approves US$200mn currency swap for Sri Lanka: report”) 25 மே 2021. எக்னோமிநெக்ஸ்ட்;https://economynext.com/bangladesh-bank-approves-us200mn-currency-swap-for-sri-lanka-report-82351/#modal-one “இலங்கை இந்திய ரிசேர்வ் வங்கியுடன் வெளிநாட்டு நாணய மாற்றத்திற்கு செல்கிறது” (“Sri Lanka reverts to foreign currency swap with RBI“) 12 ஜூன் 2021. டெய்லி நியூஸ்;https://www.dailynews.lk/2021/06/12/local/251468/sri-lanka-reverts-foreign-currency-swap-rbi

[46]உமேஷ் மொரமுதலி, “இலங்கையின் வெளிநாட்டுக் கடன் நெருக்கடி 2021 இல் மோசமடைய முடியும்” (“Sri Lanka’s Foreign Debt Crisis Could Get Critical in 2021”) 9 பெப்ரெவரி 2021. த டிப்ளோமட்;https://thediplomat.com/2021/02/sri-lankas-foreign-debt-crisis-could-get-critical-in-2021/

மேலும், அரசாங்கத்தின் சொந்த ஆதரவாளர்களிலிருந்தான எதிர்ப்புகள் காரணமாக முக்கியமான செயல்திட்டங்களை மேற்கொள்வதற்கான இயலாமை, தனது வாக்காளர்களையே கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் இயலாமையை சுட்டிக்காட்டுவதாக உள்ளது. இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையில் உடன்படிக்கையின் கைச்சாத்திடப்படுதல் துரிதப்படுத்தப்படும் போது, அரசாங்கத்திற்கு நெருக்கமான தொழிற் சங்கங்கள், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தைச் சுற்றி மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இது காணப்பட்டது.[47] அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் மற்றும் துறைமுக நகரச் சட்டமூலம் ஆகிய இரண்டின் போதும் காணப்பட்டவாறு அரசாங்கத்தின் பல சொந்தக் கூட்டணித் தரப்புகள் ஒரு விமர்சன நிலைப்பாட்டை எடுப்பதை அரசாங்கக் கொள்கைகள் தொடர்ச்சியாகக் கண்டன. அவ்வாறான விமர்சனங்கள் மற்றும் சவால்கள் அரசாங்கம் திருத்தங்களைப் பிரேரிக்க வேண்டியிருப்பதையும் பல சமரசங்களுக்கு ஒத்திணங்கி, ஒரு பொதுத்தொடர்பு எனும் ஒரு மேலதிக நடவடிக்கைக்குப் போவதையும் ஏற்படுத்தின. கிழக்கு கொள்கலன் முனைய விடயத்தில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதற்குப் பங்களித்தன.

அரசாங்கத்தின் தோல்விகள் பலவும் அதிகாரிகளை இலக்கு வைத்து சமூக ஊடகத் தளங்களில் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்தன. தாக்குதல்கள் மற்றும் கைதுகளின் அச்சுறுத்தல்கள் மத்தியிலும், அதிகாரிகளுக்கு எதிரான விமர்சனங்கள் பல இலங்கையர் களால் உணரப்படும் அதிகரித்த விரக்தி மற்றும் கோபத்தை வெளிக்காட்டுவதற்கு கண்டுபிடிக்கப்பட்ட படைப்பாற்றலின் புதிய மட்டங்களில் தொடர்ந்தன. இதில் சில அரசாங்கம் மீதான அதிகரித்த வெறுப்பு மற்றும் மக்கள் மத்தியிலான அதிருப்தி என்பவற்றைச் சுட்டிக்காட்டி, ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் ராஜபக்ச குடும்பத்திலுள்ள ஏனையவர்கள் ஆகியோர்களை நேரடியாக இலக்கு வைத்தன. ஒரு அதிகரித்த அடக்கு முறையான நிலைமைகளிலும் கூட விமர்சனம் சாத்தியமாக இருக்கும் உண்மை முக்கியமானதென்பதுடன் பழிவாங்கப்படல் என்ற அச்சமின்றி அரசாங்கத்தை விமர்சித்து மற்றும் கேள்விகளுக்கு உட்படுத்துவதற்கு பிரசைகள் இயலுமாகவிருந்த 2015-2019 காலத்தின் போது திறந்து விடப்பட்ட இட வெளிக்கு அது உரியதாக்கப்பட முடியும்.

## *பொறுப்புக்கூறலின்மை, குற்ற விலக்களிப்பை ஸ்தாபித்தல் மற்றும் அரசியல் பழிவாங்கல்*

இலங்கையில் வலுப்படுத்தப்பட்ட ஊழல் மற்றும் குற்ற விலக்களிப்பு குறித்து கவனம் எடுப்பதற்கு முயற்சித்த ஜனநாயகச் செய்முறைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான ஒரு தாக்குதலையும் சீர்குலைந்து செல்லும் ஜனநாயகம் கண்டது. அண்மைய மாதங்களில் அவதானிக்கப்பட்ட ஒரு கடுமையான கரிசனை அடையாளமயமான வழக்குகள் மற்றும் ஜனநாயகம் சார்ந்த சீர்திருத்தங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பணிகளை இல்லாதகற்றும் முயற்சிகளைச் சுற்றியதாக அமைகிறது.[48]

அவர்களது தொழில்சார் முறையில் மேற்கொண்ட செயல்களுக்காக பலர் கைது செய்யப்பட்டு, இலக்கு வைக்கப்படுவதுடன், ‘அரசியல் பழிவாங்கல்’ என அர்த்தப்

[47]மீரா ஸ்ரீநிவாசன், “இந்தியா, ஜப்பான் மீண்டும் இலங்கையின் மற்றொரு துறைமுக செயற்றிட்டத்தில்” (“India, Japan back in another Sri Lanka port project”) 2 மார்ச் 2021. த ஹிந்து;https://www.thehindu.com/news/international/sri-lanka-now-clears-indian-investment-at-another-colombo-port-terminal/article33969407.ece

[48]பவானி பொன்சேகா, சரயா சமரக்கோன் மற்றும் குஷ்மிலா ரனசிங்க, “நீதி ஏன் வழுகுவதாக உள்ளது: இலங்கையில் அடையாளமயமான பத்து வழக்குகள் மீதான மீள் கண்ணோட்டம்” (“Revisiting Ten Emblematic Cases in Sri Lanka: Why Justice Remains Elusive”) 20 ஜனவரி 2021. https://www.cpalanka.org/revisiting-ten-emblematic-cases-in-sri-lanka-why-justice-remains-elusive/ இணையத்தள முகவரியில் கிடைக்கும்.

படுத்தப்பட்ட முயற்சிகள் முன்னைய ஆட்சியின் போதான முக்கியமான வழக்குகளில் பணியாற்றிய புலன்விசாரணையாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் ஏனையவர்களை குறி வைத்தது.[49] இந்த வழக்குகளை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டதோடு, இந்த விடயங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை நீக்கி, அவற்றை அகற்றுதல் மற்றும் அரசியல் மயப்படுத்தல் என்பன வெளிப்பட்டது. ஆணைக்குழுவின் கண்டறிதல்களை சவாலுக்குட்படுத்தி பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன் ஆணைக்குழுவின் தன்னிச்சையான கண்டறிதல் களுக்கு[50] எதிராக கடுமையான விமர்சனங்களைத் தொடர்ந்த ஒரு செயன்முறையுடன் சுடியதாகப் பல்வேறு கேள்விகளும் எழுப்பப்பட்டன. மேலும், சில தனிப்பட்டவர்கள் மீது குடியுரிமைப் பறித்தல்களை அமுல்படுத்தும் பரிந்துரைத்தல்கள் வழங்கிய உயர் நீதிமன்றத்தில் அமரும் ஒரு நீதியரசரால் தலைமை தாங்கப்படும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் நியமனமானது, தற்போது அதன் ஆணை ஒக்டோபர் 2021 வரை நீடிக்கப்பட்டதைக் கண்டது.[51]

அரசியல் பழிவாங்கலின் கண்டறிதல்களை சட்டபூர்வமாக்கும் முயற்சியில், பிரதம மந்திரி ஏப்பிரல் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை சமர்ப்பித்தார், அது நீதிமன்றங்களில் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு முகங் கொடுக்கும் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களிற்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளைக் கைவிடுவதை நோக்காகக் கொண்டது.[52] நீதித்துறை முன்னுள்ள வழக்குகளை தட்டிக் கழித்துவிட பாராளுமன்றத்தை உபயோகிக்க முயற்சித்து, அதிகார வேறாக்கலின் மையப்பகுதிக்கே சென்றதினால், இது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் அதிர்ச்சியான நகர்வாக இருந்தது. அத்தோடு இது சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்பிடுவதற்கும் அதிகாரத்திலுள்ளவர்கள் சட்டத்திற்கும் மேலானவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் ஓர் அப்பட்டமான நகர்வாகவும் இருந்தது. திஸ்சரணி குணசேகர அவர்களால் குறிப்பிட்டது மாதிரி, *"ராஜபக்சவின் ஆட்சியின் கீழ், நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டும் ஆணி கொண்டு அடிக்கப்பட்டுமிருக்கும்".*[53] 2015-2019 இல் மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை நீக்கி அகற்றும் பல முனை முயற்சிகள் ராஜபக்ச குடும்பத்தின் நலன்களால் மிகவும் செல்வாக்குச் செலுத்தப்பட்டதுடன் இலங்கையில் குற்ற விலக்களித்தலை மேலும் ஸ்தாபிதம் செய்தது.

கடந்த கால நடவடிக்கை மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைச் சுற்றியதான தெளிவின்மை தொடர்பாக கேள்விகள் எழுப்பியவர்களுக்கு எதிராக தாக்குதல்களும் தொடர்ந்தது. அரசாங்கத்தின் ஓர் ஆதரவாளாரான, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

---

[49]"இலங்கை: 'அரசியல் பழிவாங்கல்' கண்டறிதல்களை நிராகரி" ("Sri Lanka: Reject 'Political Victimization' Findings") 30 ஏப்பிரல் 2021. மனித உரிமைகள் கண்காணிப்பகம்: https://www.hrw.org/news/2021/04/30/sri-lanka-reject-political-victimization-findings

[50]பவானி பொன்சேக்கா, குஷ்மிலா ரனசிங்க மற்றும் சரயா சமரக்கோன், "ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு மீதான ஒரு விவரணம்" ("A Commentary on the PCoI and the Special PCoI on Political Victimization ") 21 ஏப்பிரல் 2021. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்; https://www.cpalanka.org/a-commentary-on-the-pcoi-and-the-special-pcoi-on-political-victimization/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கும்.

[51]அதே மூலம்

[52]மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், "அரசியல் பழிவாங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்ற அனுமதியை நாடும் தீர்மானம் மீதான சிறு குறிப்பு" ("Short Note on the Resolution Seeking Parliamentary Approval to Implement the Recommendations of the CoI on Political Victimization") 19 April 2021. https://www.cpalanka.org/short-note-on-the-resolution-seeking-parliamentary-approval-to-implement-the-recommendations-of-the-coi-on-political-victimization/ எனும் இணையத்தள முகவரியில் கிடைக்கும்.

[53]திஸ்சராணி குணசேகர, "ராஜபக்ச கொடுங்கோலாண்மையின் பிரசவ வலிகள்" ("Birth Pangs of the Rajapaksa Satrapy") 18 ஏப்பிரல் 2021. கிறவுண்ட்வியூஸ்;https://groundviews.org/2021/04/18/birth-pangs-of-the-rajapaksa-satrapy/

அண்மைய மாதங்களில் தாக்குதல்கள் சம்பந்தமான பொறுப்புக்கூறலில் உள்ள தாமதங்களைக் குறித்து கேள்வி எழுப்பினார். தாக்குதலின் இரண்டாவது வருட நினைவுப் பூர்த்திக்கு முன்னதாக அவர் தாக்குதல்கள் மதத் தீவரவாதம் என்பதற்குப் பதிலாக அரசியல் காரணமாக ஏற்பட்டது எனக் கோரியதுடன் *"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் ஒரு மத வெறி காரணமாக ஏற்பட்டதல்ல ஆனால் அது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் அதனைப் பாதுகாப்பதற்குமாகான ஒரு முயற்சி"* [54] எனக் குறிப்பிட்டார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைச் சூழ்ந்ததான தெளிவின்மை பதவி விட்டுச் செல்லும் சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட்ட கூற்றினால் மேலும் சிக்கலானது. தாக்குதலைச் சுற்றி 'பெரும் சதி' பற்றி அவர் தெரிவித்தது,[55] தாக்குதல்களின் பின்னால் காணப்பட்ட உள்நோக்கம் குறித்து கேள்விகள் எழுப்பியது. இதைப் போன்ற கண்ணோட்டங்கள் 2019 இன் பாராளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதுடன் அது பின்வரும் கருத்தை எழுப்பியது - *"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் ஏற்பட்ட இன வன்முறைகள் பொதுமக்கள் மத்தியில் புதிய அளவுகளிலான அச்சம் மற்றும் அரசியல் தலைமைத்துவம் மற்றும் பாதுகாப்பு நிறுவனம் குறித்தான விமர்சனங்களையும் கண்டது. ஓர் ஆட்சி மாற்றத்திற்கான குரல்கள் எழுப்பப்பட்ட நேரமும் அதுவாக இருந்தது. இவை தற்செயலானவையாக எடுத்துக் கொள்ளப்பட முடியாது என்பதுடன் மேலும் விசாரணை செய்யப்படல் வேண்டும். புலனாய்வுத் துறையிலுள்ள சில பிரிவுகளின் வகிபாகம் மற்றும் பாதுகாப்பு, தேர்தல் செய்முறை, அரசியல் களநிலவரம் மற்றும் இலங்கையின் எதிர்காலம் என்பவற்றை வடிவமைப்பதற்கான அவர்களின் முயற்சிகள் பற்றி கேள்விக்குட்படுத்துவது முக்கியமானதாகும்."*[56]

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சி அப்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு குழு, ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் ஒரு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட சம்பவங்களை விசாரித்து மற்றும் புலன்விசாரணை செய்வதற்கான பல்வேறு முன்னெடுப்புகளைக் கண்டது. மேலதிகமாக, புலன்விசாரணைகளும் கூடத் தொடர்ந்தன. இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இரண்டு வருடங்களிற்கு அதிகமாகவும் கடந்து விட்ட போதிலும், உண்மையும் நீதியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழுகிய நிலையில் இந்தத் தாக்குதல்களின் பின்னாலுள்ள சூத்திரதாரி பற்றிய தெளிவு இன்னமும் இல்லாதுள்ளது.

இதுவும் கூட விமர்சனம் மற்றும் எதிர்ப்பு என்பவற்றை ஏற்கும் ஒரு நிலை இல்லாத நேரத்தில் வருகிறது. அரசாங்கம் பெருந்தொற்றைக் கையாளும் விதம் குறித்து அதன் சொந்த ஆதரவாளர்களே தவறுதல்களை விமர்சிப்பதைக் கண்டது. ஆனாலும் இவை புறக்கணிக்கப்பட்டன அல்லது விமர்சிப்பவர்கள் அவர்களது கருத்துக்களுக்காக கேலி செய்யப்பட்டனர் மற்றும் கடிந்துரைக்கப்பட்டனர். இதே மாதிரியான எதிர்ப்பு 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போதும் மற்றும் மிக அண்மையில் துறைமுக நகரச் சட்டமூல விவாதம் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அதன் சொந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்

---

[54]யொஹான் பெரெரா "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அரசியல் தீவிரவாதத்தின் ஒரு விளைவேயன்றி, மதத் தீவிரவாதத்தினதல்ல – கர்தினால்" ("Easter Sunday attacks a result of political extremism, not religious extremism – Cardinal") 19 ஏப்பிரல் 2021. டெய்லி மிரர்; https://www.dailymirror.lk/front_page/Easter-Sunday-attacks-a-result-of-political-extremism-not-religious-extremism-Cardinal/238-210123

[55]"இலங்கை சட்டமா அதிபர் சொல்கிறார் "உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னால் பெரும் சதி: அறிக்கை" ("Sri Lanka Attorney General claims "grand conspiracy" behind Easter attack: report") 18 மே 2021. எக்னோமிநெக்ஸ்ட்; https://economynext.com/sri-lanka-attorney-general-claims-grand-conspiracy-behind-easter-attack-report-82074/#

[56]"21 ஏப்பிரல் 2019 அன்று இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை" 21 ஏப்பிரல் 2019. இலங்கை பாராளமன்றம்; https://www.parliament.lk/featured-on-the-sri-lanka-parliament/1715-sc-report-april-attacks

ஆதரவாளர்களின் சில சலசலப்புகளையும் கண்டது. துணிந்து சவாலுக்குட்படுத்திய எதிர்க்கட்சினர், விமர்சகர்கள், சிறுபான்மையினர் மற்றும் ஏனையவர்கள் வேறுபட்ட அளவுகளிலான ஒடுக்கப்படல்களை முகங் கொடுத்தனர். உதாரணத்திற்கு, ஜனாதிபதி மற்றும் துறைமுக நகரச் சட்டமூலத்தை விமர்சித்த அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச ஜனாதிபதியிடமிருந்து கடுமையான ஒரு தொலைபேசி அழைப்பைப் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.[57] கண்டனம் தெரிவித்த ஏனையவர்கள் ஒன்றில் தொல்லை, பதவியிறக்கம் அல்லது அச்சுறுத்தல்களை முகங் கொடுத்தனர். ஜனாதிபதி தனது செய்தியில் தெளிவாக பின்வருமாறு குறிப்பிட்டார்: *"இன்று எங்களுக்கு தேவை தங்களது நாட்டை நேசிக்கின்ற, சமுதாயத்திற்கு பங்களிக்கின்ற, மற்றும் நியாமற்ற விமர்சனங்களை மேற்கொள்ளாத ஆனால் நாங்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வுகளை அளிக்கின்ற, ஒரு நேர்மறையான பார்வை கொண்ட பிரசைகளின் ஆதரவேயாகும்."*[58]

[57]"ஜனாதிபதியிடமிருந்து தொலைபேசி அச்சுறுத்தலை அவர் பெற்றதாக விஜேதாச தெரிவிக்கிறார்", 16 ஏப்பிரல் 2021. எக்னோமிநெக்ஸ்ட்; https://economynext.com/wijeyadasa-claims-he-received-threatening-phone-call-from-president-80824/

[58]"சுதந்திர தினப் பேச்சு 2021". https://www.president.gov.lk/independence-day-speech-2021/ இணையத்தள முகவரியில் கிடைக்கும்.

## 2. இராணுவமயப்படுத்தல்

புதிய அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற மிகவும் முக்கியமான மற்றும் எச்சரிக்கின்ற மற்றும் ஜனநாயமயமற்றதாக்கும் போக்குகளில் ஒன்று இராணுவமயப்படுத்தல் செயன்முறை களுக்குத் திரும்புதலாகும்.

இந்தச் செயன்முறை கொவிட்-19 பரவல் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே நடைபெற்று வருகிறது, பெருந்தொற்று அதன் துரிதப்படுத்தலுக்கான ஒரு சூழ்நிலையை அளித்ததுடன் பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கையின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அதிகரித்த வினைத்திறன் மற்றும் ஒரு மேனிலையான ஆற்றல் அளவின் அடிப்படையில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது என இராணுவமயப்படுத்தலை அது நியாயப்படுத்தியது. இது இராணுவம் பற்றிய மக்கள் பார்வை, அரசியலமைப்பு ஜனநாயகத்தைப் பேணுதல், மற்றும் இலங்கையின் அண்மைய கடந்த காலத்தின் பின்னணி, இனங்களுக்கிடையிலான கருத்து வேறுபாட்டுப் பிரச்சினைகள் தொடர்பாக ஓர் எண்ணற்ற பிரச்சினைகளின் எழுதலுக்கு வழி கோலுகிறது.

நவெம்பர் 2019 இல் கோட்டாபாயா ராஜபக்ச தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து ஓர் எண்ணற்ற வழிகள் மூலமாக இராணுவமயப்படுத்தல் நிகழ்ந்துள்ளது. முதலில், இது இராணுவ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் ஆகிய இரு தரப்பையும் அரசினுள் அதிகார நிலைகளில் நியமிப்பதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

### *இராணுவ நியமனங்கள் மற்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்*

இராணுவ நியமனங்கள் ஒரு தொகையான தலைமைத்துவ மற்றும் நிர்வாக வகிபாகங்களில் இடம்பெற்றது. விவசாயத்திலிருந்து ஊழல் ஆணைக்குழு வரையென பன்மைத்துவ துறை சார்ந்த பல்வகை அரச நிறுவனங்களில் 39 தலைமைத்துவ பதவிகள்[59] தற்போது இராணுவ அதிகாரிகளால் வகிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு அரச அமைப்புகளில் அதிகார பதவிநிலைகளில் இராணுவ ஆட்களின் நிறுத்துதலுக்கு மேலதிகமாக, அரச இயந்திரங்களின் நிறுவனமய மீள்கட்டமைத்தலிலும் கூட இராணுவமயப்படுத்தல் உள்ளது. மிகவும் குறிப்பாக, பொலிஸ் மற்றும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு உட்பட, 31 அரச நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வர்த்தமானி மூலமாக அறிவித்து அவற்றைக் கொண்டு வந்ததின் மூலம், அரச இயந்திரங்கள் மேலாக இராணுவம் கட்டுப்பாட்டை அதிகரிப்பது காணப்பட்டது.[60]

தற்போதைய பல்கலைக் கழகங்கள் சட்டம் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரவெல்லைக்கு வெளியே ஒரு சமாந்தர உயர் கல்வி கட்டமைப்பை உருவாக்குவதைப் பிரேரிக்கின்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழக (KNDU) சட்டமூலத்தின் அண்மைய சமர்ப்பணத்துடன் கல்வித்துறைக்கும் கூட இராணுவமயப்படுத்தும் முயற்சிகள் நீடிக்கப்பட்டுள்ளன.[61] பல்கலைக் கழகம்

---

[59] "கூட்டு ஊடக அறிக்கை: களமுனையிலிருந்து சபைக்கூட்ட அறை வரை - இலங்கையின் இராணுவமயப்படுத்தல்" (From the Battlefield to the Boardroom – the militarisation of Sri Lanka) 19 ஜனவரி 2021. இலங்கையின் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர் (JDS); https://itjpsl.com/assets/press/ENGLISH-Battlefield-to-Boardroom-copy.pdf

[60] கந்தனி கிரிந்தி, "பொலிஸ், அரச புலனாய்வுச் சேவைகள், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு உட்பட 31 நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன" (31 institutions including Police, SIS, TRC brought under Defence Ministry purview) 12டிசம்பர் 2019. டெய்லி எப்டி;https://www.ft.lk/front-page/31-institutions-including-Police-SIS-TRC-brought-under-Defence-Ministry-purview/44-691465

[61] https://ceylontoday.lk/news/gen-sir-john-kotelawala-national-defence-university-bill-why-it-s-a-bad-idea?fbclid=IwAR2NB3ABxsEoNIXyUMouVx840QeSKTKUbYWKRcJCdPcIHD8tlmB9D_f_n-s

அதிகபட்சமாக நான்கு சிவிலியன்கள் மாத்திரம் உள்ள ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையினால் நிர்வகிக்கப்படுமெனவும் கொ.தே.பா.ப இராணுவத்திற்கு மாத்திரமேயான தகுதிகள் மட்டுமன்றி, நாட்டிலுள்ள எந்தப் பொது உத்தியோகத்தர் களுக்கும் கூட தகுதிகளை வழங்கலாம், என சட்டமூலம் குறிப்பிடுகிறது. அத்தோடு அது சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களில் வழங்கப்படும் கற்கைநெறிகளை அங்கீகரிப்பதற்கு பல்கலைக் கழகத்திற்கு ஆற்றலை அளிக்கின்றதன் மூலம் சிவிலியன் விவகாரங்கள் மீது செல்வாக்கை விஸ்தரித்து, நாட்டில் இராணுவத்தால் நடத்தப்படும் ஒரு சமாந்தரக் கல்வி முறைமையின் உருவாக்கத்திற்கு அனுமதிக்கிறது.

குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவுடன் அரசியல் இணைப்புகளைக் கொண்ட ஒரு நிறுவனமாக இராணுவம், தற்போது சிலிலியன் நிர்வாகம் மீது ஒரு கணிசமான பிடியைக் கொண்டுள்ளதுடன், சிவிலியன் நிறுவனங்கள் மீது மேலும் கட்டுப்பாடுகளை பெறுவதற்கு தயாராக உள்ளது. அதனால் அவர்களது அதிகரித்த நிர்வாக அதிகாரம் பல விதங்களில் இந்த உறவுமுறையின் விளைவான நிறைவேற்றதிகாரத்தின் ஒரு நீடிப்பாகும். பணியாட்சித்துறையில் வளரும் இந்த அதிகாரத் தளம், ஜனாதிபதியால் வைத்திருக்கப்படல், இந்த அரசாங்கத்தின் கீழ் நாங்கள் கண்ட நிறைவேற்றதிகார தீவிரப்படுத்தலின் ஒருங்கு நிகழும் செய்முறையுடனும் கூட பிணைந்து கொள்கிறது.

### *பெருந்தொற்று பதிலிறுத்தலின் இராணுவமயப்படுத்தல்*

பெருந்தொற்று பதிலிறுத்தலின் அனைத்து மட்டங்களிலும் இராணுவம் சம்பந்தப்படுதலுடன், கொவிட்-19 பதிலிறுத்தலின் இராணுவமயப்படுத்தல் மேற்குறிப்பிட்ட போக்குகளை தீவிரப்படுத்தின.

இதில் முதலாவது, தனிமைப்படுத்தல் நிலையங்களை கட்டியமைத்தல் மற்றும் நடத்துதல், பொது முடக்கங்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், இராணுவப் புலனாய்வை உபயோகித்து நோய்த் தொடர்புக்குள்ளானவர்களைத் தேடிக் கண்டறிதலை மேற்கொள்ளுதல், மருத்துவக் கட்டுமானங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் சில தடுப்பூசி மையங்களை நடத்துதல் என இராணுவம் பெருந்தொற்று பதிலிறுப்பின் அமுல்படுத்துதலில் அதிகம் சம்பந்தப்பட்டிருந்தது.[62]

இராணுவம், பெருந்தொற்று கொள்கை நடைமுறைப்படுத்துதலில் ஈடுபட்டது மாத்திரமின்றி பொதுச் சுகாதார முறைகளின் நடைமுறைப்படுத்தப்படும் போது அவை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செய்முறைகளிலும் கூட ஈடுபட்டது. கொவிட்-19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவராக ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனத் தெரிவில் இது தெளிவாகியது.[63] மாவட்ட மட்டத்தில் பெருந்தொற்று பதிலிறுத்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான 'பிரதான ஒருங்கிணைப்பாளர்கள்' வகிபாகங்களுக்காக 25 இராணுவ மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகளும் கூட தெரிவு செய்யப்பட்டனர்.[64] இந்த வகிபாகங்களில், அவர்களின் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் பெருந்தொற்று பதிலிறுப்பு சம்பந்தமான விடயங்கள் மீதான அதிகாரமும் இவ்வதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. மாவட்ட

[62]மீரா ஸ்ரீநிவாசன், "கொவிட்-19 | பெருந்தொற்றை எதிர்த்து நாடு போராடுவதற்கு இலங்கை இராணுவம் உதவுகிறது" ("COVID-19 | Sri Lankan military is helping the country fight the pandemic") 15 ஏப்பிரல் 2020. த ஹிந்து;https://www.thehindu.com/news/international/covid-19-sri-lankan-military-is-helping-the-country-fight-the-pandemic/article31350778.ece

[63]அதே மூலம்

[64]"கொவிட்-19 கட்டுப்பாட்டு பணிகளுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தங்களது பணிகளை ஆரம்பிக்கின்றனர்" (District Coordinators for COVID-19 Control Work Commence Their Work) 1 ஏப்பிரல் 2021. இலங்கை இராணுவம்; https://www.army.lk/news/district-coordinators-covid-19-control-work-commence-their-work

மட்டத்தில் ஏற்கனவே இருக்கும் நிர்வாக மற்றும் அரசியல் படிநிலைகளுடன் இந்த அதிகாரிகளின் அதிகாரம் எவ்வாறு செயற்படும் என்பதில் அங்கு தெளிவின்மை உள்ளது. நாட்டில் கொவிட்-19 முதன்மைக் கரிசனத்திற்குரிய விடயமாகவுள்ள இத் தருணத்தில், இவ்வாறு இந்த பிரதான ஒருங்கிணைப்பாளர்கள் பெருந்தொற்று பதிலிறுப்புக்கு சம்பந்தமான எந்தத் தளவெளியிலும் பிரயோகிக்கும் ஆற்றலுடனான ஒரு பரந்த செயலதிகாரம் கொண்ட அரசியல் ஆணையைக் கொண்டிருப்பார்கள்.

குறித்த துறைசார் விடயங்களில் நிபுணத்துவமில்லாது இராணுவ அதிகாரிகள் தேவையான அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்டுள்ள சிவில் சேவகர்களை ஓரந்தள்ளி அவர்களுக்கு சமனாக அரச இயந்திரத்தில் முக்கியமான விடயங்களிற்கு பொறுப்பெடுத்துக் கொண்டதை இது ஏற்படுத்தியது.

இந்த நிலைமை இராணுவத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் பிரசைகளின் கண்ணோட்டம் தொடர்பிலும் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. நிறைவேற்றதிகாரத்தின் அதிகரித்த தீவிரமயமாதல் மற்றும் இ.பொ.பெ ஆல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஒரு பாராளுமன்றம் என்பது அரசாங்கத்தின் இவ்விரு அங்கங்களிலும் உள்ளவர்களால் இராணுவத்தின் மீதான மேற்பார்வை கண்ணோட்டம் பெரிதும் நடத்தப்படுவதையும் இராணுவம் அவர்களுடன் ஆழமான பிணைப்புகள் மற்றும் பொதுவான கட்சி அரசியல் நலன்களைக் கொண்டுள்ளது என்பதையும் கருதுகிறது.

கட்டமைப்பு ரீதியிலிருந்தான பிரச்சினைகளை விட இராணுவம் குறித்து அறியப்பட்ட அதன் குணாதிசயத் தன்மை தொடர்பான பிரச்சினைகளும் அங்கேயிருந்தன. தேசிய பாதுகாப்பு விடயத்திலுள்ள ஒரு குறித்த தொகுதிப் பிரச்சினைகளை கையாள்வதற்கான ஏற்பாடே இராணுவமென்பதாகும். இராணுவத்தின் பல்வேறு நிறுவன ரீதியான அம்சங்கள் இந்த தேவைகளுக்குப் பொருந்துவதற்கே பரிணாமம் அடைந்தன. பெருந்தொற்று அல்லது அவற்றின் சொந்த முறைமைகள் மற்றும் நிபுணத்துவ அமைப்புகளைத் தேவைப்படுத்தும், மிகவும் பரந்ததாக பொதுக் கொள்கையின் ஏனைய பல விடயப் பகுதிகள் போன்ற பிரச்சினைகளுடன் கையாள்வதற்கு அந்த குணாதிசயங்கள் மிகவும் பொருத்தமானவை இல்லை. பெருந்தொற்றுப் பதிலிறுப்பில் இராணுவத்தின் முக்கிய வகிபாகம் பின்னையதை ஒரு விதமான பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும், அதனால் அந்த வகையான பிரச்சினை இராணுவம் பதிலிறுப்பதற்குப் பொருத்தமானது என மீள்வடிவமைப்பதனுடனும் இணைந்ததாக இருந்தது.[65] பெருந்தொற்றுப் பதிலிறுப்பு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதில் பாதுகாப்புமயப்படுத்திய எண்ணக்கரு பல்வேறு எதிர்மறையான விளைவுகளையே ஈட்டியது.

2020, ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்களின் தனிமைப்படுத்தலில் இராணுவத்தின் கையாளுதலின் போது இது தெளிவாக வெளிக்காட்டப்பட்டது.[66] பணியாளர்கள் பலவந்தமான வகையிலும் தேவையற்று முரண்படும் வகையிலுமாக ஈடுபடுத்தப்பட்டனர். சுற்றி வளைக்கப்பட்டு சன நெருக்கடியான பேருந்து களில் ஏற்றப்பட்டு நிலைமைகள் மோசமாக இருந்த தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன் உடைமைகளை எடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஐந்து

[65]"கொவிட்-19 பெருந்தொற்றுக்கு இராணுவத்தின் பதிலிறுப்பு" (Military Response to COVID-19 Pandemic ) 27 October 2020. பாதுகாப்பு அமைச்சு; http://www.defence.lk/Article/view_article/2463?fbclid=IwAR2KZ0FHQt6VQnfWNUhebfg4dtxABatALrNQ8tTaaRJTk5ZFlqRtETfGW5A

[66]போராம் ஜங், ,"இலங்கை: கொவிட-19 பதிலிறுப்பின் இராணுவமயப்படுத்தலுக்கான விலையை நலிந்த நிலையிலுள்ள குழுக்கள் கொடுப்பனவு செய்கின்றன" (Sri Lanka: Vulnerable groups pay the price for militarisation of COVID-19 response ) 27 ஒக்டோபர் 2020.டெய்லி எப்டி;https://www.ft.lk/opinion/Sri-Lanka-Vulnerable-groups-pay-the-price-for-militarisation-of-COVID-19-response/14-708073

அல்லது பத்து நிமிடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டது. அவர்கள் எங்கே கொண்டு செல்லப்படுகின்றனர் என்று பணியாளர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் பி.சி.ஆர் (PCR) பரிசோதனைகள் நடத்தப்படவில்லை மற்றும் முகக்கவசங்களும் வழங்கப் படவில்லை. இதனால் இத்தகைய சன நெருக்கடியான நிலைமைகளில் கொவிட்-19 தெற்று ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்தன. பயணக்கட்டுப்பாடுகளை மீறியமைக்கான ஒரு தண்டனையாக முஸ்லிம் பிரசைகளை நிலத்தில் முழந்தாளிட வைத்த பிறிதானதொரு சம்பவத்திலும் கூட இராணுவத்தினர் ஈடுபட்டனர்.[67]

இவை வெறுமனே தனியொரு உதாரணங்களல்ல, மாறாக பிரச்சினையைத் தீர்ப்பதில் சில வழிமுறைகளை விரும்பும் இராணுவத்தின் பொதுவாக அறியப்பட்ட தன்மைகளைப் பிரதிபலிக்கும் விதங்களாக இருந்ததுடன் அவை தேவையற்ற வகையில் மோதல் தன்மை கொண்டதாக அல்லது நிர்வாக நேரம் மற்றும் சக்தியின் வினைத்திறனில்லாத ஒரு உபயோகத்தையும் விளைவிப்பவையாகவும் இருக்கக்கூடும்.

உதாரணத்திற்கு, தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தவும் மற்றும் அதனுடன் இணங்காதவர்களை பிடிப்பதற்குமாக 'இராணுவ துரித எதிர்வினை மோட்டார் சைக்கிள் படையணி' இன் உபயோகம், அவ்வாறே விமானப் படையால் ட்ரோன்கள் பாவிக்கப்பட்டமை என்பன இவ்வாறான இராணுவ முன்னெடுப்புகளின் உதாரணங்களாகும்.[68] இந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஒரு தண்டித்தல் அணுகுமுறையை மேற்கொள்கின்றதுடன் முடக்க விதிமுறைகளை மீறியவர்களைப் பிடிக்கும் நோக்கத்தை திருப்தி செய்தன. பெருந்தொற்றுப் பதிலிறுப்பின் போது இராணுவத்திற்கான வளங்களின் ஒதுக்கீடு, மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மீது செலவிடும் நிர்வாக நேரம் சக்தி என்பன இதற்கான கவனமும் வளங்களும் ஏனைய விடயங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கலாமென்பதின் அடிப்படையில் ஒரு அமையச் செலவை உருவாக்குகின்றன. தீவிர கண்காணிப்புப் பிரிவுக்கான படுக்கைகள் மற்றும் ஏனைய மருத்துவ வளங்களுக்கான பற்றாக்குறைகளுடன் பொதுச் சுகாதாரத்திற்கு முன்னொருபோதுமில்லாது இருந்த வருடத்தின் போதும் கூட இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடப்பதை நாங்கள் கண்டது உண்மையில் குறிப்பிடப்படக் கூடியதாக இருந்தது.[69]

அரசக் கட்டமைப்பிற்குள் இராணுவத்தின் அதிகளவிலான காலூன்றுதல் என்பது இலங்கையின் அண்மைக்கால வரலாறு மற்றும் ஆயுதப்படை உறுப்பினர்களுக்கெதிரான போர்க் குற்ற குற்றச்சாட்டுகள் என்பவற்றின் பின்னணியில் இலங்கை அரசியலுக்கு மேலும் பாதிப்புகளையே கருதுகின்றன. ஒரு நிறுவனவமைப்பாக இராணுவத்தின் நலன்களும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பவர்களும் நேரடியாக எதிர்த்துக் கொள்ளும் ஒரு நிலைமைக்கே வரலாறு எங்களைக் கொண்டு வந்துள்ளது.

---

[67]மீரா ஸ்ரீநிவாசன், ",இராணுவம் தாக்கியமை மற்றும் முஸ்லிம்களின் அவமதித்தல இலங்கை ஆராயவுள்ளது" (Sri Lanka to probe 'army attack and humiliation' of Muslims) 20 ஜூன் 2021. த ஹிந்து ;https://www.thehindu.com/news/international/sri-lanka-to-probe-army-attack-and-humiliation-of-muslims/article34871262.ece

[68]"வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை இராணுவம் பொலிஸிற்கு உதவுகிறது"( SLA riders assists Police to contain virus spread) மே 29, 2021. பாதுகாப்பு அமைச்சு; https://www.defence.lk/Article/view_article/3505
Zulfick Farzan "Drone Camera donated to the Army for Its COVID-19 Control Projects" 15 April 2020. News First; https://www.newsfirst.lk/2020/04/15/drone-camera-donated-to-the-army-for-its-covid-19-control-projects/

[69]"இளைஞர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கிறது: ஆக்கவளம் கொண்ட & தொழில்சார் முறை இராணுவ வீரர்களாக எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்" (Youth Recruitment Drive Begins: Join Us as Productive & Professional Army Soldiers) 24 ஜனவரி 2021. இலங்கை இராணுவம்;https://www.army.lk/news/youth-recruitment-drive-begins-join-us-productive-professional-army-soldiers

அரசின் அதிகரிக்கும் இராணுவமயப்படுத்தல், கடுமையான துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட, தற்போது இராணுவம் மற்றும் நிர்வாகம் ஆகிய இரண்டிலும் அதிகாரப் படிநிலை ரீதியாக உயர் பதவிகள் வகிக்கின்ற சில இராணுவ அதிகாரிகளின் நலன்களோடு இணைந்ததான அரசின் நலன்களிற்கு ஓர் அதிகரித்த இனங்காணல் தேவைக்கான உயர்வைக் கொடுக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில், அதிகரித்த இராணுவமயப்படுத்தல் என்பது நிர்வகித்தல் மற்றும் அத்தியாவசிய பொதுச் சுகாதாரப் பணிகள் இராணுவம் நிர்வகிக்கும் அதே சமூகங்களுக்கு எதிராக குற்றம் புரிந்ததாக குற்றஞ் சாட்டப்படும் ஒரு நிறுவன அமைப்பினாலேயே மேற்கொள்ளப்படுவதைக் கருதுகிறது.[70]

இதற்கு மேலதிகமாக, நோய்த் தொடர்பைத் தேடிக் கண்டு பிடிப்பதில் இராணுவத்தின் ஈடுபடுத்தல் அதற்கான நியாயப்படுத்துதல் மற்றும் இராணுவத்தின் கண்காணித்தல் உட்கட்டுமானத்தின வளர்ச்சிக்கு அனுமதித்துள்ளது. அச்சுறுத்தும் நோக்கங்களுக்காக மனித உரிமை ஆர்வலர்கள், சிறுபான்மையினர் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் கண்காணிக்கப்பட்டு வந்த ஒரு பின்னணிச் சூழலில், இந்தக் காண்காணிப்பை இயல்பானதாக்குதல் மற்றும் நியாயப்படுத்துதல் ஒரு கவலை தரும் போக்கையே குறிப்பிடுகிறது.

### *இராணுவமயமாக்கலுக்கான கருத்தியல் ரீதியான நியாயப்படுத்தல்கள்*

இராணுவமயப்படுத்தலுக்கான நியாயப்படுத்தல்கள் இந்த அரசாங்கத்தின் கீழ் இரண்டு வேறுபட்ட ஆனால் குறைநிரப்பும் வழிகளை எடுக்கின்றன. ஒன்று, 'உண்மையான மக்களின்' ஒரு நிறுவனமாக இராணுவம் பிரதிநிதித்துவம் செய்கிறது. இரண்டாவது, இராணுவம் பயனுறுதியான தொழில்நுட்பக் கோட்பாட்டுச் செயற்பாட்டாளராக, மந்தமான மற்றும் செயலற்ற பணித்துறையாட்சிக்கு வினைத்திறனைக் கொண்டு வருகின்ற ஒரு வகை என்பதாகும்.

ஊழல்வாதிகளாகவும் தொடர்புபடுத்த முடியாதவர்களாகவும் கருதப்படும் ஸ்தாபிக்கப் பட்ட ஆட்சியதிகாரத்தினர் மற்றும் அரசியல்வாதிகளை விட மக்களின் ஒரு கூடுதல் உண்மையான பிரதிநிதியாக இராணுவம் பார்க்கப்பட்டது. நாட்டிலுள்ள ஏனைய அரசியல் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், குறைந்தபட்சம் அதிகளவிற்கு சிங்கள இ.பொ.பெ வாக்குவங்கியைப் பொறுத்தவரை, இராணுவம் மீது உண்மையில் பொது மக்களின் ஒரு நம்பிக்கை மட்டம் இடப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை 16.7% உடன் ஒப்பிடுகையில் இராணுவம் மீதான நம்பிக்கை 91.4% உடன், சிங்கள சமூகத்திடையே இராணுவம் ஒரு உயரந்தளவிலான அங்கீகார மட்டத்தை வைத்திருப்பதை, 2019 இல் சமூகக் குறிக்காட்டி அமைப்பால் நடத்தப்பட்ட ஒரு மதிப்பாய்வு சுட்டிக்காட்டுகிறது.[71]

கிழக்கு மாகாணத்தில் இராணுவம் 23% என அதிகளவுக்கான வேலைவாய்ப்பிற்காகக் கருதப்படுமளவு, குறைந்தபட்சம் அங்கே ஒரு பகுதியளவிலான பொருளாதார அடிப்படை உள்ளது. வேலைவாய்ப்பின்மை வீதங்கள் அதிகமாகவுள்ள முக்கியமான மக்கட் தொகைப்

---

[70] கொள்கை ஆராய்ச்சிக்கான அடையாளம் நிலையம் (ACPR), "இலங்கையின் இராணுவமயப்படுத்தப்பட்ட பதிலுறுப்பு மனித உரிமைகளுக்கு பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது" (Sri Lanka's militarised response poses grave threats to human rights) 30 எப்பிரல் 2020. கொள்கை ஆராய்ச்சிக்கான அடையாளம் நிலையம் இணையத்தள முகவரியில் கிடைக்கும்; http://adayaalam.org/situation-brief-no-3-covid-19-sri-lankas-militarised-response-poses-grave-threats-to-human-rights/

[71] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சமூகக் குறிக்காட்டி - இலங்கையின் 70 வருட சுதந்திரம் தொடர்பான பெறுமதிகள் & உளப்பாங்குகள் மதிப்பாய்வு - https://www.cpalanka.org/wp-content/uploads/2019/02/70-Years-of-Independence-Survey-Report-Social-Indicator.pdf

பிரதேசங்களில் இராணுவம் வருமானத்திற்கான ஒரு முதன்மை மூலமாக செயற்படுகிறது. மக்கள் தொகையின் ஒரு பிரிவு 'இரண்டாம் நிலைப் பாடசாலையைப் பூர்த்தி செய்து ஆனால் மேலதிகக் கல்வி இல்லாது, வேலைவாய்ப்பின்மை மட்டங்கள் அங்கு உயர்வாக உள்ளது என ஒருவர் கருதுகையில், அங்கே இராணுவம் அனைத்து வேலைவாய்ப்பின் 17% இற்கு வகை கூறியது'.[72] 18-25 வயது கொண்ட சிங்கள ஆண்களின் மக்கள் தொகையை ஒருவர் கருதும் போது, இந்த மக்கட் தொகையிலுள்ள அரைவாசி ஆண்கள் மேற்குறிப்பிட்ட விபரங்களுக்குப் பொருத்தமானவராகின்றனர்.[73] கிராமத்துப் பகுதிகளில் தனியார் துறை அல்லது சிவிலியன் பொதுத்துறை வேலைகள் கிடைப்பது கடினமானது, இராணுவம் ஒரு பாதுகாப்பான மற்றும் மிகவும் தேவைப்பட்ட வருமான மூலத்தை வழங்குகிறது. கூடுதல் சிறுபான்மையினரை இராணுவத்திற்குள் ஆட்சேர்க்கும் தீவிரமான முயற்சி மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் விரிவாக்கல் என்பவற்றுடன் சிறுபான்மைச் சமூகங்களினுள்ளும் இதைப் போன்ற மாற்றத்தை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியை நாங்கள் காணக்கூடும்.

இராணுவமயப்படுத்தலை ஆதரிக்கும் மற்றொரு பிரதான விளக்கம் இராணுவம் ஒரு வினைத்திறனான நிறுவனரீதியான செயற்பாட்டாளர் என்பதாகும். இராணுவம், நிர்வாகம் மற்றும் கொள்கை அமுலாக்கத்தில் ஒரு வெட்டித்தனமல்லாத அணுகுமுறையை எடுக்கக் கூடியதானது என அதற்கு சாயம் பூசப்பட்டுள்ளது. இந்த விளக்கம் குறிப்பாக, வெற்றிகரமான பெருந்தொற்றுப் பதிலிறுப்பு என ஆரம்பத்தில் கருதப்பட்ட ஒன்றில் இராணுவம் முதலில் உபயோகிக்கப்பட்டு மற்றும் அவர்களின் பங்களிப்புக்கு பாராட்டப்பட்ட கொவிட்-19 பதிலிறுப்பின் ஒரு பின்னணியில் குறிப்பிடப்பட்டதாகும். பொதுச் சுகாதார நெருக்கடியில் தற்போதும் நாம் காணும் நிலைமை பட்டவர்த்தனப்படுத்துமாற் போல் பெருந்தொற்றுப் பதிலிறுப்பு வெற்றி குறித்தான விளக்கம் முற்றிலுமாக கண்டறியப் படாதவொன்று என நிரூபிக்கப்பட்டுள்ளது.

பல ஆதாரங்கள் கூறுவதற்கு உள்ளது, எனினும், இராணுவ வினைத்திறன் பற்றிய விளக்கம் மிகவும் பொதுவாக நியாயப்படுத்தப்படவில்லை. உண்மையில், இராணுவம் தன்னை ஒரு வினைத்திறனற்ற நிறுவனமாக பல வழிகளில் எடுத்துக் காட்டியுள்ளது. 2019 இல், ஆயுதப்படை தொடர்பான கணக்காய்வாளார் தலைமையதிபதியின் அறிக்கை, பொதுநிதியை விரயம் மற்றும் தவறான முகாமைத்துவம் செய்யும் ஓர் எண்ணற்ற சம்பவங்களை வெளிப்படுத்தி, இராணுவத்தின் வினைத்திறன் தொடர்பான விளக்கம் மீது சந்தேகத்தை எழுப்புகிறார்.[74] அதிகரித்த வினைத்திறனின் அடிப்படையில் இராணுவமயப் படுத்தலுக்கான இந்த நியாயப்படுத்தல்கள், அதிகரித்தளவில் தேய்ந்து மெலிதாவதால், இந்த அரசியல் செய்முறைக்கான ஆதரவு பலவீனமானது என்பதை நாங்கள் காணக்கூடும்.

### *நிலமும் இராணுவமயமாக்கலும்*

நாட்டில் இராணுவமயப்படுத்தல் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில், நிலங்களுக்கான சொத்துரிமைகள் தொடர்பாக இராணுவம் ஆற்றும் வகிபாகத்தையும் கூட நாங்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ்வறிக்கையில் மேலும் ஆராயப்படுமாற் போலவும் மற்றும் நிலங்களின் சொத்துரிமை மீதான போட்டியில் ஈடுபடும் பிரதான செயற்பாட்டளர்களில் ஒருவராக இராணுவம் உள்ளதினாலும், நல்லிணக்கச் சூழ்நிலையில் நிலம்/காணி இருப்பாட்சி ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது.

---

[72](வேணுகோபால், 2018:113) 'தேசியவாதம்,அபிவிருத்தி மற்றும் இலங்கையில் இன முரண்பாடு'

[73]அதே மூலம்

[74] இலங்கை இராணுவம் - http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/ 2019/ mindept_19/ 1-X/Head222SriLankaArmyE.pdf

பெருந்தொற்றுப் பதிலிறுப்பு, விவசாயம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் உட்பட, இலங்கையில் பல பிரதேசங்களின் ஆட்சியில் அதிகரித்த இராணுவமயப்படுத்தலுடன் நவெம்பர் 2019 இலிருந்து இராணுவமய நீக்கம் மற்றும் பாதுகாப்பு படைகளால் இருப்பாட்சிக்குள்ளாகிய காணிகளை சட்டரீதியான உரிமையாளர்களுக்கு மீளக் கையளித்தல் என்பவற்றிலான முயற்சிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு படைகளால் பெரும் நிலப் பரப்புகளின் தொடரும் இருப்பாட்சி இடம்பெயர்ந்திருத்தலை தனியே தொடரச் செய்வது மட்டுமன்றி, அது வறுமையையும் அதிகரிக்கின்றது. பல்வேறு பிரதேசங்களில் இராணுவம் நடத்தும் பண்ணைகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்கள் இராணுவத்திற்கான வருமானமீட்டும் முயற்சிகளாக பயன்படுகையில், இந்த காணிகளின் சட்டபூர்வமான உரிமையாளர்கள் ஒரு ஒழுங்கான வருமானத்தை ஈட்டுவதற்கு இயலாதுள்ளனர். 'தேசிய பாதுகாப்பு' மற்றும் 'தீவிரமயமற்றதாக்கல்' என்ற போர்வையில் புதிய முகாம்களின் ஸ்தாபிக்கும் முயற்சிகளையும் அம்முகாம்கள் சிறுபான்மையினர் மற்றும் விமர்சகர்களை மேலும் குறி வைப்பதற்கு உபயோகிக்கப்படலாம் என்ற அச்சங்களையும் கூட அண்மைய மாதங்கள் கண்டது.[75]

முப்படைகளும் (இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படை) வடக்கு மற்றும் கிழக்கில் தனியார் மற்றும் அரச ஆகிய இரண்டினதும் பெருமளவிலான நிலப் பிரதேசங்களைத் தொடர்ந்து தம்வசம் வைத்திருப்பதுடன் அவை இராணுவ முகாம் களுக்காக உபயோகிக்கப்படுகின்றன. நீதிமன்றத்தில் சில வழக்குகள் சவால்படுத்தப் பட்டுள்ளதுடன் பல வழக்குகளில் காணிகளை மீளப் பெறுவதற்கு சட்டச் செய்முறைகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலுள்ள சில காணிகள் தொடர்பில் காணப்பட்டது போன்று சில பிரதேசங்கள் சட்டபூர்வ உரிமையாளர்களிடம் கையளிக்கப்படுவதை 2015-2019 கண்டது, ஆனால் ஏனைய பல நிலங்கள்/காணிகள் சட்டபூர்வ உரிமையாளர்கள் அணுகுவழிகள் மற்றும் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு இயலுமாக இருக்கும் என்பதற்கு குறைந்த மற்றும் இல்லாத ஒரு சாத்தியத்துடன் பாதுகாப்பு படைகளால் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைத்திருக்கப்பட்டது. ஆக்கிரமித்தல் இடங்கள் பல வீடுகள் மற்றும் மத அமைவிடங்கள் உட்பட கட்டட அழிவுகளைக் கண்டது, ஆனாலும் நட்டஈடு உட்பட பரிகாரங்களை வழங்குவதற்கு விரிவான முயற்சி எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

போர் நிகழ்ந்த வருடங்களை ஒட்டியதாக இந்த ஆக்கிரமிப்புகளில் பல வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் போன்றவையாக இருந்தன ஆனாலும் ஏனைய பிரதேசங்கள் போருக்குப் பிந்திய ஆக்கிரமிப்புக்களைக் கண்டது. இவை கோப்பாப்புலவு, சிலாவத்துறை, முள்ளிக்குளம், பாணம மற்றும் ஏனைய பல பகுதிகளிலான ஆக்கிரமிப்புகளை உள்ளடக்குகின்றன. இந்த இடங்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், ஆதரவுப் பிரச்சாரங்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களிலான சட்டச் சவால்கள் என்பவற்றுடன் சமூகங்களால் வருடக் கணக்கான போராட்டங்கள் மற்றும் சவால்களையும் கண்டன. எல்லாச் சமூகங்களும் ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்பட்டன ஆனாலும் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்கள் அளவுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்.

பல இடங்கள், காணிகளின் ஆக்கிரமிப்பில் பல செயற்பாட்டாளர்களின் சம்பந்தப் படுதலையும் உள்ளடக்கியிருந்தது. உதாரணத்திற்கு, அம்பாறை மாவட்டத்திலுள்ள, பாணமவில், விமானப் படை மற்றும் கடற் படை ஆகியோரும், அவ்வாறே அதிகளவிற்கு சிங்களச் சமூகங்களைப் பாதிக்கும் காணிப் பிரச்சினைகளில் அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டனர். வருடக் கணக்கான போராட்டங்கள் சில பகுதிகள் விடுவிக்கப்படுதை ஏற்படுத்தியது ஆனாலும் உள்ளூர்வாசிகள் தங்களின் காணிகளை அணுகுவதற்கு இன்னமும் சவால்களை முகங்

---

[75]மார்ச் 13, 2021 அன்று, ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் அவரது உரையில் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவால் புதிய முகாம்களின் தோற்றம் குறிப்பிடப்பட்டது.

கொடுக்கின்றனர். இதைப் போன்ற ஆக்கிரமிப்புகள் மற்றும் சமூகங்களினாலான போராட்டங்கள் வடக்கிலும் காணப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கோப்பாப்புலவில் காணி ஆக்கிரமிப்புகள் மற்றும் போராட்டங்கள் அண்மைய வருடங்களில் மன்னார் மாவட்டத்திலுமான பல சம்பங்களைப் போன்று கவனத்தை ஈர்த்தன.[76] உதாரணத்திற்கு, சிலாவத்துறையில், கடற்படை முஸ்லிம் காணி உரிமையாளர்களுக்குச் சொந்தமான 42 ஏக்கர்கள் தனியார் காணிகளை ஆக்கிரமித்துள்ளது. இந்தக் காணிகள் 1990 களில் த.வி.பு ஆல் வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் இடமபெயர்ந்திருந்த முஸ்லிம் குடும்பங்களுக்குச் சொந்தமானது. சமூகத்தின் போராட்டம் காரணமாக, சில காணிகள் கடற்படையால் சட்டபூர்வமான உரிமையாளர்களிடம் திருப்பியளிக்கப்பட்டன ஆனால் எஞ்சிய காணிகள் பாதுகாப்புத் நோக்கங்களுக்காகத் தேவையென கடற்படையால் கோரப்பட்டன. மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் மற்றொரு இடமாகும், அங்கு வட மேல் மாகாண கடற்படைக் கட்டளைத் தலைமையலுவலகம் கட்டப்பட்டு 2007 இலிருந்து கடற்படை ஆக்கிரமித்துள்ளதுடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக தளத்திற்கான தேவையை கடற்படை நியாயப்படுத்துகிறது. இந்தப் பிரதேசத்தில் சுமார் 1500 ஏக்கர்களை உள்ளடக்கிய கிராமத்ததுடன் 400 குடும்பங்கள் முன்னர் குடிகொண்டிருந்தன. மீண்டும், போராட்டம் காரணமாக, சில காணிகள் விடுவிக்கப்பட்டன ஆனால் இந்தப் பிரதேசத்தில் கடற்படை காணிகளில் தொடர்ந்தும் ஆக்கிரமித்திருக்கிறது.

பாதுகாப்பு படை முகாம்களாக பெரும் பரப்பளவுகளில் நிலங்கள் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதற்கு மேலதிகமாக, சிறிய காணித் துண்டுகளும் கூட வடக்கு-கிழக்கில் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தன. அத்தோடு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்காக விவசாயப் பண்ணைகள், யாழ்ப்பாணத்தில் தல்செவன ஹோட்டல், அம்பாறையில் பாணம வாவி கபானக்கள் மற்றும் திருகோணமலையில் ஈகிள்ஸ் ஹெரிட்டேஜ் கோல்ப் கோர்ஸ் போன்றவற்றை நடத்துவதற்கும் பெருமளவில் நிலப்பரப்புகள் எடுக்கப்பட்டன. இந்த வர்த்தக முயற்சிகள் இராணுவத்தால் செயற்படுத்தப்படுகையில், பிரதேசத்திலுள்ள சமூகங்கள் சம்பந்தப்பட்ட நிலங்கள்/காணிகளை உபயோகிப்பதற்கு இயலாமலிருப்பது அவ்வாறான முயற்சிகளிலிருந்து வருமானம் ஈட்டுவதின் வகைப்பொறுப்பு தொடர்பாக கேள்விகளை எழுப்புகின்றன.

இலங்கை இராணுவத்தின் கீழ் 2021 இல் புதிதாக விவசாயம் மற்றும் கால்நடைப் பிரிவு உருவாக்கப்பட்டது[77] போன்று இராணுவத்தின் மேலும் பன்முகப்படுத்தல் இந்தத் துறைகளினுள்ளும் தெளிவாகியதுடன் விவசாயம் போன்ற ஏனைய துறைகளினுள் மேலும் இராணுவமயப்படுத்தல் தொடர்பான கரிசனைகளையும் எழுப்புகின்றது. பாதுகாப்பு ஸ்தாபனம் மீது பயனுறுதியான மேற்பார்வை (இராணுவ செயற்பாடுகள் மற்றும் வருமானம் ஈட்டும் முறைகளுக்கான பொறுப்புக்கூறல் உட்பட) இல்லாதிருக்கும் ஒரு சூழ்நிலையில் இராணுவம் சிவிலியன் பணிகளில் மேலும் அத்துமீறும் அச்சத்தை இது அதிகரித்துள்ளது. உள்ளூர் விவசாயிகள் நன்கு வளமளிக்கப்பட்ட இராணுவ பண்ணைகளுடன் போட்டியிட வேண்டியிருப்பதால் போட்டித்தன்மை குறித்தான கேள்விகளும் அங்கேயுள்ளன.

இலங்கையில் இராணுவமயப்படுத்தலின் நியாயப்படுத்தல் போருக்குப் பிந்திய வருடங்களில் பெருமளவிலான நிலப்பரப்புகளின் ஆக்கிரமித்தல் தேசிய பாதுகாப்பெனக் குறிப்பிடப் பட்டவற்றுக்கு அப்பால் புதிய துறைகளில் இராணுவம் கால் பதிக்கும் முயற்சியைக் காண்கிறது. பாதுகாப்பு படைகள் நிலங்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டும்

[76]"எங்கள் நிலம், எங்கள் வாழ்க்கை" மக்களின் காணி ஆணைக்குழு அறிக்கை 2019-2020

[77]"இலங்கை இராணுவம் விவசாயம் மற்றும் கால்நடைப் பிரிவை ஆரம்பிக்கிறது" (Sri Lanka Army sets up Agriculture and Livestock Corps) 8 ஜனவரி 2021. டெய்லி நியூஸ்; http://www.dailynews.lk/2021/01/08/local/ 238255/sri-lanka-army-sets-agriculture-and-livestock-corps

உபயோகிக்கவில்லை ஆனால் வருமானம் ஈட்டுவதற்காகவென விவசாயம் மற்றும் சுற்றுலா உட்பட பொருளாதாரம் உருவாக்கும் தொழில்முயற்சிகள் காண்பிக்கின்றன. தங்களது காணிகள் மற்றும் வாழ்வாதாரங்கள் மறுக்கப்பட்ட உள்ளூர் சமூகங்களுக்கான ஒரு விலையாக இவை வந்துள்ள வேளையில் ஆக்கிரமிப்பு படைகள் அவர்களது காணிகளின் பயன்களை அனுபவிக்கின்றனர். காணிகளிலிருந்து எவ்வாறு வருமானம் ஈட்டப்பட்டது தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான கரிசனைகளை எழுப்புகிறது. மேலும், தசாப்த காலங்களாக இராணுவத்தின் ஆக்கிரமித்தல் மற்றும் அவர்களின் வருமானம் ஈட்டல் நடவடிக்கைகள் அந்த நடை முறைகளின் வழமைப்படுத்தலை ஏற்படுத்தின. அத்தகைய ஆக்கிரமிப்புகளினால் பாதிக்கப் பட்ட உள்ளூர் சமூகங்களுக்கு அர்த்தபுஷ்டியான பரிகாரங்களின்மை சமூகங்களை மேலும் விளிம்புநிலைப்படுத்துவதையும் சீற்றத்தை போஷிப்பதையும் ஏற்படுத்துகிறது. பரிகாரங் களுக்கான நேர்மையான முயற்சிகள் இல்லாத நிலையில், இவை எதிர்காலத்தில் மோதல்களுக்கு சாத்தியமான விடயங்களாக இருக்கும்.

## 3. நல்லிணக்கம்

### *இனப் பெரும்பான்மைவாதம் மற்றும் புதிய கட்டமைப்புகள்*

நாட்டில் சுதந்திரத்திற்கு பின் இனப் பெரும்பான்மைவாதக் கருத்தியல் ஆதிக்க அரசியல் சக்தியாக இருந்ததுடன் சிறுபான்மைச் சமூகங்களின் அடக்குமுறை தொடர்பில் அது கொண்டிருந்த வகிபாகம் நிச்சயமாய் ஒரு புதிய செயல்முறையாக இருக்கவில்லை. எனினும், ராஜபக்ச அரசாங்கம் மீளவும் ஆட்சிக்கு திரும்பியதுடன் சிங்கள தேசியவாத அரசியல் செயல்திட்டத்தின் மீளுக்கப்படுதலையும், அதனால் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செய்முறைகளுக்கு மேலும் இடையூறுகளை நாங்கள் கண்டோம். குறிப்பாக, முன்னைய அரசாங்கத்தின் கீழ் இந்த செயல்திட்டம் ஒரு தற்காலிக விலகலாக சிங்கள தேசிய வாதிகளால் கருதப்பட்டதின் பின்னர், பெரும்பான்மைவாதக் கருத்தியலின் கொள்கைகளை கூடுதல் நெருக்கமாகப் பின்பற்றுவதற்கு இலங்கை அரசின் தன்மை மற்றும் செயற்படுதலை மாற்றும் முயற்சிகளின் ஒரு தீவிரப்படுத்தலை நாங்கள் கண்டோம்.

அரசாங்கத்தின் சிங்கள பௌத்த வாக்காளர்கள் பெரும் எண்ணிக்கையில் வாக்களிப்பதற்கு வருவதை 2019 மற்றும் 2020 தேர்தல்கள் இரண்டும் கண்டது. 2019 தேர்தல், பெரும் அழிவை ஏற்படுத்திய ஒரு பயங்கரவாதத் தாக்குதல் பின்னணிக்கு எதிராக ஆள்வதற்கு ஒரு வலுவான தலைவருக்கு ஓர் ஆணையை அளிப்பதற்கானது என்று கட்டமைக்கப் பட்டதோடு, பெருந்தொற்றின் முதலாவது அலையை வெற்றிகரமாக சமாளித்ததின் பின்னர் உடனாகவே 2020 தேர்தல் நடைபெற்றதுடன் அதில் அரசாங்கத்தின் பாரிய வெற்றி அதற்கான புகழின் ஓர் உறுதிப்படுத்தலாக அமைந்தது. இந்தத் தேர்தல்களின் செய்திகள் மற்றும் குறியீடு மற்றும் பின்னர் பதவியேற்கும் போதான வைபவங்கள் பௌத்த கலாச்சார வரலாற்று பின்னணி கொண்ட இடங்களில் இடம் பெற்றமை அரசாங்கம் எடுக்கும் பாதையின் திசை குறித்து சந்தேகம் எதனையும் ஏற்படுத்தவில்லை. பிரச்சாரங்கள் மற்றும் பின்னதான தீர்மானம் மேற்கொள்ளலில் பௌத்த துறவிகள் முக்கிய பாத்திரங்களை வகித்தனர், பலர் முக்கிய தலைமைத்துவப் பாத்திரங்கள், செயலணிகள் மற்றும் சபைகளுக்கு நியமிக்கப்பட்டனர். செய்தி தெளிவானதாக இருந்தது. இழந்ததை மீட்பதற்கும் மற்றும் பௌத்த மேலாதிக்கத்தை இலங்கையில் மீளுறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் ஆணை அளிக்கப்பட்டுள்ளது என்பது அதுவாகும்.

புதிய கொள்கை மற்றும் சட்ட முன்னெடுப்புகள் மற்றும் ஏனைய நடைமுறை நடவடிக் கைகள் மூலமாக இது இடம் பெறக் காணப்படுகிறது. 2020 இல் அரசியலமைப்பிற்கு 20ஆவது திருத்தம் பற்றியதான விவாதங்கள், நிறைவேற்றதிகார ஆட்சி மற்றும் அதிகாரத்தை மையப்படுத்துதல் மூலம் அரசின் கட்டமைப்பை மீள்வடிவமைப்பதற்கு கருதும் ஒரு புதிய அரசியலமைப்பிற்கு இட்டுச்செல்லும் அவர்களது கோரிக்கைகளை அரசாங்கம் மீளுறுதிப்படுத்துவதைக் கண்டன. பசில் ராஜபக்சவின் கூற்றுகள் இந்த சிந்தனையைப் பிரதிபலித்தன: *"ஓர் அரசியலமைப்புக்கு தூண்கள் மற்றும் வடிவமைப்பு தேவை. துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய நிலைமையில் இவை காலத்தில்கு காலம் மாறியுள்ளன. 13 ஆவது திருத்தம் முதலாவது மிகப் பெரிய அடியாகும். பின் 16 ஆவது, 18 ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்கள். ஒவ்வொரு அரசியலமைப்பும் ஒரு தேசத்திற்கான அத்திவாரம் போன்றது. ஆனால் இப்பொழுது எங்களுடையதோ வேறெதற்கோ இடப்பட்ட அத்திவாரத்தில் கட்டப்பட்ட கட்டடம் போன்றதுடன் இதற்குத் தளங்கள் பல பின்னர் சேர்க்கப்பட்டன. ஒரு நாள் அந்தக் கட்டடம் தகர்ந்து விழும், மக்கள் இறப்பார்கள்".*[78] பொது அறிக்கைகள் மற்றும்

[78]உதித்த ஜயசூரிய - மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எங்களுக்குத் தருவது மக்களைப் பொறுத்தது – பசில் - https://www.ft.lk/opinion/Up-to-the-people-to-give-us-a-two-thirdsmajority-Basil/14-703809, 29 July

அரசாங்கத்தில் முக்கிய செயற்பாட்டாளர்களை நிலைப் படுத்துவது என்பவற்றைக் கருதும் போது, புதிய அரசியலமைப்பு 19ஆவது திருத்தம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மேலும் நகர்வடைந்து வலுவான நிறைவேற்று ஜனாதிபதியை உருவாக்கக் காணப்படும். பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஏற்பாடளிக் கப்பட்ட மாகாண சபைகள் மற்றும் வடிவமைப்புகள் நீக்கப்படக் கூடும் அல்லது அதிகாரப் பகிர்வு வெறுமனே பெயரளவிலானவை எனுமளவிற்கு பலவீனப்படுத்தப்படக் கூடும்.

புதிய அரசியலமைப்பிற்கான ஆணை 2020 இல் அதன் பாரிய தேர்தல் வெற்றியுடன் வழங்கப்பட்டதெனவும் அதனால் வரைதலை ஆரம்பிப்பதற்கு நிபுணர்களின் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது அரசாங்கத்தின் செய்தியாகும். அரசியலமைப்பின் பிரேரணை களுக்கான ஒரு பகிரங்க அழைப்பு குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் பலர் சமர்ப்பணங்களையும் பின்னர் குழுவுடன் சந்திப்புகளையும் மேற்கொண்டனர். இதனை எழுதும் சமயத்தில், இந்தச் செய்முறையின் நிலைப்பாடு பற்றி மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே உள்ளன. இந்த அரசாங்கத்தின் அதிகரிக்கும் மக்கள் வெறுப்பு மற்றும் எதிர்கொள்ளும் பல்வித சவால்களைக் கருதும் போது, அத்தகையதொரு செயன்முறையுடன் முன்செல்வதற்கு அரசாங்கம் அரசியல் துணிவை அல்லது முதலைக் கொண்டுள்ளதா என்பது தெளிவற்றுள்ளது.

தற்போதைய அரசியல், சுகாதார மற்றும் பொருளாதார சவால்களைக் கவனத்தில் கொள்ளும் போது ஒரு புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட முடியுமா என்பது பற்றி இன்னமும் நிச்சயமற்ற நிலைமைகள் உள்ளதுடன், உத்தேசிக்கப்பட்ட சட்டங்கள், செயலணிகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுடன் பார்க்கையில் சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதத்தைப் பேணும் சட்ட மற்றும் கொள்கை முன்னெடுப்புகள் பற்றி நிஜமான அச்சங்கள் அங்கேயுள்ளன. தற்போது முகங்கொடுக்கப்படும் பல்வித சவால்களிலிருந்து ஒரு திசைதிருப்புவதற்கான ஒரு வடிவாக சட்டவாக்க வரைபு உட்பட புதிய முன்னெடுப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தக்கூடுமென்பதையும் நிராகரிக்க முடியாது. அன்மைய மாதங்களில் இரகசியமாகவும் மற்றும் விரைவாகவும் மேற்கொள்ளப் பட்ட சில காய் நகர்த்தல்களைக் கருதும் போது, இந்த விடயத்தில் உன்னிப்பான கவனம் தேவைப்படுத்தப்படும்.

### *பெருந்தொற்றுக் காலத்தில் சிறுபான்மையினர் உரிமைகள்*

மேலே சொல்லப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் ஒரு பரந்த பெரும்பான்மைவாத செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகும். சிங்கள தேசியவாதக் கருத்தியில், அரசை மீள்வடிவமைப்பதற்கான இந்த முயற்சியின் பின்னாலுள்ள உந்து சக்தியாக இருப்பதற்கு மேலதிகமாக, அன்றாட நிர்வாகம் மற்றும் பொதுக்கொள்கை என்பன நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களுக்குப் பாதகமான வழிகளில் இருப்பதற்கு உதவுகிறதுடன் அதற்கு அறிவுறுத்துகிறது.

இலங்கையில் வரலாற்று ரீதியாக அரச துன்புறுத்தலின் பிரதான இலக்காக தமிழர்களாக இருந்தபோதிலும், உள்நாட்டு யுத்தம் முடிவுற்றுதிலிருந்து, அரசு ஒப்புதலுடன் கூடிய பாரபட்சத்தோடு கும்பல் வன்முறைச் சம்பவங்களுடன், குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களைக் குறி வைப்பது, ஒரு அதிகரிப்பைக் கண்டது. கொவிட்-19 முஸ்லிம்களுக்கெதிரான ஒரு புதிய பின்புலத்தை வழங்கியதுடன் அங்கே இனப் பெரும்பான்மைக்கான விளக்கங்களுக்குள் முஸ்லிம்கள் அதிகளவில் பலிக்கடாக்களாக ஆகினர்.

***கட்டாயத் தகனம்***

பெருந்தொற்றுக் காலத்திலான மிக முக்கியமான பிரச்சினைகளிலொன்று கட்டாயத் தகனங்களாகும். உலக சுகாதார நிறுவன வழிகாட்டல்கள்[79] (ஆரம்பத்தில் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்கள் இணங்கிக் கொண்ட) சடலங்களைப் புதைப்பது பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படலாமென சுட்டிக்காட்டிய போதிலும், கொவிட்-19 காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு அரசாங்கம் ஒரு தடை விதித்தது.

சடலங்களைப் புதைப்பது பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்பட முடியுமென சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நச்சுயிர் வல்லுனர்கள் (வைரோலோஜிஸ்ட்) மற்றும் நுண்ணுயிரியல் வல்லுனர்கள் (மைக்ரோபயலோஜிஸ்ட்) கொண்ட ஒரு குழுவிடமிருந்தான அறிக்கையின் பின்னரும் கூட அரசாங்கம் அவ்வாறு நடப்பதற்கு ஆரம்பத்தில் மறுத்த நிலையில், இந்தத் தீர்மானத்தை மாற்றுவது தொடர்பாக அரசாங்கம் முகங் கொடுத்த அதிகரித்த அழுத்தம் குறிப்பிடத்தக்கதாகும்.[80] இந்த நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணர்களின் தீர்மானங்களின் அடிப்படையிலமைந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டவில்லை, மாறாக முன்பே இருக்கின்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமைய, தர்க்க ரீதியாக சிந்திப்பவர்கள் மற்றும் விஞ்ஞான அறிவுள்ளவர்கள் என்ற ஒரு பகட்டான மதிப்பை நிபுணர்களின் ஒரு வகையினருக்கு அளிக்க எத்தனிக்கும், அவர்களைக் கருவியாக்குகின்ற ஒரு நடவடிக்கையைச் சுட்டிக்காட்டுகின்றன.

முதலாவது அடக்கம் உண்மையில் நடைபெறும் வரை இறுதி முடிவு தொடர்பாக பின்வாங்கலும் குழப்பமும் அதிகளவிற்கு இருந்தது. பிரதம மந்திரி மகிந்த ராஜபக்சவினால்[81] ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர் கூட, அடக்கம் செய்வதன் மீதான தடை தொடருமென அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.[82] இது, பொதுக் கொள்கை விடயங்களில் பிரதம மந்திரியைக் குறைமதிப்பிடுவதற்கு அரசாங்கத்திற்குள் இருக்கும் போட்டி அதிகார கூட்டுகளின் இயலுமையின் ஒரு சுட்டிக்காட்டலாக இருப்பதற்கு மேலதிகமாக, அவ்வாறு செய்வதற்கு தீர்மானிக்க இயலாமை மற்றும் ஒற்றுமையற்ற தன்மையின் ஒரு பிம்பத்தையே அவர்கள் முன்வைக்கத் தயாராயிருந்தனர் என்ற உண்மை கவனிக்கத்தக்கதாகும். முஸ்லிம் சமூகம் மீது ‘கடுமையாக’ இருக்க விரும்பும் அவர்களின் விருப்பிலிருந்து குறைந்தது ஒரு பகுதியளவிலேனுமிருந்து உருப்பெற்ற அரசியல் ஆணையைக் கொண்ட அரசாங்கத்திற்கு அடக்கம் செய்வதன் மீதான தடையைப் பேணுவதுவதென்பது பெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும்.

உண்மையில், இலங்கைக்கு இம்ரான் கான் அவர்களின் விஜயம் ஒரு திருப்புமுனையாக நிரூபிக்கப்பட்டது, அவரது விஜயத்தின் நாட்கள் சிலதின் பின், பெப்ரெவரி 25ஆம் திகதியன்று

[79] https://apps.who.int/iris/bitstream/handle/10665/331538/WHO-COVID-19-lPC_DBMgmt-2020.1-eng.pdf

[80] “கொவிட் தொற்றில் இறந்த அனைவரையும் தகனம் செய்வதை இலங்கை தொடரும் - அமைச்சர்” (Sri Lanka will continue to cremate all Covid dead – Minister) ஜனவரி, 7 2021. economynext; https://economynext.com/sri-lanka-will-continue-to-cremate-all-covid-dead-minister-77648/

[81] சுல்பிக் பர்சான், “கொவிட் சடலங்களின் அடக்கத்திற்கு பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி அனுமதி” (PM gives green light in parliament for Covid burials) 10 பெப்ரெவரி 2021. நியூஸ் பெர்ஸ்ட் https://www.newsfirst.lk/2021/02/10/pm-gives-green-light-in-parliament-for-covid-burials/

[82] ஹிரன்யாத தேவசிறி, “அடக்கம் செய்தல் மீதான கருத்து தொடர்பாக பிரத மந்திரியிடமிருந்து மேலும் எதுவுமில்லை” (Nothing more from PM on burial comment ) 12 பெப்ரெவரி 2021. த மோர்னிங்;https://www.themorning.lk/nothing-more-from-pm-on-burial-comment/

சடலங்களின் அடக்கத்திற்கான ஒரு தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.[83] கொள்கையிலான இந்த மாற்றம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் விவாதிக்கப்பட இருக்கும் வேளையில் வந்ததுடன், அங்கே பாகிஸ்தானின் ஆதரவை இலங்கை தேவைப்படுத்தியிருந்தது. அவ்வாறு செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதற்கு, ராஜதந்திர ரீதியில் தேவை வரும் வரை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் கருத்துகள் புறக்கணிக்கபட்டது குறிப்பிடக் கூடியதாகும். இது இவ்வாறானதாக இருக்கும் பட்சத்தில், யு.என்.எச்.ஆர்.சி தீர்மானத்தின் விவாதத்தின் முன் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அழுத்தங்கள் இருந்திருக்காது விட்டால், இது சாத்தியமற்றதாக இருந்திருக்கும் என்பதுடன் கொள்கையில் ஒரு மாற்றம் வந்திருக்காது.

[83] "கொவிட் மரணங்களின் அடக்கத்திற்கான தடையை இலங்கை இறுதியில் நீக்குகிறது" (Sri Lanka finally lifts ban on burial of COVID victims) 26 பெப்ரெவரி 2021. அல்ஜஸீரா; https://www.aljazeera.com/news/2021/2/26/sri-lanka-finally-lifts-ban-on-burial-of-covid-victims

## கட்டாயத் தகனங்கள்: ஒரு கால ஒழுங்குவரிசை[84]

மார்ச் 27, 2020

- உ.சு.நி புதைத்தல்கள் பாதுகாப்பானது என அறிவிக்கிறது, புதைத்தல்களை அனுமதிக்கும் உ.சு.நி இன் பரிந்துரைகளுக்கு அமைவாக சுகாதார அமைச்சு வழிகாட்டல்கள் அமைக்கப்படுகின்றன.

மார்ச் 30, 2020

- இரண்டாவது கொவிட்-19 இறப்பு, வைரசிற்கு பலியான முதலாவது முஸ்லிமின் சடலம் சுகாதார அமைச்சு மற்றும் உ.சு.நி வழிகாட்டல்களுக்கு முரணாக தகனம் செய்யப்பட்டது.

ஏப்பிரல் 11,2020

- கொவிட்-19 ஆல் இறந்தோரின் சடலங்களை அகற்றுவதற்கு புதைத்தல் மாத்திரமே ஒரே வழியென ஆணை பிறப்பித்து அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுகிறது.

நவெம்பர் 6, ஏப்பிரல 2020

- இஸ்லாமிய கூட்டு ஸ்தாபனங்களின் சுயாதீன நிரந்தர மனித உரிமைகள் ஆணையகம் அடக்கக் கொள்கை தொடர்பாக 'ஆழ்ந்த கரிசனையைக்' குறிப்பிடுகிறது.

டிசம்பர் 1, 2020

- கட்டாயத் தகனங்களின் ஒரு முடிவுக்கு கோரிய அனைத்து அடிப்படை மனித உரிமை மனுக்களை முன்கொண்டு விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி மறுக்கிறது.

டிசம்பர் 8, 2020

- பிறந்து இரண்டு வாரங்களேயான குழந்தையின் சடலம் கட்டாயத் தகனம்

டிசம்பர் 16, 2020

- பொரள்ளை மயானத்தில் ஆர்ப்பாட்டம்

டிசம்பர 30, 2020

- கட்டாயத் தகனங்களை பிரித்தானிய முஸ்லிம் சபை சவாலுக்குட்படுத்துகிறது

ஜனவரி 4, 2021

- சுகாதார அமைச்சினால நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு அடக்கத்தை அனுமதிப்பதற்கு வழிகாட்டல்களை மீளமைக்கிறது

ஜனவரி 7, 2021

- அடக்கம் செய்தல் பிரச்சினை தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு 'பிரதான குழு' இடமிருந்து தீர்மானத்திற்காக அரசு காத்திருக்கிறது என பவித்திரா வன்னியாரய்ச்சி குறிப்பிடுகிறார்.

பெப்ரெவரி 10, 2021

- அடக்கம் செய்தல் அனுமதிக்கப்படுமென பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ச குறிப்பிடுகிறார்.

பெப்ரெவரி 16, 2021

- கொவிட்-19 இல் பலியானவர்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுவரெனக் கூறும் பொழுது மகிந்த ராஜபக்ச வெறுமனே தனது சொந்த அபிப்பிராயத்தையே தெரிவித்தார் என அமைச்சரவைப் பேச்சாளர் உதய கம்மன்பில குறிப்பிடுகிறார்.

பெப்ரெவரி 23, 2021

- பாகிஸ்தான் பிரதம மந்திரி இம்ரான் கான் இலங்கை வருகிறார்.

பெப்ரெவரி 25, 2021

- கொவிட் இறந்தவர்கள் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அரசாங்கம் தடையை நீக்குகிறது.

மார்ச் 1, 2021

- அடக்கம் செய்வதற்கான இடம் இரணைதீவில் அனுமதிக்கப்படுகிறது.

மார்ச்3, 2021

- அடக்கும் செய்யுமிடமாக இரணைதீவு தெரிவு செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.

மார்ச் 9, 2021

- அடக்கம் செய்யுமிடம் இரணைதீவிலிருந்து ஓட்டமாவடி சூடுபத்திசேனைக்கு மாற்றப்பட்டது.

---

[84] 'இலங்கை முஸ்லிம்களுக்கு அடக்கம் செய்யும் உரிமைகளின் மறுத்தல் - உலக சுகாதார ஸ்தாபன வழிகாட்டல்களை மீறுகிறதுடன் எதிர்விளைவு கொண்டது' (Denying Burial Rights to the Sri Lankan Muslims – Contradicts WHO Guidelines and Self Defeating) – மக்களின் உரிமைகளுக்கான குழு https://www.prgsrilanka.org/covid19sl/

***கைதுகள் மற்றும் சிறுபான்மையினரை இலக்கு வைத்து சட்டத்தை உபயோகித்தல்***

சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவதற்கான மிகவும் பாதகமான பொறிமுறைகளில் ஒன்று ஆட்களைத் தடுத்து வைப்பதற்கும் மற்றும் மௌனமாக்குவதற்கும் சட்டங்களின் குறிப்பான சில பகுதிகளை ஆயுதமாக பயன்படுத்தியமையாகும். குறிப்பாக பிரச்சினைக் குரிய பகுதிகளாக இருந்தவை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (ஐ.சி.சி.பி.ஆர்) மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் (ப.த.ச) ஆகிய இரண்டுமாகும். இதுவும் கூட சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் கைகளில் சித்திரவதை மற்றும் கட்டுக்காவலில் இருக்கும் போதான மரணங்கள் தொடர்பாக அதிகரிக்கும் அறிக்கைகளின் ஒரு பின்னணியிலாகும் என்பதுடன் எல்லாச் சமூகங்களும் அத்தகைய வன்முறையின் பாதிப்புக்கு உட்பட்டரென அண்மைய அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. அச்செய்கைகளின் குற்றமிழைத்தவர்களுக்கான பொறுப்புக்கூறல் இல்லாத ஒரு நிலையில், குற்றவிலக்களிப்பு நிலவுகிறது.

அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் கீழ் இந்த சட்டங்களின் பிரிவுகள் சிறுபான்மையினரை இலக்கு வைக்க உபயோகிக்கப்பட்ட வேளையில், 2019 இலிருந்து மறுப்புத் தெரிவித்தலுக்கான இடம் மேலும் சுருங்கி விட்டதை புதிய நிகழ்வுகள் குறித்தன. இது பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்தன, ஆனாலும் மிகவும் ஆபத்தானதொன்று, ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவினால் மார்ச் 12 ஆம் திகதியன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ''வன்முறையான மட்டுமீறிய மதக்கொள்கையைக் கொண்டிருப்பதற்கு எதிரான தீவிரமயமற்றதாக்குதல்'' எனும் தலைப்பிலான ஒழுங்கு விதியின் அறிமுகமாகும். இந்த ஒழுங்குவிதிகள், ''வேறுபட்ட சமூகங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக் கிடையில் வன்முறை நடவடிக்கைகள் அல்லது மத, இன அல்லது வகுப்புவாத ஒற்றுமையின்மை அல்லது தீய எண்ண உணர்வுகள் அல்லது விரோதங்களை'' ஏற்படுத்துபவர்கள் அல்லது ஏற்படுத்துவதற்கு நினைப்பவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதை இலக்காகக் கொண்டவையாகும்.[85]

இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் வகையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒரு புதிய தடுப்பு நிலையமாக பயங்கரவாத எதிர்ப்புப் புலன்விசாரணைப் பிரிவு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதையும் நாம் கண்டோம்.[86] இந்த ஒழுங்குவிதிகள் அரசாங்கத்திற்கு முரணான ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கும் ஒரே காரணத்திற்காக ஆட்களை இலக்கு வைக்க முடியுமென்பதால் இத்தகைய எதேச்சாதிகார மற்றும் தெளிவில்லாத ஒழுங்குவிதிகள் எவ்வாறு விமர்சகர்கள் மற்றும் சிறுபான்மை ஆட்களை இலக்கு வைப்பதற்கு இட்டுச் செல்லும் என்ற கரிசனைகளுடன் இந்த ஒழுங்குவிதிகளை பலரும் சவாலுக்கு உட்படுத்தியதுடன் இந்த விடயம் தற்போது உயர் நீதிமன்றின் முன்னுள்ளது.[87] 'புனர்வாழ்வு' என்ற முக்கியமான சொற்பதம் மற்றும் நீதித்துறைக் கண்காணித்தல் மற்றும் பாதுகாப்புகளின் நீக்குதல் என்பவற்றினால் என்ன கருதப்படுகிறது தொடர்பில் ஒழுங்குவிதி மௌனம் காப்பதாலான கரிசனையும் அங்கேயுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் நபர் புனர்வாழ்வுக்குப் பொருத்தமானவர் என நம்புமாயின், அந்நபர் ஒரு வருடத்திற்கு (மேலுமொரு வருட நீடிப்பிற்கான சாத்தியத்துடன்) நீதிக் கண்காணித்தலுக்கான தனி வடிவமாக ஒரு நீதவானின் அனுமதியுடன் தடுத்து வைக்கப்பட முடியும். வலுவான மேற்பார்வையில்லாது அதிகளவிற்கு

---

[85]பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அண்மைய ஒழுங்குவிதி தொடர்பான கரிசனைகள், மா.கொ.நி. 18 மார்ச் 2021.

[86]ஈஸ்வரன் ருட்ணம், 'புதிய தடுப்பு நிலையம் வர்த்தமானிப்படுத்தப்பட்டது' (Easwaran Rutnam, 'New Detention Centre Gazetted) (ஜுன் 2021), டெய்லி மிரர்' [http://www.dailymirror.lk/front_page/New-detention-facility-gazetted/238-213669](http://www.dailymirror.lk/front_page/New-detention-facility-gazetted/238-213669)

[87]"கறுப்பு பெட்டி – கப்டன். வசபாஹ" – 'நாளை துறைமுக நகரம் மற்றும் அரசாங்கத்திற்கு முக்கிய நாள்' (The black box by Capt. Vasabha D-day for Port City and Govt. Coalition tomorrow) (ஏப்பிரல் 2021), த மோர்னிங் [https://www.themorning.lk/d-day-for-port-city-and-govt-coalition-tomorrow](https://www.themorning.lk/d-day-for-port-city-and-govt-coalition-tomorrow)

பரந்துபட்டதான மற்றும் தெளிவில்லாத மொழி மற்றும் துஷ்பிரயோகத்திற்கான வாய்ப்புகள் சமுதாயத்தின் பிரிவுகளை வெறுமனே குறிவைப்பது மட்டுமன்றி மாற்றுக் கருத்துக்களை மௌனிக்கப் பண்ணுவதற்கும் இட்டுச் செல்ல முடியும். இதற்கு மேலதிகமாக, அறிமுகப்படுத்தப்படக் கூடியதாகவுள்ள பல்வேறு புதிய சட்டங்களின் அறிக்கைகள் உட்பட, மாற்றுக் கருத்துக்களைக் குறைப்பதற்கு ஏனைய முறைகள் உபயோகிக்கப்பட்டது குறித்தான கரிசனைகளும் கூட அங்குள்ளது.

2019 இலிருந்து இந்த சட்டங்களின் கீழ் சிறுபான்மைச் சமூகங்களின் உறுப்பினர்களின் அளவுக்கதிகமான குறிவைக்கப்படுதலுடன், மாற்றுக் கருத்துகளை மௌனிப்பதற்கு ப.த.ச, ஐ.சி.சி.பி.ஆர் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டவாக்கங்களின் பகுதிகள் என்பவற்றின் பாவனையின் ஓர் எண்ணற்ற உதாரணங்களை நாங்கள் கண்டுள்ளோம். ஹிஜாஸ் ஹிஸ்புல்லா அவர்களின் கைது, இதற்கான மிகவும் முக்கிய மற்றும் அதிர்ச்சியான அண்மைய உதாரணங்களுள் ஒன்றாகும். 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்டதாக அவரது கைது, பயங்கரவாத தடைச்சட்டத்தால் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்சத் தராதரங்களைக் கூட திருப்தி செய்யவில்லை.[88] கண்ணால் கண்ட சாட்சியின் அடையாளங் காணும் செயன்முறையை திட்டமிட்டு மாற்றுவதற்கான முயற்சிகள், மற்றும் ப.த.ச இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்கள் தங்களது விடுதலைக்காக அவருக்கு எதிராக மேற்கொள்ளும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வெளிவரும் தகவல்கள், உரிய செயல்முறைக்கான அக்கறையின்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

ரம்சி ரஸீக் மற்றும் கவிஞர் அன்ஹாப் ஜஸீம் ஆகியோர்களின் கைதுகளுடன் அவ்வாறான பல சம்பவங்களில் ஒன்றான ஹிஜாஸின் வழக்கு, முஸ்லிம்களை அதிகரித்தளவில் பலிக்கடாவாக்கும் மற்றும் குறிவைக்கும் அரசாங்கத்தின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.[89] சிறுபான்மைக்கெதிரான அடக்குமுறைகளின் கருவிகளாக இச்சட்டங்களின் உபயோகத்தை தடுக்கும் முகமாக ஐ.சி.சி.பி.ஆர் மற்றும் ப.த.ச என்பவற்றுக்கான சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை இந்த சம்பவங்கள் ஒவ்வொன்றும் எடுத்துக் காட்டுகின்றன.

எனினும், இந்தக் கருவிகளின் ஆயுதமாக்கல் இனப் பெரும்பான்மை வாதத்திற்குள் அதிகரிக்கும் ஆழமான பிரச்சினைகள், சிங்கள தேசியவாதக் கற்பனைக்குள் புதிய பலிக்கடாக்களாக முஸ்லிம் சமூகத்தைக் கொண்டு இடுதல் மற்றும் இந்த அரசியல் போக்குகளின் தாக்கங்கள் முன்னே செல்வதையும் சுட்டிக்காட்டுகின்றன. அதனால், சிறுபான்மையினரைக் குறி வைத்தல் மற்றும் தன்னிச்சையான கைதுகளை நிறுத்துதல் சட்டங்கள் செய்யுமாற் போல், பெரும்பான்மைவாதத்தை எதிர்க்கும் கருத்தியல் இடையீடுகளைத் தேவைப்படுத்துகின்றன.

---

[88] தியாகி ருவன்பத்திரன, 'ஹிஜாஸ் ஹிஸ்புல்லா: இலங்கையின் கொடுங்கோல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் அண்மைய பலிக்கடா' (On Hejaaz Hisbullah : The latest victim of Sri Lanka's draconian Prevention of Terrorism Act) (ஜூலை 2020), சர்வதேச மன்னிப்பு சபை https://www.amnesty.org/en/latest/news/2020/07/sri-lanka-on-hejaaz-hizbullah-and-the-prevention-of-terrorism-act/

[89] Z. L. மொஹமட், 'ரம்சி ரஸீக்: பொலிஸ் கைதினால் தலைகீழாகிப் போன சாதாரண வாழ்கைக்கான ஒரு அசாதாரணப் போராட்டம்' (Ramzy Razeek: An extraordinary struggle for an ordinary life of service upended by a police arrest) (மே 2020), டெய்லி எப்டி Ramzy Razeek, 'An extraordinary struggle for an ordinary life of service upended by a Police arrest' (May 2020), Daily FT https://www.ft.lk/opinion/Ramzy-Razeek-An-extraordinary-struggle-for-an-ordinary-life-of-service-upended-by-a-Police-arrest/14-699917
நெத்மி ராஜவாசம், 'ஒரு கவிஞரின் கைது' (The Arrest of a Poet) (ஏப்பிரல் 2020), த மோர்னிங் https://www.themorning.lk/the-arrest-of-a-poet/

அத்தகைய கைதுகளில் உள்ளார்ந்த அநீதிகளுக்கு அப்பால், அந்த சம்பவங்கள் மற்றும் அடக்குமுறைப் போக்குகளை எதிர்ப்பதற்கான ஓர் ஆற்றலின்மை அமைதியான ஜனநாயக மாற்றம் சாத்தியமற்றது என்ற உணர்வை விளம்புநிலைப்படுத்தப்பட்ட இளைஞர்களிடையே அதிகரித்து, அவர்களை தீவிரவாதத்தின் கைகளுக்கும் மேலும் தள்ளிவிடுகிறது. அந்த வகையில், முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்களை குறி வைத்தல் மற்றும் தன்னிச்சையான தடுத்து வைத்தல் என்பன, பாதுகாப்பை நோக்காகக் கொண்டவையென அதிகாரிகள் கருதுகின்ற அதே பாதுகாப்பின் இயல்பான நலன்களை அச்சுறுத்தக் கூடும்.

***புர்கா தடை***

நிஹாப் மற்றும் புர்கா உட்பட முகம் மூடும் உடைகளைத் தடை செய்தல் தொடர்பான ஒரு உத்தேச சட்டமூலம் அமைச்சரவைத் தீர்மானத்தின் அனுமதிக்கு உள்ளதில் முஸ்லிம் சமூகத்தின் மேலும் குறி வைக்கப்படுதல் அவதானிக்கப்பட்டது.[90] அவ்வாறான பல அமைச்சரவைத் தீர்மானங்கள் குறைந்த ஊடகக் கவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் உறுப்பினர்களே அதனை விளம்பரப்படுத்தியதில், குறிப்பிட்ட இத்தீர்மானம் நோக்கி கணிசமானளவு கவனம் ஈர்க்கப்பட்டது. பெருந்தொற்றை சமாளிப்பதிலான தோல்விகளிலிருந்தான ஒரு திசை திருப்பலாக, ஆட்சியின் தோல்வி களிலிருந்து மக்களின் கவனம் மற்றும் கண்காணித்தலை அப்பால் திருப்பவும் இந்த அறிவிப்பை பயன்படுத்துவதற்கு அரசாங்கத் தரப்பின் ஒரு விருப்பினை இது தெரிவிக்கிறது. இவ்வாறு செய்வதில், மக்கள் கோபத்திற்கு ஒரு பலியாட்டை உருவாக்கவும் மற்றும் இந்தப் பலியாடுகளைத் தண்டிப்பதன் மூலம் அதன் இனப்-பெரும்பான்மைவாதச் சான்றுகளை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு முடிகிறது. எனினும், இந்தத் தீர்மானத்தின் வெறுமனேயான விளம்பரப்படுத்தல் ஆட்சியின் தோல்விகளிலிருந்து திசைதிருப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவினாலும் கூட, இந்தத் தடை உண்மையில் நடைமுறைப்படுத்தப்படக்கூடியது சாத்தியமாகும்.

புர்காக்கள் மதத் தீவிரவாதத்தின் ஒரு சின்னம்[91] எனவும் அதனால் அவை ஒரு தேசிய பாதுகாப்பு பிரச்சினை என விவாதிக்கும் சரத் வீரசேகரவின் கூற்று, அவற்றை அணியும் பெண்களை இழிவுபடுத்தியுள்ளதுடன் பொதுமக்கள் பார்வையில் தீவிரவாதிகளாக அவர்களைப் பழித்துள்ளது. இதனொரு பயனாக, இந்தத் தடை இன்னமும் சட்டமாக நிறைவேற்றப்படாத போதிலும் கூட, அமைச்சரவைத் தீர்மானத்தை விளம்பரப்படுத்தியமை புர்கா அல்லது நிஹாப் அணியும் முஸ்லிம் பெண்களின் குறிவைக்கப்படுதலை ஏற்படுத்தலாம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னரும் முகம் மூடும் உடைகள் தடை செய்யப்பட்டிருந்தன என்பதுடன் அன்றிலிருந்து முஸ்லிம் சமூகம் குறித்த ஒரு கடும் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும் இந்தத் தடை உபயோகிக்கப்பட்டது.[92] எந்தத் தாக்குதல்தாரியுமே இந்த முறையை தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொள்வதற்கு உபயோகித்திருக்காத ஒரு நிலையிலும் கூட இந்தத் தடை விதிக்கப்பட்டது. எனவே, தாக்குதல்களைத் தொடர்ந்து அரசின் நடவடிக்கைகள், உண்மையான பயங்கரவாத அச்சுறுத்தல் எதனையும் குறைப்பதற்குப் பதிலாக, தவறு செய்தவர்கள் எனக் கூறி, ஒரு சமூகம் மீது கடும் நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் பார்வையாளர்களுக்காக செயற்படும் ஒரு விருப்பினால் அது கூடுதல் உந்தப்பட்டதாகக் காணப்பட்டது.

---

[90] 'புர்க்கா மற்றும் ஏனைய முகம் மூடும் உடைகளை இலங்கை தடை செய்கிறது' (Sri Lanka to ban burka and other face coverings )(மார்ச் 2021), பிபிசி https://www.bbc.com/news/world-asia-56386426

[91] அதே மூலம்

[92] 'இலங்கைத் தாக்குதல்கள்: உயிர்த்த ஞாயிறு இரத்தக் களரியின் பின் முகம் மூடும் உடைகள் தடை செய்யப்படுகின்றன' (Sri Lankan attacks: Face coverings banned after Easter bloodshed) (ஏப்பிரல் 2019), பிபிசி https://www.bbc.com/news/world-asia-48088834

கூடுதலாக இதே வழியில், தற்போதைய அரசாங்கத்தால் முஸ்லிம் சமூகத்தின் குறி வைக்கப்படல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒரு வழிமுறைக்குப் பதிலாக அதன் இனப் பெரும்பான்மைவாதத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் ஒரு முறையை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது. புர்கா மீதான தடைகள் பயங்கரவாதத் தாக்குதல்களின் சாத்தியத்தை உண்மையில் அதிகரித்தன. இந்த எதிரிடை நிலையைச் சுட்டிக்காட்டும் சான்றுகளுடன் இவ்விடயம் மீதான ஆய்வுகளால் இது மேலும் தெளிவாக தெரிவிக்கப் பட்டது.[93]

புர்கா மற்றும் நிஹாப் தடைசெய்தல் முஸ்லிம் பெண்களின் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கையை வெளிக்காட்டும் அவர்களின் உரிமையை மீறுகிறதுடன் பொது இடவெளி இல்லாது பலரை வெளியே தள்ளும் பாதிப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தைக் குறிவைக்கும் ஒரு தொடர் நடவடிக்கைகளின் பின்னணியில் இது வெறுமனே ஒன்றாகவுள்ளதுடன், மதச் சுதந்திரத்தின் இந்த மீறல் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைச் சமூகங்களிடையே மேலும் துருவமயப்படுத்தல் மற்றும் பதட்டங்களை உருவாக்கும்.

***நினைவுகூரல்***

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை குறிவைக்கப்படுதலில் ஒரு வித மாற்றத்தை நாங்கள் கண்ட போதிலும், யுத்தம் முடிவடைந்திலிருந்து தமிழ்ச் சமூகத்தில் நாங்கள் தொடர்ச்சியாக காண்கின்றவாறு மோதலைக் கொண்டு நடத்தியவர்களும் இந்த அரசாங்கம் ஆரம்பித்ததிலிருந்து தீவிரமயப்படுத்தலின் ஒரு செய்முறைக்கு உள்ளாகினர்.

யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு முடியாமை, தமிழ் சமூகத்திற்கு ஒரு முக்கியமான குறையாக இருந்து வருகிறது. நினைவுகூருதல் தடை செய்யப்பட்ட அதே இடப்பரப்பில் இலங்கை ஆயுதப்படைகளின் வெற்றியைக் கொண்டாடும் வெற்றி நினைவுச் சின்னங்கள் அமைந்திருந்த ஒரு பின்னணியில் நினைவுகூரலிற்கு எதிரான இந்தத் தடை தீவிரமாக்கப்பட்டது. உண்மையில், இவ்வாறான நிகழ்வுகள் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் இடம் பெற்றிருந்தன என்பதுடன் இது தற்போதைய அரசாங்கத்திற்கும் முன்கூட்டியேயிருந்த முறையான மற்றும் ஆழ வேரூன்றிய ஒரு கருத்தியல் பிரச்சினையாகும். இருந்தபோதிலும், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஒரு தொகையான குறிப்பாகப் பிரச்சினைக்குரிய அண்மைய சம்பவங்கள் பல இருந்தனவுடன் அவை அரசு மற்றும் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சமூக உறுப்பினர்களுக்கும் இடையிலான உருவான பதட்டங்களை எடுத்துக்காட்டின.

இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட சிவிலியன்களை கௌரவிக்கும் முகமாக 2019 இல் எழுப்பப்பட்ட ஒரு நினைவுச் சின்னத்தை பல்கலைக் கழக அதிகாரிகள் இடித்தழித்த, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தின் அழிப்பு அவ்வாறான ஒரு நிகழ்வாகும்.[94] அவ்வாறு செய்வதற்கான தீர்மானம் 'உயர் அதிகாரத்திலிருந்து' குறிப்பாக பாதுகாப்பு, புலனாய்வு (மற்றும்) கல்வி

[93] மன்சண்டா மற்றும் சய்யா (2017) *'புர்க்காத் தடை எங்களைப் பாதுகாப்பானவர்களாக ஆக்குகின்றனவா? முகத்திரை தடைகள் மற்றும் ஐரோப்பாவில் பயங்கரவாதம்' (Do burqa bans make us safer? Veil prohibitions and terrorism in Europe).*

[94] மீரா ஸ்ரீநிவாசன், 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் போர்ப் பலியானவர்கள் ஞாபகார்த்த சின்னம் அகற்றல் பதட்டத்தை ஏற்படுத்தியது' (Removal of war victims' memorial at Jaffna University sparks tension ) (ஜனவரி 2021), த ஹிந்து: https://www.thehindu.com/news/international/tense-situation-at-jaffna-university-after-authorities-remove-war-memorial/article33535428.ece

அமைச்சிலிருந்து பல்கலைக் கழக துணை வேந்தர் எஸ்.சற்குணராஜாவிற்கு வந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையிலானதாகும்.[95]

எண்பதுகளின் பிற்பகுதிகளிலான ஆயுதக் கிளர்ச்சியின் போது, அரசாங்கத்தால் அந்த சமயத்தில் பயங்கரவாத இயக்கம் எனக் கருதப்பட்ட குழுவான, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி)[96] உறுப்பினர்களாக இருந்த தங்களது அன்பிற்குரியவர்களை நினைவுகூருவதற்கு சிங்கள சமூகத்திலுள்ள பலரும், உரிமையான வகையில், அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நிலையில் வடக்கு-கிழக்கில் நினைவுகூர்தலின் தொடர்ச்சியான தடைசெய்தல் குறிப்பாகக் கரிசனையுடையதாக உள்ளது.

பயங்கரவாதிகளின் நினைவேந்துதலை அனுமதிக்காத நினைவுகூருதலின் தடை ஒரு நீதியான மற்றும் நியாயமான கொள்கைப் பிரயோகத்தின் ஒரு விளைவே எனும் கருத்தை இந்த முரண்பாடுகள் கேள்விக்குட்படுத்துகிறது. நினைவுகூருவதற்கு சிங்கள சமூகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதே உரிமை தமிழ் சமூக உறுப்பினர்களுக்கு அளிக்கப்படாதது, இந்தத் தீர்மானம் இனங்களிற்கிடையிலான அரசியல் தொடர்பான கேள்விகளிலிருந்தும் மற்றும் அக்கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அரசினால் தாங்கிப் பிடிப்பதற்கு கொண்டுவரப்பட்ட பெரும்பான்மைவாத கருத்தியல் பற்றுறுதிகளிலிருந்தும் பிரிக்கப்பட முடியாது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தும் போது, சிங்கள தேசியவாதம் மற்றும் த.வி.பு சார்பு தமிழ் தேசியவாதம் ஆகிய இரு முகாம்களினுள்ளும் நினைவுகூரலிற்கான உரிமை ஒன்றுபடுவதையும் தமிழர்கள் என வரும் போது அது தமிழீழ விடுதலைப் புலிகளின் மகிமைப்படுத்துதல் என்ற கருதப்படுதலுடன் எடுத்துக் கொள்ளப்படுவதும் இங்கு முக்கியமான கவனத்திற்குரியதாகும். எனினும், ஒரு குழுவாக த.வி.பு உம் மற்றும் தனிப்பட்ட போராளிகளும் அவர்களின் குடும்பங்களால் நினைவுகூரப்படுவதற்கிடையில் ஒரு வேறுபாடு காணப்படுதல் வேண்டும், அவர்களில் பலரும் விருப்பத்தினால் இணைந்து கொள்ளவில்லை. சிங்கள மற்றும் தமிழ் தேசியவாதிகளால் பகிர்ந்து கொள்ளப்படும் உலகக் கண்ணோட்ட அம்சங்களின் பல நிலைமைகளில் ஒன்றாக நினைவுகூரல் பிரச்சினை இந்த விதத்திலேயே பகிரப்படுகிறது. பகிர்ந்து கொள்ளப்படும் இந்த விசுவாசங்கள் இரண்டுமே எப்போதும் ஒவ்வொரு குழுவும் மற்றைய குழுவின் மீது தொடர்ச்சியாக அதன் சந்தேகங்களை உறுதிப்படுத்தி, சந்தேகம் மற்றும் மோதலின் ஒரு வட்டத்தை நிலைக்கப்பண்ணி, விரோதத்தை என்றும் அதிகரிப்பதால் ஏற்படுவதுடன் அதனொரு பெறுபேறாகவும் உள்ளது.

### *மொழிப் பிரச்சினைகள்*

நாட்டின் அரசகரும மொழிக் கொள்கை மீறப்பட்ட ஓர் எண்ணற்ற குறிப்பிடத்தக்க சம்பவங்களுக்கான அண்மைய பின்னடைவுடன் இலங்கை அரசியலின் பாதையில் மொழிப் பிரச்சினை தொடர்ந்து செல்வாக்கு செலுத்துகிறது. விசேடமாக, பொது அறிவித்தல்களில் நாட்டின் அனைத்து அரசகரும மொழிகளும் இருப்பதை ஆணைப்படுத்தும் ஒழுங்குவிதிகள் மீறப்படும் விதத்தில், அறிவித்தல்கள் மற்றும் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி

[95]இந்தத் தீர்மானத்திற்கு சடுதியான தலைகீழத் திருப்பமாக ஜனவரி 11ஆம் திகதி காலை, நினைவுச் சின்னம் மீள் கட்டித் தரப்படுமென அறிவிக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பால்கே அவர்களின் ஒரு சந்திப்பை அடுத்து இந்த திருப்பத்திற்கான தீர்மானம் இந்திய அரசாங்கத்தால் செல்வாக்கு செலுத்தப்பட்டது.
மீரா ஸ்ரீநிவாசன், 'யாழ்ப்பாண பல்கலைக கழக நினைவுச்சின்ன விடயத்தில் இந்தியா "தலையீடு செய்தது' ('India "intervened' on Jaffna University memorial issue') (ஜனவரி 2021), த ஹிந்து https://www.thehindu.com/news/international/india-intervened-on-jaffna-varsity-memorial-issue/article33594886.ece

[96]'ஜேவிபியின் உயிர் நீத்த வீரர்களின் 30ஆவது ஞாபகார்த்தம்' (நவெம்பர் 2019), டெய்லி மிரர்: https://www.dailymirror.lk/news/30th-commemoration-of-fallen-JVP-heroes/239-177805

தவிர்க்கப்பட்டிருந்ததுடன் இச்சம்பவங்கள் சம்பந்தப்பட்டிருந்தன. மிக அப்பட்டமான அண்மைய உதாரணங்களில் தமிழ் மொழி தவிர்க்கப்பட்டு பதிலுக்கு சீனாவின் மண்டரின் மொழி உள்ளிணைக்கப்பட்டிருந்தது.[97] இந்த உள்ளிணைத்தல்கள் அவற்றைப் பொறுத்த வரை பிரச்சினையானவையாக இல்லாத போதிலும், விசேடமாக கடந்த கால மோதல்களின் ஒரு முக்கிய காரணியாக அமைந்திருந்த அரசினால் புறந்தள்ளப்பட்ட ஒரு மொழியான ஒரு தேசிய மொழியைப் புறக்கணித்து மேற்கொள்ளப்பட்டது, ஒரு கவலையளிக்கும் நிகழ்வாகும். இந்த அண்மைய சம்பவங்களின் பூகோள அரசியல் அம்சம் அதிக கவனத்தை திரட்டியதுடன் இந்தப் பிரச்சினைகளை அம்பலத்திற்கு கொண்டு வந்தது. எனினும், இவை தமிழ் சமூகத்தின் மொழி உரிமைகள் தொடர்பாக அரசிடமிருந்து காண்பிக்கப்பட்ட மிகவும் பொதுவான ஒரு திமிர்த்தனத்தின் மிகவும் வெளிப்படையான உதாரணங்களாக அமைந்திருந்தன. தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு அரசாங்கத்தின் எதிர்ப்பு,[98] மொழி உரிமைகள் பற்றி பிரதம மந்திரி மகிந்த ராஜபக்சவினால் மேற் கொள்ளப்பட்ட பிரச்சினையான கூற்றுகள் போன்ற சம்பவங்களில் இது தெளிவாக வெளிப்பட்டன.[99]

பெருந்தொற்றுக் காலத்தின் போதும் கூட, உத்தியோகபூர்வ மற்றும் பொலிஸ் அறிவித்தல்கள் தமிழ் மொழியிலான மொழிபெயர்ப்புகளின்றி, பயண மட்டுப்படுத்தல்கள் மற்றும் பெருந்தொற்று வழிகாட்டல்கள் என்பன அநேகம் சிங்கள மொழியிலேயே வெளியிடப்பட்டன.

அரசு அதனொரு பிரதிநிதியாகவும் மற்றும் மிக முக்கியமாக சிங்கள சமூகம் என்பன கடைப்பிடிப்பதற்கும் மற்றும் தேசிய மொழிக் கொள்கையைத் தீவிரமாகக் எடுத்துக் கொள்வதிலும் மேற்கொள்ளும் மீள்தவறுகள் பெரும்பான்மைவாத எண்ணக்கரு ஆதிக்கத்தின் அறிகுறிகளாகையில் சிறுபான்மைச் சமூகங்கள் அவற்றுக்கு நிபந்தனையுடன் இடமளிக்க வேண்டியுள்ளது. தொடரும் ஆதிக்கத்தின் இந்த பொதுவான கண்ணோட்டம் மற்றும் கொள்கை அமுல்படுத்தலில் அதன் வெளிப்பாடுகள் என்பன தமிழ் பேசும் சிறுபான்மையினரை அந்நியப்படுத்தியுள்ளதுடன் அதனைத் தொடர்வது, ஏற்கனவே பலவீனமடைந்த நல்லிணக்கச் செயன்முறையை மேலும் இடையூறு செய்யும்.

***சர்வதேச பொறுப்புக்கூறல் செயன்முறைகள் மற்றும் தாக்கங்கள்***

அண்மையில் நிறைவேற்றப்பட்ட மற்றும் மார்ச் 2021 இல் அங்கீகரிக்கப்பட்ட சான்று திரட்டல் மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படையில் மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்பட்ட மிகவும் தொலைநோக்குடனான நடவடிக்கையை நிலைநாட்டும் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான இலங்கையின் முயற்சிகள் தற்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் முன்னால் உள்ளது.[100] மிக அண்மையில் ஐரோப்பிய பாராளுமன்றம், பொதுவான சலுகைகளுக்கான முன்னுரிமைப் படுத்தல் முறைமைக்கான (GSP+) பாதிப்புகளுடன் இலங்கையில் சீர்குலையும் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக

---

[97]மீரா ஸ்ரீநிவாசன், 'டுவிட்டர் சச்சரவுகளின் மத்தியில், இலங்கையில் மண்டரின் பெயர்ப் பலகையை மாற்றுவதற்கு முயற்சி'(Amid twitter spat, move to replace Mandarin board in Sri Lanka) (மே 2021), த ஹிந்து https://www.thehindu.com/news/international/amid-twitter-spat-move-to-replace-mandarin-board-in-sri-lanka/article34622663.ece

[98]'சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவதை இலங்கை நீக்குகிறது' (Sri Lanka scraps Tamil national anthem at Independence Day) (பெப்ரெவரி 2020), அல்ஜஸீரா https://www.aljazeera.com/news/2020/2/4/sri-lanka-scraps-tamil-national-anthem-at-independence-day

[99]'நாட்டில் குழப்பங்கள் மத்தியில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்: ம.ரா' (Constitutional reforms amidst chaos in country: MR ) (டிசம்பர் 2016), டெய்லி மிரர் https://www.dailymirror.lk/article/Constitutional-reforms-amidst-chaos-in-country-MR--120218.html

[100]இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மனித உரிமைகளை முன்னேற்றுதல், தீர்மானம் 46/1, 23 மார்ச் 2021.

ஒரு கடுமையான தீர்மானத்தை அங்கீகரித்தது.[101] இலங்கையின் கடந்தகால துஷ்பிரயோகங்களுடன் பொறுப்புக்கூறலுக்கான போராட்டங்கள் வெவ்வேறு தலைநகரங்களில் இலங்கையிலிருந்தானவர்களின் (பாதிக்கப்பட்டவர்-தப்பிப்பிழைத்தவர் குழுக்கள், சிவில் சமூக மற்றும் அரசியல் அமைப்புகள்) மற்றும் வெளியிலுள்ளவர்களின் (ஐ.நா பொறிமுறைகள் மற்றும் விசேட நடைமுறைகள், சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர்கள்) குரல்கள் மூலம் இந்த சர்வதேச முன்னெடுப்புகளுடன் காணப்பட்டது.

கடந்த மற்றும் நடைபெறும் மீறல்கள் மீதான கவனத்துடன், இந்தக் கலந்துரையாடல்களில் அதிகமானவை அரசாங்கத் தரப்பு, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஏனையவர்கள் பற்றிய குற்றச்சாட்டுகள், எதிர் குற்றச்சாட்டுகள் என்பவற்றைச் சுற்றியே அமைந்திருந்தன. அதிகளவிற்கு போட்டியான மற்றும் பிரிவினைத் தன்மையான இக் கலந்துரையாடல்கள் வேறுபட்ட குழுக்கள் மத்தியில் ஆழமாக ஊடுருவிப் போயுள்ள நிலைமைகளையே சுட்டிக்காட்டியதுடன் இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கு குழப்பம் மற்றும் சிக்கலான பரிமாணங்களை வெளிப்படுத்தின. அத்தோடு அது, சிங்கள மற்றும் தமிழ் தேசியவாத முகாம்களிலிருந்து பொருத்தமான இடவெளிகளுக்கு முயற்சித்தும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் படிநிலையை உருவாக்கும் தீவிர நிலைப்பாடு பொறுப்புக் கூறலுக்காக ஒன்றுபட்டு நின்று குரலெழுப்பிய குழுக்களினுள்ளும் மற்றும் மத்தியிலும் பிளவுகளைக் கண்டது.

ஜனவரி 2015 இல் அதிகாரத்தின் அமைதியான மாற்றத்துடனான இடவெளியின் திறத்தலுடன், பலரினதும் வேறுபட்ட நலன்கள் கூடுதல் சொல்லப்படுபவையாக வந்தன. 2015 இல் தீர்மானம் 30/1 இன் அங்கீகரித்தலை ஆதரித்த பலரும் இலங்கையில் மோதல் மற்றும் குற்றவிலக்களிப்பின் மூலகாரணங்களைக் கவனம் கொள்வதற்கு இலங்கையில் சீர்திருத்தத்தின் வழிகாட்டலை ஒரு வாய்ப்பாகக் கண்டனர். மற்றையவர்களுக்கு, இலங்கையிலுள்ள தமிழ் தேசியவாதக் குழுக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரிலுள்ள தீவிரப்போக்கு குரல்கள் உட்பட்டோருக்கு, தீர்மானம் 30/1 இல் மேற்கொண்ட வாக்குறுதிகள் போதுமானவையாக இல்லை. காணாமற் போனவர்களுக்கான அலுவலகத்தின் (OMP) உருவாக்கம் மற்றும் செயற்பாடுகளுக்கு எதிரான சில முனைப்பான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கண்டவாறு வாக்குறுதிகள் சிலவற்றின் நடைமுறைப்படுத்தலைக் கடுமையாக எதிர்த்து, பின்னர் உடனே ஆரம்பிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தச் செயன்முறை மற்றும் நிலைமாறுகால நீதிச் செயன்முறை என்பன கடுமையாக விமர்சிக்கப்பட்டன. இந்த நிகழ்வுகள் பாதிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சிவில் சமூகங்களிற்குள் பிளவுகளை ஏற்படுத்தியதுடன் இந்த அமைப்புகளின் பலவீனத்தை வெளிப்படுத்தின. வெளிவாரியான சக்திகளின் செல்வாக்கு மற்றும் அவற்றின் மீதான தங்கியிருத்தலின் மேலதிக பரிமாணங்களும் அங்கிருந்ததுடன் அவை சிக்கல்களின் ஒரு புதிய அடுக்கையும் சேர்த்தன.

2019 இலிருந்து சர்வாதிகார மற்றும் இராணுவ ஆட்சிமுறையிலான அதிகரிப்பு பல்வேறு குழுக்கள் ஒன்றுபட்டு, மீண்டும் மிகவும் வலுவான சர்வதேச சம்பந்தப்படுதல் மற்றும் நடவடிக்கைக்கு அழைத்தன. பெப்ரெவரி 2021 இல் தமிழ் அரசியல் குழுக்கள் மற்றும் ஏனையவர்களால் அனுப்பிய ஒரு கூட்டுக் கடிதம் உட்பட[102], மார்ச் 2021 இல் யு.என்.எச்.ஆர்.சி இற்கு இட்டுச் சென்ற முயற்சிகளுடன் இது வெளிக்காணப்பட்டது ஆனாலும் அத்தகைய முயற்சிகள் இருக்கின்ற பிரிவுகளில் முழுமையாக கவனம் செலுத்துவற்கு சாத்தியமற்றவை என்பதுடன் அங்கே சில எடுக்கும் தீவிர நிலைப்பாடுகள் கூடுதல் மிதவாதக் குரல்களை

---

[101] இலங்கையில் மனித உரிமைகள், குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்பாக ஐரோப்பியப் பாராளுமன்றத் தீர்மானம். 10 ஜூன 2021.

[102] ‘தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைந்து ஜெனீவாவில் ஐ.நா இடம் கோரிக்கைகளை உயர்த்துகின்றன’(Tamil parties unitedly escalate demands at UN in Geneva)’ (ஜனவரி 2021), டெய்லி எப்டி: https://www.ft.lk/columns/ Tamil-parties-unitedly-escalate-demands-at-UN-in-Geneva/4-712182

மேவி மறைப்பதற்கு அடிக்கடி எத்தனித்தன. பாதிக்கப்படல்நிலை மற்றும் அடையாளம் என்பவற்றின் அரசியலாக்கப்படுதல் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு சூழ்நிலையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கு தள்ளும் முயற்சிகள் கடினமானவை. சவால்களின் பன்மைத்துவத்தைக் கருதுகையில், இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் அனைத்துக் கரிசனைகள் மீதும் கவனம் செலுத்தும் ஒரு நிலையான தீர்வு கண்டு பிடிக்கப்படுமென்பது சாத்தியமற்றது.

யு.என்.எச்.ஆர்.சி இல் ஒரு வலுவான தீர்மானத்தின் அங்கீகரித்தல், ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் அதன் பின்னான தீர்மானம் அதே போன்று கனடாவின் ஒன்டாரியோ மாநிலச் சட்டமன்றத்தில் தமிழினவழிப்பு கல்வி வாரச் சட்டத்தின் பாதை ஆகிய அனைத்தும் இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் அதிகாரப் பரப்பிற்குள்ளான அண்மைய அனர்த்தங்கள் குறித்துப் பேசுகின்றன. இலங்கையின் இறையாண்மையின் பாதுகாத்தலுக்கு மேற்கொண்ட உணர்ச்சிமயமான அறிக்கைகள் உள்ளக சொல்லலங்காரங்களுக்கு அப்பால் அரிதாகவே கவனம் செலுத்தியதுடன், அவற்றுள் பல ஒரு வெளியுறவுக் கொள்கை அப்பியாசமாக காண்பதற்குப் பதிலாக பார்வையாளர்களைக் கவருவதற்கு இலக்கு வைத்தன. மேலும், முக்கியமான நிகழ்வுகளுக்கு வழிநடத்திச் செல்லத் தேவையான திட்டமிடல் மற்றும் தயாராதல் இல்லாததை பல நிகழ்வுகள் சுட்டிக்காட்டியதுடன், இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை யார் மற்றும் எது இட்டுச்செல்கின்றனர் என்பதுடனான கரிசனைகளை எழுப்பியது.

இலங்கையில் சர்வதேச சமூகத்தின் சம்பந்தப்படுதல் மற்றொரு பரிமாணகும். உறுதியான கொள்கை நிலைப்பாட்டை எடுப்பதற்கு இயலாமை மற்றும் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது மனிதாபிமான நெருக்கடிக்கான தயாரின்மை போன்ற விளைவுகள் ஐக்கிய நாடுகளின் தோல்விகளைச் பெட்ரீ அறிக்கையில் (Petrie Report)[103] சுட்டிக் காட்டியது. மனித உரிமைகள், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான கூருணர்வு கொண்ட விடயங்களை கவனத்தில் எடுப்பதற்குப் பதிலாக அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதற்கு தெரிவு கொண்டு, நடைமுறை ரீதியான மற்றம் அபிவிருத்தி சார்ந்த ஒரு அணுகமுறைக்கு சர்வதேச சமூகத்திலுள்ள யாரேனும் நாடுகின்றனரா என்ற அப்போதிருந்ததைப் போன்ற கருத்துகள் இப்போது பகிரப்படுகின்றன. அத்தகையதொரு அணுகுமுறை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பிரச்சினையான நிகழ்ச்சித்திட்டங்களை சட்டபூர்வமானதாகவும் மற்றும் வலுவாக்குவது மட்டுமின்றி பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூகம், ஊடகம் மற்றும் ஏனையவர்களுக்காக இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட இடத்தைச் சுருக்குவதிலும் உதவுகிறது.

***எதிர்க்கட்சி மற்றும் செயலாற்றல்திறன்***

ஆட்சிமுறைமையிலான எண்ணற்ற தவறான நடவடிக்கைகள் மற்றும் இலங்கையில் ஆழமாகும் சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகள், அவற்றைத் தீவிரப்படுத்தி ஓர் உந்தத்தைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்க்கட்சிக்கு ஒரு வாய்ப்புக்கான தருணத்தை வழங்குகின்றன. இந்த வாய்ப்புகளை மிகுதியாக்குவதிலான தவறுதல்கள் ஒரு தெளிவான நோக்கு மற்றும் தலைமைத்துவம் இல்லாத ஒரு பிளவுபட்ட எதிர்க்கட்சி பற்றி குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் அதிகரிக்கும் கண்மூடித்தனமான தவறுகளை பயனுறுதியான வகையில் எதிர்ப்பதற்கும் மற்றும் ஊழல், பாரபட்சம் மற்றும் வன்முறைகளை வெளிப்படுத்துவதற்குமான அவர்களின் இயலாமைக்கு இணைத்து, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதான எதிர்க்கட்சியான, ஐக்கிய மக்கள் சக்தி, பெரும் விமர்சனங்களை அண்மைய மாதங்கள் கண்டது.

[103]'இலங்கை தொடர்பாக உள்ளக மீளாய்வுக் குழு அறிக்கை மீதான கூற்று' (Statement on the Internal Review Panel Report on Sri Lanka ) (நவெம்பர் 2012), ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் https://www.un.org/sg/en/content/sg/speeches/2012-11-14/statement-internal-review-panel-report-sri-lanka

2020 பாராளுமன்றத் தேர்தல்கள் எதிர்க்கட்சிக் குழுக்கள் மத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது, ஐ.ம.ச அதிக எண்ணிகையுடனான ஆசனங்களையும் அதனைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ) மற்றும் தேசிய மக்கள் சக்தி (தே.ம.ச) என்பவையும் ஆசனங்களை வென்றன. தே.ம.ச இளம் மற்றும் தெற்கிலுள்ள மிதவாத வாக்காளர்களுடன் தொடர்புபட்டிருந்த போதிலும், ஆட்சிமுறைமையிலான அவர்களது நிலைகள் மற்றும் சர்வாதிகாரவாதத்திற்கு எதிராக, போதுமான ஆசனங்களைத் தக்க வைப்பதற்கு தவறியதுடன் தனியே 3 உறுப்பினர்களுடன் பாராளுமன்றம் திரும்பியது. அதைப்போன்றே, த.தே.கூ பாராளுமன்றத்தில் தங்களின் முன்னைய 16 ஆசனங்களைத் தக்க வைப்பதற்குத் தவறியதுடன் பதிலுக்கு 10 ஆசனங்களுடன் மாத்திரம் பாராளுமன்றம் திரும்பினர். ஒரு அரசியல் தீர்வுடன் உறுதியான முன்னேற்றம் காணாமை மற்றும் பொருளாதார கஷ்டங்கள் குறித்து கவனம் செலுத்த இயலாமை என்பவற்றுடன் தமிழ் வாக்காளர்கள் ஏமாற்றமடைந்ததையே த.தே.கூ இன் அவர்களின் இந்த மந்தமான செயற்பாடு சுட்டிக்காட்டியது. இது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி (த.தே.ம.மு) மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (த.ம.தே.கூ) பாராளுமன்றம் நுழைந்ததைக் கண்டது.

மேலும், இலங்கையில் பல அரசியல் கட்சிகளும் பலவீனமடைவதை அண்மைய வருடங்கள் கண்டன. இலங்கை சுதந்திரக் கட்சி கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு பெரும் வெற்றியை ஈட்டியதுடன் அதன் வேட்பாளர் மாவட்டத்திலேயே மிக அதிக எண்ணிக்கை விருப்பு வாக்குகளைப் பெற்று பட்டியிலில் முதலிடம் பெற்றார். பிரதேசத்தில் வாழ்வாதாரங்கள் மற்றும் அபிவிருத்திக்கு உதவுவதான இ.சு.க இன் வாக்குறுதி, பலவற்றிடையே இழுத்தடிப்பைக் கண்டதுடன் பிரதேசத்திலுள்ள வாழ்க்கையின் யதார்த்தை வெளிப்படுத்தியது. மேலதிகமாக, அண்மைய வருடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் மோசமான பதிவு மிக மோசமான தேர்தல் செயற்பாட்டினை ஈட்டிக்கொண்டதுடன் தேசியப் பட்டியல் மூலமான ஒரேயொரு ஆசனத்தினூடாக உள்நுழைவதற்கு இயலுமாகவிருந்தது. சுமார் 10 மாதங்களாக இந்த ஆசனத்தை நிரப்புவதற்கான அதன் இயலாமை, ஈற்றில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நிரப்பப்பட்டது பல்வேறு தேர்தல் பின்னடைவுகளின் பின்னரும் புதிய தலைமைத்துவத்தை கண்டு பிடிப்பதற்கு கட்சியின் சிந்தித்தல் திறனின்மையைப் பேசுகிறது.

அரசாங்கத்தின் மேனிலைப் பெரும்பான்மை பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் விடயங்களில் கட்டளையிடுவதற்கான அவர்களின் இயலுமையை உறுதிப்படுத்தியது. துறைமுக நகரச் சட்டமூலத்தில் மிக அண்மையில் கண்டவாறு, நிலையியல் கட்டளைகள், மற்றும் விவாதங்களுக்கான நேரங்களை ஒதுக்குதல் தொடர்பான தீர்மானங்கள் என்பவற்றில் மேற்கொண்ட மாற்றங்கள் உட்பட, பல நடவடிக்கைகளில் இது அவதானிக்கப் பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், மூன்றாவது அலையின் பின்னணியில் விவாதங்களைத் தாமதிப்பதற்கு எதிர்க்கட்சியினால் கோரிக்கைகள் எழுப்பப்பட்ட போதிலும், அரசாங்கம் இரண்டு நாள் விவாதமொன்றுக்கு தங்களின் தீர்மானத்தை முன்னோக்கித் தள்ளுவதற்கு இயலுமாக இருந்தது. தங்களது உரைகளுக்காக வாய்ப்பைப் பெற்ற சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு மற்றும் தடுத்து வைக்கப்படுவதையும் மற்றையவர்கள் ஏனைய வடிவிலான தொல்லைகள் மற்றும் இனவாத சொல்லாடலின் புதிய மட்டங்கள் உட்பட பெயர் அழைக்கப்படுதலுக்கும் முகங் கொடுத்தனர்.

முன்னொருபோதும் இருந்திராத சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் போது ஒன்றுபட்டிருப்பதற்கு எதிர்க்கட்சியின் இயலாமை, அரசியல் களநிலவரம் பற்றிப் பேசுகிறது. இது தொலைநோக்கு மற்றும் அரசியல் மதிநுட்பம் என்பவற்றின் ஓர் இன்மையால் கூட பகுதியளவில் பங்களிக்கப்பட்டிருக்க முடியும். ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியும் பெரும்பான்மைவாதக் கொள்கைகளைத் தழுவியவாறும் மற்றும் சிறுபான்மைகளை அநேகம் அந்நியப்படுத்தும் தன்மையுடன் இலங்கை பொதுஜன பெரமுனக் கட்சியுடன் சித்தாந்த ரீதியில் இணக்கமானவையெனப் பலரும் கருதுகிறார்கள். இது கணிசமான வாக்காளர்

அக்கறையின்மை மற்றும் எதிர்காலத் தேர்தல்களில் குறைந்த வாக்காளர் வாக்களிப்பு வீதத்தையும் விளைவிக்க முடியும்.

இதில், கடந்த காலத்தில் வெற்றிகரமான பிரச்சாரங்கள் ஓர் அரசியல் தீர்வு மற்றும் ஜனநாயகச் சார்புச் சீர்திருத்தங்களை ஆதரித்தவையாக அமைந்திருந்ததை ஒருவர் நினைவில் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறான பிரச்சாரங்கள், சிறுபான்மையினரின் ஆதரவை எப்போதும் கொண்டிருந்தன. இந்தக் கணிசமான வாக்கு வங்கியை அந்நியப்படுத்துதல் பாரிய தேர்தல் பின்னடைவுகளை அதனுடன் கொண்டு வருவதுடன் சிங்கள தேசியவாத சக்திகளை மேலும் வலுப்பெறச் செய்யும்.

ஆனாலும், சிறுபான்மைகள் உட்பட எதிர்க்கட்சிக் குழுக்கள் தேசிய அரசியல் மற்றும் தேர்தல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும் இனங் காணப்பட்ட விடயங்களின் ஒரு பொதுத் தளத்திற்கு ஒன்றுபட்டு வர முடியுமா என்பதே இங்கிருக்கும் சோதனையாகும். பெருந்தொற்றுப் பதிலிறுப்பு, சுற்றுச்சூழல் அழிவடைதல், பொருளாதார நெருக்கடி என்பவற்றின் தவறான முகாமைத்துவம் மற்றும் ஏனைய பல்வேறு பின்னடைவுகள் ஆட்சி பலவீனமாக உள்ளதிற்கான பல உதாரணங்களை வழங்குகிறது. எதிர்க்கட்சி இவற்றை பற்றிப் பிடித்து வலுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை இது வழங்குகிறது, ஆனாலும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு அப்பால் போகும் ஒரு நிலைபேறான வகையில் பலனளிப்பதற்கு இன்னமும் வரவேண்டியுள்ளது. அதிகரிக்கும் சவால்களோடு, தற்போதானதும் மற்றும் உடனடியான எதிர்காலத்திலும் முகம் கொடுக்கும் உண்மையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு, கடந்த காலத்தில் மேற்கொண்டவாறு, ஒரு பன்மைத்துவ ஜனநாயக சக்தியை உருவாக்குவதற்கு, பல்வகைப்பட்ட அரசியல் கட்சியமைப்புகள் ஒன்றுபட்டு வருமா என்பது பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

வேறுபட்ட முகாம்களிலிருந்து பீறிட்ட சில சக்திகள் மூலம் பலவீனமான எதிர்க்கட்சி வேறுபடுத்தப்பட முடியும். 20ஆவது திருத்தம் மற்றும் துறைமுக நகரச் சட்டமூலம் ஆகிய இரண்டிற்குமான எதிர்ப்பு, அரசாங்கத்தின் சொந்தக் கூட்டணியிலிருந்தானது உட்பட, வேறுபட்ட குழுக்கள் ஒன்றிணைந்து உத்தேசிக்கப்பட்ட சட்டவாக்கத்தை சவாலுக்குட் படுத்துவதில் ஒற்றுமைப்பட்டதைக் கண்டது. அரசாங்கத்தினுள்ளிருந்தும் மற்றும் எதிர்க் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் ஏனையவர்களிடமிருந்து சவால்கள் வந்ததென்ற உண்மை பன்மைத்துவ நிகழ்ச்சிநிரல் மற்றும் மாறுபட்ட கருத்தியல் அடிப்படைகள் என்பவை பற்றிப் பேசுகிறது.

அடக்குமுறை அரசாங்கத்தின் நடவடிக்கை பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து எதிர்ப்புகளைச் சந்தித்தது. பொத்துவிலிருந்து பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி (P2P) இதற்கான குறிப்பிட்ட அரசியல் முக்கியத்துவம் கொண்ட ஒரு பேரணியாகும். ஆர்ப்பாட்டக்காரர்களால் 10 கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, அவையாவன:

1. பெரும்பான்மை தமிழ் பிரதேசங்களில் நிலம்/காணி ஆக்கிரமித்தலை நிறுத்துவது.
2. தமிழ் பிரதேசங்களின் இராணுமயப்படுத்துதல் மற்றும் வடக்கில் வேண்டுமென்றேயான சிங்களமயமாக்குதலை நிறுத்துவது.
3. மனித உரிமைத் துஷ்பிரயோகங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமைத் துஷ்பிரயோகங்களை எதிர்த்துப் போராடும் சிவில் சமூக ஆர்வலர்களைக் குறிவைப்பதை நிறுத்துவது.
4. மேய்ச்சல் தரைப் பகுதிகளின் ஆக்கிரமித்தல் மற்றும் தமிழ் கால்நடை விவசாயிகளிற்குச் சொந்தமான பசுக்களின் கொல்லுதலை நிறுத்துவது.

5.யுத்தத்தில் இறந்து போனவர்களின் நினைவுகூருதலை அனுமதிப்பது மற்றும் ஞாபகார்த்தச் சின்னங்களை அழித்தலை நிறுத்துவது.
6.கொவிட்-19 இறந்தவர்களின் அடக்கம் செய்தல் மீதான தடையை நீக்குவது.
7.சிறுபான்மை இளைஞர்களை குறி வைப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் உபயோகித்தலை நிறுத்துவது.
8.வழக்கு விசாரணையின்றி இன்னமும் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் தடுத்து வைத்தலை நிறுத்துவது.
9. காணாமற்போனவர்களின் குடும்பங்களிற்கு மறுமொழிகள் வழங்கல்.
10.பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் மலைநாட்டுத் தமிழர்களுக்கு நாளொன்றுக்கு 1000 ரூபாய்கள் சம்பள அதிகரிப்பு[104]

முக்கியமாக, இந்த எழுச்சிப் பேரணி தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய இரு தரப்பு அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களை ஒன்றிணைந்து வருவதைக் கண்டது. இந்தப் பேரணி பாதிக்கப்பட்ட சமூகங்களின் மீள்நிலையுறல் மற்றும் சமீப காலத்தில் கண்டிராத ஓர் அளவுக்கு பாதிக்கப்பட்ட குழுக்களிடையே கூட்டிணைப்பு உருவாக் கத்திற்கான ஒரு கொள்ளளவு என்பவற்றின் ஒரு குறிக்காட்டியாகவும் அமைந்தது. பேரணியில் பங்குபற்றுவதிலிருந்து அரசியல்வாதிகள் பலரைத் தடுப்பதற்கு நீதிமன்றக் கட்டளைகள் நாடப்பட்ட போதிலும், பலர் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கேற்பாடு செய்தல் மற்றும் மக்கள் பங்குபற்றலை உறுதிப்படுத்தல் என்பவற்றில் முக்கிய பாத்திரம் வகித்தனர். வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பான குறித்த பிரச்சினைகள் மீது பெரிதும் கவனம் செலுத்திய வடக்கு மற்றும் கிழக்கின் முன்னைய ஆர்ப்பாட்டங்களிலிருந்து விலகி முஸ்லிம் மற்றும் மலைநாட்டுத் தமிழர் பிரச்சினைகளையும் உள்ளிணைத்தமை ஒரு குறிப்பிடத்தக்கதான மாற்றத்தைக் கருதியது. கடந்த அண்மைக் காலத்தில் தங்களது சொந்தப் பிணக்குகளின் காரணமான ஒரு நட்புறவைக் கொண்டிருந்த சமூகங்களிடையே அரச அடக்குமுறைக்கு எதிராக ஓர் ஒற்றுமையான முன்னணியின் சாத்தியத்திற்கான அத்திவாரத்தைப், பேரணி இட்டது.

அடக்குமுறையான அரசின் நடவடிக்கைகளுக்கு இந்தக் கூட்டணிகளின் உருவாக்கமும் எதிர்ப்பும் ஊக்கம் தருபவையாக இருந்தாலும், தமிழ்-முஸ்லிம் உறவுகளின் பிரச்சினை தொடர்பில் பேரணி ஒரு சகலரோக நிவாரணியல்ல. பொலிகண்டியில் பேரணி முடிவில் தமிழ் தேசியவாதிகக் கூற்றுகள், இந்த ஒருமைப்பாட்டின சாத்தியத்தை சிக்கலாக்கு கின்றதுடன் ஆர்ப்பாட்டப் பேரணியில் முஸ்லிம் பிரச்சினைகளின் உள்வாங்கல் பெயரளவி லானது என அதன் முக்கியத்துவத்தைக் குறைக்கும் ஆபத்து உள்ளதாகிறது. அரசுக்கான எதிர்ப்பின் அத்திவாரமாக தேசியவாதக் கருத்தியலை உபயோகித்தலென்பது, குறிப்பாக வடக்கிலிருந்து முஸ்லிம் சமூகம் த.வி.பு ஆல் வெளியேற்றப்பட்ட ஒரு வரலாறு, மற்றும் எல்லை நிர்ணயங்களுக்கான கேள்விகள் தொடர்பாக தமிழ் தேசியவாதத்தின பரந்த கருத்தியல் அர்த்தப்படுதல்களின் பின்னணியில், முஸ்லிம் சமூகத்துடன் இணைப்பைக் கட்டியெழுப்பும் ஒரு நிலைப்பாட்டிற்கான விலையில் வந்தமைகிறது.[105]

[104]'P2P ஆர்ப்பாட்டப் பேரணியின் பின் சுமந்திரனுக்கான விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டது' (STF security for Sumanthiran withdrawn after P2P protest) (பெப்ரெவரி 2021), டெய்லி எப்டி: https://www.ft.lk/columns/STF-security-for-Sumanthiran-withdrawn-after-P2P-protest/4-712954

[105]மகேந்திரன் திருவரங்கன், P2P பேரணி மற்றும் அதற்கப்பால், இனத் துருவமயப்படுத்தல் மத்தியில் எதிர்ப்பை மீள்கற்பிதம் செய்தல் ('The P2P march and beyond, re-imagining resistance amidst ethnic polarisation') (பெப்ரெவரி 2021), த மோர்னிங் https://www.themorning.lk/the-p2p-march-and-beyond-re-imagining-resistance-amidst-ethnic-polarisation/

யு.என்.எச்.ஆர்.சி இல், இலங்கை தொடர்பாக வரவிருந்த விவாதம் அந்த சமயத்தில் இலங்கையின் பதிலிறுப்பு தொடர்பாக ராஜதந்திர ரீதியிலான சிக்கல்களை உருவாக்கியது. வாக்கு வங்கியிலுள்ள அதன் தேசியவாதக் கடுங்கோட்பாட்டாளர்களை சமாதானப்படுத்தி பேரணிக்கு எதிராக மக்கள் அபிப்பிராயத்தை வலுப்படுத்தும் வகையில் பதிலிறுப்பு கவன மானதாக இருக்க வேண்டிய அதே சமயம், அது ஆர்ப்பாட்டக்காரர்களை கண்டித்து விமர்சிப்பதற்கும் இயலுமாதல் வேண்டும். பேரணியில் சம்பந்தப்பட்ட தனிப்பட்டவர்கள், எதிர்பார்க்கப்பட்ட வகையில், அரசிடமிருந்து ஒரு தண்டிக்கும் வகையிலான பதிலிறுப்பை எதிர்கொண்டனர். தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, *'நீதிமன்றக் கட்டளைகளை நாங்கள் பெற்றிருப்பதால், அவர்களது புகைப்படங்கள், வாகன இலக்கங்கள் என்பன எங்களிடம் உள்ளன. எங்களுக்கு இந்த ஆட்கள் யாரென்று தெரியும். அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவர்களின் அனைத்து வாகனங்களையும் பறிமுதல் செய்து அவர்களைச் சிறையில் போட முடியும்'* எனக் குறிப்பிட்டு, பேரணியில் பங்குபற்றியோர்கள் கைது செய்யப்பட முடியும் எனக் கூறினார்.'[106] இந்த அறிவித்தலைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றியவர்களுக்கு எதிராக எண்ணற்ற பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் ஏபிரஹாம் சுமந்திரனின் விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு, அவருக்கு எதிராக நம்பகமான உயிர் அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும், வீரசேகரவினால் நீக்கப்பட்டது.[107] ப.த.ச மற்றும் ஐ.சி.சி.பி.ஆர் சட்டங்களின் கீழ் முன்னம் குறிப்பிட்ட கைதுகளோடு, விமர்சிப்பவர்களைக் குறிவைப்பதற்கும் மற்றும் தண்டிப்பதற்கும் தனது பதவிநிலையை வீரசேகர இங்கு உபயோகித்தமை மாற்றுக் குரல்களை மௌனப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் ஒரு பரந்த அழுத்தத்தின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டுகிறது.

### *நிலம்/காணி முரண்பாடுகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான பாதிப்புகள்*

புதிய அரசாங்கம் 2019 இல் வந்ததிலிருந்து மேலுள்ள பிரிவில் விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரச்சினையும், மிகச் சரியாக, ஆய்வு இலக்கியங்கள் மற்றும் பொது அரசியல் விவாதங்களில் விரிவாக கலந்துரையாடப்பட்டு மற்றும் ஆராயப்பட்டது. எனினும், முரண் பாட்டின் ஒரு மூலமாகவும், இந்த விவாதங்களில் முக்கியமானவையாகவும் இல்லாத, ஆனால் இலங்கையில் இனங்களிற்கிடையிலான உறவுகளின் பாதையை நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டுமாயின், ஒரு கவனமான கூர்ந்தாய்வைத் தேவைப்படுத்தும் விடயம், நிலம்/காணி தொடர்பான பிரச்சினையாகும்.

இந்த முரண்பாடுகளின் சிக்கலான நிலை மற்றும் ஆழ வேரூன்றியுள்ள தன்மை என்பவற்றைக் காண்பிக்கும் தசாப்தங்களுக்குமாகப் பரந்துள்ள சம்பவங்களுடன், நிலம்/காணி ஒரு முரண்பாட்டின் இயக்கியாக உள்ளதென்பது இலங்கையில் ஒரு புதிய தோற்றப் பாடல்ல. இவை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத் தேவைகள், தேசிய பாது காப்பு மற்றும் போட்டியான மத அமைவிடங்களென பெயரிடுவதற்கு ஒரு சிலவானவற்றுடன் இணைக்கப்பட்ட நிலம்/காணி பராதீனப்படுத்துதல் திட்டங்களைச் சுற்றிச் சூழ்ந்தவையாக உள்ளன. இந்தத் திட்டங்களின் அரசியல் மற்றும் பொருளாதார தன்மை இந்தத் சம்பவங்கள் சிவற்றை சிக்கலாக்கியுள்ளன. இன ரீதியான மக்கட் பரம்பலை மாற்றும் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அழிப்பிக்கும் குறிக்கோளுடன் அவர்களது காணிகள் அல்லது நிலங்களிலிருந்து சமூகங்களின் உரிமை பறித்தல் மற்றும்

[106]ஹிரு தொலைக்காட்சி நேர்காணல், பெப்ரெவரி 8, 2021 https://www.youtube.com/ watch?v= 7aXyseftLrw&t=3797s

[107]டி.பி.எஸ்.ஜெயராஜ், 'P2P பேரணியின் பின் சுமந்திரனுக்கான அதிரடிப் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டது' (STF security for Sumanthiran withdrawn after P2P protest) (பெப்ரெவரி 2021), டெய்லி எப்டி: https://www.ft.lk/columns/STF-security-for-Sumanthiran-withdrawn-after-P2P-protest/4-712954

இடம்பெயர்த்தல் என்பவற்றுடன் அவை இணைப்பதால் இந்த திட்ட முயற்சிகள் சிறுபான்மைச் சமூகங்களால் சந்தேகத்துடன் பல வருடங்களுக்குமாக நோக்கப் பட்டுள்ளது.

தங்களது கட்டுப்பாட்டுக்குட்பட்ட சம்பந்தப்பட்ட புவியியல் பிரதேசங்களில் காணிகள் மற்றும் காணி சொத்துரிமை, கட்டுப்பாடு, பயன்பாடு மற்றும் அணுகுவழி மீதும் சம்பந்தத்தைக் கொண்ட பராதீனப்படுத்தப்பட்ட காணிகள் மீது அதிகாரம் கொண்டிருந்த த.வி.பு மற்றும் ஏனைய இராணுவக் குழுக்கள் உட்பட அரசல்லாத செயற்பாட்டாளர்களின் வகிபாகம் ஒரு மேலதிக பரிமாணமாக இருந்தது. இவ்வாறு, இலங்கையில் போருக்கு பிந்திய சூழலில் முரண்பாட்டின் இயக்கிகள் பல இருக்கும் ஒரு நிலையில் சில முரண்பாடுகள் நீண்ட காலம் நீடித்ததுடன், காணி, போட்டிக்கான ஒரு தளமாக பல தசாப்தங்களாக இருந்துள்ளது.

மற்றைய பரிமாணங்களும் கூட பிரச்சினைகளின் சூழலுக்கு பங்களித்துள்ளன.[108] இந்த ஆவணத்தில் விவாதிக்கப்பட்டவாறு, அதிகரித்த இராணுவமயப்படுத்தலினால், காணிப் பிரச்சினைகளில் மத்திய அரசாங்கத்தின் வகிபாகம் ஒரு பிரச்சினைக்குரியதாக இருந்ததுடன் தொடர்ந்தும் அவ்வாறேயிருக்கும். இவையும் மற்றும் ஏனைய காரணிகளும் போருக்குப் பிந்திய வருடங்களில் காணி முரண்பாடுகளின் ஒரு சிக்கலான வலைப்பின்னலுக்குப் பங்களித்துள்ளதுடன் நல்லிணக்க முயற்சிகளில் மீது ஒரு பின்னடைவாகவும் இருந்தன. இருக்கும் விடயங்களுக்குப் பங்களிப்பவை அரசியல் மற்றும் மத ரீதியான நலன்கள் மற்றும் சகவாழ்வு, பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல் மீது கடும் தாக்கங்களைக் கொண்ட பொருளாதார செயல்திட்டங்களின் புதிய பரிமாணங்களாகும்.

நிலம்/காணி விடயங்களில் ஓர் அதிகரித்த முனைப்பான பங்கினை வகிக்கும் மத்திய அரசாங்க நிறுவனங்களுடன் இலங்கையில் செயற்படாத நிலையிலுள்ள மாகாண சபைகளைக் கொண்ட சூழலிலும் இந்த நிகழ்வுகள் உள்ளன. உதாரணத்திற்கு, கீழே பல சம்பவங்களில் விவாதிக்கப்பட்டவாறு, துறைசார் அமைச்சுகள் மற்றும் கொழும்பிலுள்ள திணைக்களங்கள் காணிகளை எல்லை பிரித்தல் மற்றும் அணுகுவழித் தீர்மானித்தல், கட்டுப்பாடு மற்றும் பயன்பாடு என்பவற்றில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. பாதுகாப்பு அமைப்பு மற்றும் சிவிலியன் நிர்வாகத்தினர் பௌத்த குருமாருடன் பணி செய்தல் மற்றும் செயலணிகள் மற்றும் குழுக்கள்[109] போன்றவற்றுடன் அதிகார மையப்படுத்தல் ஒரு புதிய மட்டத்திலுள்ளதுடன் இவை சமூகங்கள் மத்தியில் அச்சம், பயம் மற்றும் ஆழமான சந்தேகம் என்பவற்றை அதிகரிப்பதுடன் பலவீனமாகியுள்ள ஒரு சமாதானத்தைத் தொடர்ந்து சோதிக்கிறது.

***தேசிய மரபுரிமை மற்றும் தொல்பொருளியல்***

தேசிய மரபுரிமை அல்லது தொல்பொருட்களின் பாதுகாத்தல் பயன்பாடு புதியவையல்ல ஆனாலும், இலங்கையின் பாகங்களில் நிலவுரிமை மற்றும் பயன்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு அதன் பாவனையில் ஒரு புத்துயிரளித்தலை அண்மைய வருடங்கள் கண்டது, குறிப்பிட்ட ஆர்வத்துடன் வடக்கு மற்றும் கிழக்கிலான அதன் அண்மைய முயற்சிகள் தேசிய மரபுரிமை கொண்டவையென இடங்களை அடையாளங் காணவும் மற்றும் எல்லை நிர்ணயிக்கும் முயற்சிகளில் ஓர் அதிகரிப்பையும் கண்டன. இரகசிய மானவையாக அநேகம் மூடிமறைக்கப்பட்ட, அவ்வாறான முயற்சிகள், தங்களது நிலங்களிலிருந்து சிறுபான்மையினரை அநேகம் இடம்பெயரச் செய்யும், தேர்தல் அரசியல் மற்றும் நல்லிணக்கம்

[108]சொத்துரிமையை நிரூபிப்பதற்கு ஆவணங்களின்மை, போலி ஆவணங்களின் உபயோகம், உண்மையான உரிமையாளர்களின் இடம்பெயர்தல், காணியை விற்பதற்கு வற்புறுத்தல் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் என பல்வேறு பிரச்சினைகள் காரணமாக யுத்தத்தின் போதும் மற்றும் யுத்தத்திற்குப் பிந்திய வருடங்களிலும் தனியார் மற்றும் அரச காணிகள் ஆகிய இரண்டினதும் சொத்துரிமை மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்கான போட்டி அதிகரித்துள்ளது.

[109]கிழக்கு மாகாண ஆளுநர் 'சமூக அநீதி தொடர்பான நிபுணர்கள் குழு' ஒன்றை நியமித்தார், அது ஜனவரி 2021 இல் அந்த விடயங்களில் அமர்வை ஆரம்பித்தது.

என்பவற்றுக்கான கடுமையான பாதிப்புகளுடன் மக்கள் பரம்பல் தொகையில் மாற்றத்திற்கு வசதியளிக்கும் வகையில் புதிய குடியிருப்புகளை அறிமுகப் படுத்தும் என்ற ஓர் அச்சத்துடன் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தின.

இந்த விபரிப்பில் 'தேசிய மரபுரிமை' என்ற பதம் என்னவெனவும் ராஜபக்ச அரசாங்கத்தின் சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதக் கொள்கைகளை முன்னேற்றுவதற்கு அதன் உபயோகத்தையும் ஒருவர் விமர்சித்தல் வேண்டும். பௌத்த மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கான தனது விருப்பை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது கொள்கை அறிக்கையான, ''சுபிட்சத்தின் நோக்கு'', அனைத்து பௌத்த மரபுரிமை இடங்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் வரலாற்று மரபுரிமைகளைப் பேணிக் காப்பது தனது கடமையென குறிப்பிட்டுள்ளார். மாதாந்தம் கூடும் 'பௌத்த ஆலோசனைச் சபை' ஒன்றையும் அவர் நியமித்தார்.[110]

கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் செயலணி[111] மூன்று சமூகத்தினரையும் உள்ளடக்கியதாய் ஒரு மாகாணத்திலுள்ள தொல்பொருளியல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஜூன் 2020 இல் ஸ்தாபிக்கப்பட்டது, ஆனாலும் இந்த செயலணி பல பௌத்த குருமார்கள் உட்பட சிங்கள உறுப்பினர்களை மாத்திரம் கொண்டிருந்தது. மேலும், செயலணியின் ஓர உறுப்பினரான வணக்கத்திற்குரிய எல்லாவெல மேதானந்த தேரோ, கிழக்கு மாகாணத்தில் பௌத்த மரபுரிமை கொண்டவையாக செயலணி ஆராய்ந்து 2,000 இடங்களை அடையாளங் கண்டதாகக் குறிப்பிட்டார்.[112] இவ்வாறு கோரப்பட்டாலும், என்ன அடிப்படையில் இந்த 2,000 இடங்கள் அடையாளங் காணப்பட்டது என்பதைக் குறிப்பதற்கு பகிரங்கமாக கிடைக்கும் தகவல்கள் எதுவுமில்லை ஆனால் அவரது கூற்று மற்றும் ஏனைய நடவடிக்கைகள், பிரதான மதத்தைப் பாதுகாத்தல் மற்றும் ஏனையவற்றை விட முன்னுரிமையளித்தல் என்பவை சூட்சுமான நகர்வல்ல என்பதின் ஒரு சுட்டிக்காட்டலாகும்.

மேலும், தேசிய மரபுரிமையைப் பாதுகாப்பதென்பது இராணுவமயப்படுத்தலுடனும் நெருக்கமாக இணைந்துள்ளது. பௌத்த இடங்களில் மீள்நிர்மாணப் பணிகளுக்கு உதவுவதற்கும் மற்றும் சச்சரவான இடங்களில் பாதுகாப்புக்கும் உதவி வழங்குவதற்கு இராணுவத்தை உபயோகிக்கின்ற, ஒரு முன்னாள் இராணுவ அதிகாரியான பாதுகாப்புச் செயலாளரால் இச் செயலணி தலைமை தாங்கப்படுகிறது.

உளளூர் மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் மட்டுமே கிடைக்கும் விதத்துடன் செயலணியின் பணி இரகசியமானதாக மூடி மறைக்கப்பட்டுள்ளது. செயலணியிலுள்ள சில ஆட்கள் மற்றும் அரசாங்கத்துடனான அவர்களின் தொடர்புகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்கையில், அவை, கிழக்கு மாகாணத்தில் நிலவுரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை கணிசமாகப் பாதிக்கும் முயற்சிகளில் நகர்வை ஏற்படுத்துமென நம்பகமான அச்சங்கள் அங்குள்ளதுடன், அத்தகையை முயற்சிகளின் பாதிப்பை சிறுபான்மையினரே அநேகம் முகங் கொடுப்பார். புலனாய்வுத் துறையின் பலவீனமடைதல், வழிபாட்டுத் தலங்களின் பலவந்தமான

---

[110]பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் இடங்களை இணைத்து கவனமாக வடிவமைக்கப்பட்டிருந்தமை உத்தியோகபூர்வமாக கொழும்பிலுள்ள ஒரு பௌத்த ஆலயத்திலிருந்த ஆரம்பிக்கப்பட்ட அவரது ஜனாதிபதிப் பிரச்சாரத்தின் போது வெளிப்படையானதுடன் அவரது பிரச்சாரம் பௌத்த குருமாரால் பலமாக முன்னெடுக்கப்பட்டது. .

[111]விசேட வர்த்தமானி இல. 2178/17 ஆல் ஸ்தாபிக்கப்பட்டது. (Gazette Extraordinary no. 2178/17), 2 ஜூன் 2020

[112]'தொல்பொருட்கள் அகழ்வு வடக்கு, கிழக்கில்: 10 இடங்களில் பணிகள் ஆரம்பம்' (Antiquities excavation in North, East: Work commences on 10 sites) (ஜனவரி 2021), த மோர்னிங் https://www.themorning.lk /antiquities-excavation-in-north-east-work-commences-on-10-sites/

ஆக்கிரமிப்பு மற்றும் தொல்பொருளியல் இடங்களின் அழித்தல் தொடர்பில் ஜனாதிபதியின் அண்மைய குறிப்பிடல் தற்போதைய அரசாங்கத்தை ஆதரிக்கும் கடும் தேசியவாத சக்திகளின் நிகழ்ச்சிநிரலை முன்னேற்றுவதற்கு இராணுவமயப்படுத்தப்பட்ட மற்றும் கடுங் கோட்பாட்டுச் சிங்கள அமைப்புகளை உபயோகிப்பதற்கான சிந்தித்தலை சுட்டிக் காட்டுகிறது.[113]

குறிப்பிட்ட சில பிரதேசங்களிலுள்ள காணிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அண்மைய வருடங்களில் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தினால்[114] வகிக்கப்பட்ட அதிகரித்த பாத்திரம் குறித்து ஊடக அறிக்கைகள் மற்றும் பிரதேசத்திலுள்ளவர்களும் கூட குறிப்பிட்டனர், அவற்றுள் சில கீழே விவாதிக்கப்பட்டுள்ளது. இரகசியம் மற்றும் உரிய செயன்முறை என்பன இல்லாத ஒரு இடத்து, செயலணி மற்றும் மத்திய அரசாங்கத்தின் ஏனைய செயற்பாட்டாளர்கள் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சொந்தமான நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு முயல்கின்றனர் எனப் பலரும் அச்சம் கொண்டதுடன் இவற்றில் பௌத்த குருமாரும் சம்பந்தப்பட்டிருந்த பல சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில், முகுது மகா விகாரை சர்ச்சைகளுக்கான ஒரு குறிப்பிட்ட இடமாகும். இந்த இடம் 2020 இல் தொல்பொருள் செயலணித் தலைவருமான பாதுகாப்புச் செயலாளரால் விஜயம் செய்யப்பட்டதுடன், அப்போது ஆலயத்திற்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டுமென வேண்டிக் கொண்டார்.[115] அண்மைய கவனம் மற்றும் பாதுகாப்புப் பிரசன்னம் பல தசாப்தங்களுக்கும் மேலாக கொண்டிருந்த அவர்களின் உரிமைகளை இழக்கும் அச்சத்திற்கு உள்ளூர்வாசிகளை ஆக்கியதுடன் ஆலயத்தின் பௌத்த குரு தொல்பொருளியல் திணைக்களத்துடன் இணைந்து அவர்கள் குடியாட்சி செய்கின்ற நிலங்களை எடுப்பதற்கு செயலாற்றுவதாக அவர்கள் தெரிவித்தனர். தங்களது நிலங்களை இழந்துவிடும் அச்சத்தை கொண்டுள்ள சிறுபான்மையினர் மத்தியில் காரணங்கள் பல கலந்த ஒரு கலவையால் விவகாரத்திற்குரியதான ஒரு இடம் சமீபத்தைய முன்னெடுப்புகளுடன் தொடர்ந்து பதட்டங்களை ஏற்படுத்த முடியுமென்பதற்கு, இச்சம்பவம் ஒரு உதாரணமாகும்.

அம்பாறை மாவட்டம் சர்ச்சைக்குரிய ஏனைய பல இடங்களையும் கொண்டுள்ளது. நன்கறியப்பட்ட மற்றொரு இடம் ஆலயத்தின் வளாகத்திற்குள் வரும் காணியின் அளவு குறித்து மாறுபட்ட கோருதல்களுடன் கூடியதான தீகவாபி ஆலய வளாகமாகும்.[116] பெரும்பான்மைச் சமூகத்திலிருந்தான பலரும் ஆலயத்தைச் சுற்றிய பகுதிகளில் வரலாற்று மற்றும் மத ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் இருப்பதாகவும் மேலும் நிலங்கள் புனிதப் பகுதிகளாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டுமெனக் கோருகின்றனர். பெப்ரெவரி 2021 இல், தீகவாபிய நம்பிக்கை நிதியம் உருவாக்கப்பட்டது அதன் மூலம் அப்பகுதியில் பௌத்த சிலைகளை மீள்நிர்மாணிப்பதில் உதவுவதற்கு பொதுமக்கள்

113 ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவின் உரை, 25 ஜூன் 2021

114 சம்பந்தப்பட்டதான பல சட்டங்கள் 1940 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தொல்பொருள்கள் கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தங்களில் உள்ளடங்குகின்றன; தொல்பொருட்கள் (திருத்தம்) சட்டம் 1998. தொல்பொருளியல் சின்னங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான பரந்த அதிகாரத்தை பொறுப்பான அமைச்சர் கொண்டிருந்தார், இது அதிகளிவிற்கு சிறுபான்மையினரைக் கொண்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள அடையாளம் காண்பதற்கு உபயோகிக்கப்படுமென பலரும் அஞ்சினர்.

115 PARL அறிக்கை, 20 மே 2020

116 மேலதிக தகவல்களுக்கான உசாத்துணை – புனிதப் பிரதேசங்கள் மற்றும் கீழ்த்தர அரசியல்: மதத் தலங்கள் தொடர்பான பதட்டங்கள் மற்றும் இன உறவுகள் (For more information refer to- Of Sacred Sites and Profane Politics: Tensions over Religious Sites and Ethnic Relations), முஸ்லிம்களுக்கான செயலகம், 2015.

நன்கொடைகள் அளிக்க முடியும்.[117] ஊடக அறிக்கைகளின் படி மீள்ஸ்தாபித்தல் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தொல்பொருள் செயலணிப் படையின் தலைமைத்துவத்தின் கீழ் இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்பு படையால் மேற் கொள்ளப்படும்.

தேசிய மரபுரிமை மற்றும் தொல்பொருளியலின் பாதுகாப்பு என்ற போர்வையில் நில ஆக்கிரமித்தல்கள் கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல்வேறு பகுதிகளில் திணைக்களம் அதன் அதிகாரத்தின் கீழ் தனியார் மற்றும் அரச காணிகள் என இரண்டையும் கொண்டு வருவதற்கு அவற்றை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு முயல்கிறதென உள்ளூர்வாசிகளிடமிருந்தான அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. வர்த்தமானியில் அறிவிப்பதற்கான இந்த முயற்சிகள், அதிகாரிகள் காணிகளிற்குள் நுழைவதைத் தடை செய்வதற்கும் மற்றும் மத ஆலயங்களுக்கு காணிகளை வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வதிலிருந்து அதிகாரிகளைத் தடைப்படுத்துவதற்குமாக இடைக்காலக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதை விளைவித்தது.

மூதூர் பிரதேசத்திலான மற்றொரு சம்பவத்தில், பல தசாப்தங்களாக பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் நெற் பயிர்ச்செய்கைக்காக நிலத்தை உபயோகித்தமை, 2018 இல் உருவாக்கப்பட்ட ஒரு பௌத்த ஆலயமான மூதூர் கொட்டியாராம முல்லமகா விகாரையால் மேற்கொள்ளப்பட்ட கோரல்கள் காரணமாக பாதிக்கப்படலாம் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. நிலங்களை அளவீடு செய்வதற்கான பல்வேறு முயற்சிகள் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்ப்பு காரணமாக நிறுத்தப்பட்டதுடன் தற்போது மூதூர் நீதவான நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருக்கும் சர்ச்சைக்குரிய இடங்களுக்கு மேலதிகமாக, ஏனைய பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் அவற்றைக் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள உள்ளூர் மக்கள் இந்த இடங்கள் எவ்வாறு இனங் காணப்பட்டன மற்றும் உபயோகிக்கப்பட்ட தகைமைகள் என்ன என்பது பற்றி தகவல்கள் எதுவும் பகிரங்கமாக இல்லாத போதும், வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ள பிரதேசத்தில் வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள இடங்களை அடையாளப்படுத்தும் பட்டியல்கள் குறித்து தாங்கள் அறிந்திருப்பதாக உறுதிப்படுத்தினர்.[118]

நிலங்களை அளவீடு செய்வதற்கும் மற்றும் திணைக்களத்தின் கீழ் வரும் இடங்களாக அவற்றை வரையறை செய்வதற்கு அடையாளங்கள் இடுவதற்கும் தொல்பொருளியல் திணைக்களத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அண்மைய மாதங்கள் கண்டன. தொல்பொருளியல் திணைக்களம் வவுனியா, நெடுங்கேணியின் மாங்குளம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் மே மாதத்தில், மனிதனால் உருவாக்கப்பட்ட தொன்மையான

[117]தீகவாபிய புனருத்தாரணம் செய்வதற்கு நிதி ஏற்படுத்தப்பட உள்ளது' (Fund to be set up to renovate Deegawapiya) (ஆகஸ்ட் 2020), டெய்லி நியூஸ் http://www.dailynews.lk/2020/08/31/local/227403/fund-be-set-renovate-deegawapiya

[118]உதாரணத்திற்கு, மட்டக்களப்பு மாவட்டலிலுள்ள ஒரு பட்டியல் வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதற்கு அடையாளங் காணப்பட்ட 600 இற்குமதிகமான பெயர்களைக் காட்டியது. அது வடக்கு மற்றும் கிழக்கில் எந்த மாவட்டத்திலிருந்தும் இது வரை கண்ட அதிக எண்ணிக்கை கொண்டதாகும். அம்பாறையிலுள்ள உள்ளூர் மக்களும் கூட அம்பாறை மாவட்டத்திற்காக அப்படியானதொரு பட்டியல் இருப்பதை உறுதிப்படுத்தினர். தகவல் அறியும் உரிமைக்கான ஒரு விண்ணப்பம் மூலம் பெறப்பட்ட தகவல்களும் மன்னாரில் 26 இடங்களும், முல்லைத்தீவில் 53 இடங்களும், மற்றும் வவுனியா மாவட்டத்தில் 43 இடங்களும் வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதற்கு அடையாளங் காணப்பட்டு தொல்பொருளியல் திணைக்களத்தின் அதிகாரத்தினுள் கொண்டு வரப்பட்டதை சுட்டிக்காட்டியது. கள விஜயங்கள் பெப்ரெவரி மற்றும் மார்ச் 2021.

கலைப்பொருட்களுடனான ஒரு இடத்தைக் கண்டறிந்ததை ஊடக அறிக்கைகள் சுட்டிக் காட்டின.[119] ஊடக அறிக்கைகளின் படி, இடம் பற்றிய தகவல் திணக்களத்திற்கு இலங்கை இராணுவத்தின் 16ஆவது சிங்க படையணியால் கொடுக்கப்பட்டது. ஜனவரியில், திணைக் களத்திலிருந்து உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் கந்தரோடை எனுமிடத்தில் ஒரு நிலப் பகுதியை அளவீடு செய்ய முற்பட்டனர், ஆனால் இது உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அந்நடவடிக்கையை நிறுத்துவதற்கு அவர் ஸ்தலத்திற்கு சென்றார். இதைப் போன்ற நடவடிக்கை மட்டக்களப்பில் குசலான மலைக் குமரன் கோயிலில் நவெம்பர் 2020 இல் அவதானிக்கப்பட்டது. அந்த இந்துக் கோயில் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது எனவும் பல தசாப்தங்களாக கிராமத்திலுள்ள மக்கள் அங்கு வழிபட்டு வருவதாக உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர். 2020 இல் திணைக்களம் மலைக்கு விஜயம் செய்ததுடன் கற்களை இடுவதற்கு ஆரம்பித்தது. முன்கூட்டிய தகவல்கள் எதுவும் தரப்படவில்லையெனவும் அருகிலிருந்த கல்வெட்டுகள் அழிக்கப் பட்டதாகவும் உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். இதைப் போன்றே, திருகோணமலை, திரியாய் கிராமத்தில் திணைக்களம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் விவசாயிகளால் முன்னம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த சுமார் 950 ஏக்கர்கள் நிலப்பகுதிக்கு அடையாளக் கற்களை நாட்டியது. இவ்வாறான நடைமுறைகள் திருகோணமலையின் தென்னமரவாடி மற்றும் இரணைக்கேணி ஆகிய இடங்களில் அவதானிக்கப்பட்டது. கட்டுப்பாடுகள் காரணமாகவும் இதன் பயனாக தங்களது நிலங்களுக்கு அணுகுவழிகளில்லாதினாலும் விவசாயிகள் தற்போது விவசாயம் மேற்கொள்வதற்கு இயலாதுள்ளது.

'தேசிய மரபுரிமை' என்ற பதம் எவ்வாறு சில இடங்களை முன்னுரிமைப்படுத்துகின்ற மற்றும் பாதுகாக்கின்ற ஒரு சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதத்தால் தகவல்படுத்தப் படுவதையும், இந்தச் செய்முறையில் சிறுபான்மையினரையும் மற்றும் நிலங்கள் மீதான அவர்களின் கோரல்களையும் ஓரங்கட்டப்படுவதற்குமான சில குறிக்காட்டிகள் மட்டுமே மேற்குறிப்பிட்டவையாகும். இந்த நிகழ்ச்சிநிரலை வலியுறுத்துவதற்கு மத்திய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு படைகள் என்பவற்றின் அப்பட்டமான உபயோகம் பிரதேசத்திலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களில் அச்சத்தையும் மற்றும் நிலையான பயம் மற்றும் பதட்டத்தையும் மீளவும் உறுதிப்படுத்துகிறது.

போருக்கு பிந்திய வருடங்கள் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பிரதேசங்கள் உட்பட, தம்புள்ள, கூருகல, மற்றும் ஏனையவை என இலங்கை முழுவதிலும் பல இடங்களில் ஒரு மதப் பரிமாணத்தோடு அங்கே சவாலளிக்கும் வகையிலான காணி அல்லது நிலம் இருப்பது அவதானிக்கப்பட்டது.[120] இந்த சம்பவங்கள் பலவற்றில், அரசின் ஆதரவோடு பௌத்த குருமார் நிலங்கள் மீது கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவற்றுக்கு சிறு பான்மையினரின் அணுகுவழி மற்றும்/அல்லது பாவனையை தடுப்பதற்கும் இயலுமாகவிருந்தது. சிறுபான்மையினருக்கு முக்கியத்துவத்துடன் இருந்த மதக் கட்டடங்கள் அல்லது வரலாற்று இடங்களின் அழிக்கப்படலைப் பல சம்பவங்கள் தெரிவிக்கின்றதுடன் மற்றைய சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் இருந்த மதக் கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்துமலைக் கோயில் அண்மையில் செய்திகளில் அதிகம் இடம் பெற்றிருந்ததுடன் அங்கிருந்த ஒரு திரிசூலம் தகர்த்தெறியப்பட்டு அதன் இடத்தில் ஒரு

[119]"வவுனியா பாதுகாக்கப்பட்ட வன உட்பகுதியில் தொல்பொருள் இடம் கண்டறியப்பட்டது" (Archaeological site discovered inside Vavuniya forest reserve), சண்டே டைம்ஸ், 18 மே 2021

[120]மேலதிக தகவல்களுக்கான உசாத்துணை – புனிதப் பிரதேசங்கள் மற்றும் கீழ்த்தர அரசியல்: மதத் தலங்கள் தொடர்பான பதட்டங்கள் மற்றும் இன உறவுகள் (For more information refer to- Of Sacred Sites and Profane Politics: Tensions over Religious Sites and Ethnic Relations), முஸ்லிம்களுக்கான செயலகம், 2015.

புத்தர் சிலை ராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் வைக்கப்பட்டதை அறிக்கைகள் சுட்டிக்காட்டின.[121] போருக்குப் பிந்திய வருடங்கள் அதிகளவான இராணுவத்தின் பிரசன்னத்தை அப்பிரதேசத்தில் காணத் தொடங்கியதுடன் 2020 இல் அங்கு ஓர் அளவீடு நடைபெற்றதாகவும், 14 செப்டெம்பர் 2020 திகதியிடப்பட்ட அவ்வளவீட்டறிக்கை அதனை 'குருந்தி விகாரை' எனக் குறிப்பிட்டிருந்ததையும் உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். சுமார் 81 ஏக்கர்கள் பரப்பளவிலான நிலத்தை இந்தப் பிரதேசத்தில் கையகப்படுத்துவதற்கு தொல்பொருளியல் திணைக்களம் முயல்வதை அண்மைய ஊடக அறிக்கைகள் தெரிவித்தன, இதனை பிரதேசத்திலுள்ள உள்ளூர் மக்களால் உறுதிப் படுத்தப்பட்டது.[122] மேலும், இந்தப் பிரதேசம் 1921 திகதி வர்த்தமானி அறிவித்தலுடன் வனத் திணைக்களத்தின் அதிகாரவெல்லைக்குள் வருவதையும், ஆனாலும் அதனைப் பொருட் படுத்தாது அவ்விடத்தில் வேலைகள் நடைபெற்று வருவதை உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் இராணுவம் இணைந்து வரலாற்று ரீதியான இந்துத் தலத்தை அழித்து அதனை ஒரு பௌத்த கோவிலால் மாற்றீடு செய்வார்களென உள்ளூர் மக்கள் அச்சம் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பான ஒரு வழக்கு தற்போது உயர் நீதிமன்றத்தின் முன்னுள்ளது.

பெரும்பான்மை மதத்தை ஆதரிப்பதற்கு, சிறுபான்மையினர் நிலங்கைளின் சொத்துரிமையை இழக்கும் அச்சத்துடன் நிலத்தின் பராதீனப்படுத்தல் எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது என்பது மற்றொரு பரிமாணமாகும். உதாரணத்திற்கு, பௌத்த விவகார அமைச்சினால் 2020 இல் வெளியிடப்பட்ட ஒரு வர்த்தமானி[123] அரச நிலங்களாக கோரப்பட்ட சுமார் 137.73 ஹெக்டேர் (340.33 ஏக்கர்கள்) நிலங்களை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஏழு பௌத்த தலங்களுக்கு பராதீனப்படுத்தியது. அதிகாரிகள் இதனை அரச காணியாக கோரிய போதிலும், பிரதேசத்திலுள்ள உள்ளூர் மக்கள் அந்நிலங்கள் அவற்றின் சொத்துரிமையை நிரூபிப்பதற்கு ஆவணங்களைக் வைத்துள்ள சிறுபான்மையினருக்குச் சொந்தமானது எனக் கோரினர்.[124] இவ்வாறு ஆலயங்களின் ஸ்தாபித்தல் பெரும்பான்மைச் சமூகங்களை உள்ளடக்கியதான புதிய குடியேற்றங்களையும் மற்றும் அதனுடன் பிரதேசத்தில் மக்கட் பரம்பல் தொகையில் மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்கின்ற உண்மையால் அச்சங்கள் கூடியுள்ளது.

பல சம்பவங்களில், யுத்தத்திற்கு முன்னர் அங்கே பௌத்த ஆலயங்கள் இருந்ததேயில்லை எனவும் இந்த புதிய தலங்கள் மத்திய அரசாங்கம் மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் புதிதாக உருவாக்கப்படுகின்றதாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

வேறுபட்ட மதத் தலங்கள் மற்றும் சமூகங்களினுள்ளேயும் நிலம் தொடர்பான சச்சரவுகள் அவதானிக்கப்பட்டதுடன் அவை பரந்தளிவிலான தாக்கங்களைக் கொண்டிருக்க முடியும். அவ்வாறான பல இடங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்பட்டன. உதாரணத்திற்கு, திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு இட்டுச் செல்லும் வழியிலுள்ள சந்தியில் ஓர் அலங்கார வளைவு கட்டும் முயற்சிகள் காரணமாக திருக்கேதீஸ்வரம் கோயில் மற்றும் மன்னாரிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயம் என்பவற்றுக்கிடையிலான நிலச் சச்சரவு. தேவாலயம் வளைவு கட்டப்படுவதை ஆட்சேபித்ததைத் தொடர்ந்து விடயம் ஒரு சட்டத் தகராறாகப் பெரிதாகி தற்போது அது நீதிமன்றின் முன்னுள்ளது.

[121] 'தமிழ் கோயிலின் பௌத்த நில ஆக்கிரமித்தலுக்கு இலங்கை அமைச்சர் தலைமை' (Sri Lanka minister leads Buddhist land grab of Tamil Temple) (ஜனவரி 2021), தமிழ் கார்டியன் https://www.tamilguardian.com/content/sri-lankan-minister-leads-buddhist-landgrab-tamil-temple

[122] 'வடக்கு, கிழக்கில் தொல்பொருட்கள் அகழ்வு: 10 இடங்களில் வேலை ஆரம்பம்' (Antiquities excavation in North, East: Work commences on 10 sites) (ஜனவரி 2021), த மோர்னிங் கள விஜயம் பெப்ரெவரி 2021; https://www.themorning.lk/antiquities-excavation-in-north-east-work-commences-on-10-sites/

[123] வர்த்தமானி இல.2196, 2 அக்டோபர் 2020 அன்று வெளியிடப்பட்டது.

[124] கள விஜயங்கள் பெப்ரெவரி மற்றும் மார்ச் 2021

கடந்த சில தசாப்தங்களுக்கும் மேலாக பல சந்தர்ப்பங்களில் மத வணக்க ஸ்தல இடங்கள் மோதலுக்குரிய இடங்களாக வந்துள்ளன. இந்த மோதல்களில் சில போருக்கு பின்னர் எழுந்துள்ள நிலையில், சில போரின் போதானவையாகக் கண்டறியப்பட முடியும். அண்மைய வருடங்களிலான ஆவணப்படுத்தல்[125] மத ரீதியான சிறுபான்மையினருடன் இணைந்ததான மதத் தலங்கள் மீதான தாக்குதல்களில் ஒரு அதிகரிப்பையும் குற்றமிழைத்தவர்கள் மீது மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளே எடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியது. அரச ஆதரவுடனான வன்முறையின் அதிகரிக்கும் மட்டங்கள் மதச் சிறுபான்மையினரைக் குறி வைப்பதை ஊக்குவிக்கும் அதிகரித்த சம்பவங்களின் பின்புலத்தில் ஆனவையாகும்.[126] அளுத்கம, திகன மற்றும் உயிர்த்த ஞாயிறுக்குப் பிந்திய தாக்குதல்களில் காணப்பட்ட வன்முறைகள் முஸ்லிம் சமூகம், அவர்களது ஆதனங்கள் மற்றும் மதத் தலங்களுக்கெதிராக குறி வைக்கப்பட்ட மற்றும் திட்டமிட்ட வகையிலான தாக்குதல்களைக் கண்டன. தீவிரவாத சிங்கள பௌத்த குழுக்களின் சம்பந்தப்படுதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பௌத்த குருமார்களின் உடந்தை என்பவற்றைச் சான்றுகள் காண்பித்த போதிலும், வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவோ, அன்றேல் குற்ற மிழைத்தவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்படவோ இல்லை. அரசு குற்ற மிழைத்தவர்களை பாதுகாப்பதினாலும் மற்றும் சிங்கள பௌத்த பெரும்பான்மை வாதத்திற்கு ஊட்டமளிக்கும் மையமாகவும் சிறுபான்மையினர் பலரினாலும் கருதப்படுகின்ற குற்றவிலக்களித்தலுக்கு சாதகமான அவ்வாறனதொரு சூழ்நிலையில், புதிய சமூகப் பிளவின் உருவாக்கம் மற்றும் இருக்கின்ற முரண்பாடுகளை நிலைபேணல் என்பவற்றினால் அங்கே அதிகரித்த அச்சமும் பயமும் உள்ளன.

***காணி, நீர்ப்பாசனம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்***

விவசாயம் மற்றும் உணவுற்பத்தியை முன்னேற்றுவதுடன் இணைந்ததாக, சிவில் பாதுகாப்பு படையின் ஈடுபாட்டுடன் இலங்கை முழுவதிலுமாக 5000 குளங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தப்படுதலுடன் 'நீர்ப்பாசன செழுமை' (வாரி சௌபாக்யா) நிகழ்ச்சித்திட்டத்தை அரசாங்கம் 2020 இல் அறிமுகப்படுத்ததியது.[127] 2020 இல் பெருந்தொற்று, வாழ்வாதாரங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றில் மோசமான பாதிப்பைக் கொண்ட வேளை, பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுற்பத்தியை முன்னேற்றுதல் என்பவற்றின் மீதான கவனத்துடன் பசில் ராஜபக்சவின் ஒரு தலைமைில் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பாக ஒரு ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டது. நீர்நிலைகளின் புனருத்தாரணம் மற்றும் விவசாயிகளுக்கான நீர் வழங்கல்களை உறுதிசெய்தல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முன்னெடுத்தல்களாகும். ஆனாலும், அந்த முன்னெடுப்புகள் கூட நடைமுறைச் சவால்கள் மற்றும் அரசியல் தாக்கங்கள் சம்பந்தப்பட்டவையாக இருந்தன.

நீர்ப்பாசனத் திட்டங்கள் கடந்த காலங்களில் அரச குடியயேற்ற நிகழ்ச்சித் திட்டங்களின் வடிவங்களாக உபயோகிக்கப்பட்டன. மகாவலி அபிவிருத்தித் திட்டம் அப்படியானதொரு

---

[125]தப்பபிப்ராயம் மற்றும் ஆதரவு: கத்தோலிக்கர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களின் ஒரு பகுப்பாய்வு (Prejudice & Patronage: An Analysis of Incidents of Violence Against Christians, Muslims & Hindus), NCEASL 2021

[126]'கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை தொடர்பான உண்மை கண்டறியும் அறிக்கை – மார்ச் 2018' (Fact – finding report on the Anti – Muslim violence in the Kandy District – March 2018) (2021), சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநிலையம்; https://www.lstlanka.org/publications/reports/fact-finding-report-on-the-anti-muslim-violence-in-the-kandy-district-march-2018

[127]'5000 குளங்களை உடனடியாகப் புனருத்தாரணம் செய்வதற்கு ஜனாதிபதி அறிவுறுத்துகிறார்' (President instructs to rehabilitate 5000 tanks immediately) (செப்டெம்பர் 2020), லங்கா பிஸ்னெஸ் ஒன்லைன் https://www.lankabusinessonline.com/president-instructs-to-rehabilitate-5000-tanks-immediately/

நிகழ்ச்சித்திட்டமாகும், நீர்ப்பாசனத் தேவைகள் மீது கவனம் செலுத்துகையில் அது முரண்பாடுகள் சம்பந்தப்பட்டதாகவும் இருந்தது.[128] தீர்மானம் மேற்கொள்ளுதல் பெரிதும் கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்ததால் சில நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்களை வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள உள்ளூர் அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் அறிந்திராது இருந்தனர். அவ்வாறான இரண்டு திட்டங்கள் குறிப்பிடுவதற்குப் பெறுமதியானவை; மகாவலி L வலயத் திட்டம் பெரும்பான்மைச் சமூகத்திற்கு பக்கச்சார்பானது என்ற அறிக்கைகளுடன் 1988 இலிருந்து நிலங்களைப் பராதீனப்படுத்த உபயோகிக்கப்பட்டது.[129] L வலயத் திட்டம், தமிழர்களால் முன்னர் உபயோகிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு எவ்வாறு திட்டமிட்ட முறையில் பெரும்பான்மைச் சமூகத்தை கொண்டு வருவதற்கு உபயோகிக்கப்பட்டது என்பது பற்றி வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள உள்ளூர் அதிகாரிகள் பேசினர். சில கிராமங்களின் பெயர்கள் தமிழ் பெயர்களிலிருந்து சிங்களப் பெயர்களுக்கு மாற்றப்பட்டதிற்கும் அங்கே சான்றுகள் உள்ளன.[130]

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலங்களை சோளப் பயிர்ச்செய்கைக்காக பராதீனப்படுத்தும் முயற்சியில் காணிகள் பிரதேசத்திற்கு வெளியிலுள்ள சிங்கள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதான குற்றச்சாட்டுகளுடன் மகாவலி B வலயத் திட்டம் பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்குப் பிரயோகமாகிறது. மகாவலி B வலய மாதுறு ஓயா வலது கரையில் ஒரு மோதல்நிலை தற்போது அவதானிக்கப்படுகிறது, அங்கு தமிழ் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்நடை வளர்ப்பு பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள சிங்கள விவசாயிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர்களுக்கு எதிராக வன்முறை உபயோகிக்கப் படுதல் மற்றும் சொத்துகளின் அழிவு குறித்து அதிகரித்த முறைப்பாடுகளுடன், சிங்கள விவசாயிகள் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஏனைய அதிகாரிகளால் ஆதரவளிக்கப் படுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறது. பிரதேசத்திலிருந்து கிடைக்கும் அறிக்கைகளின் படி, நெற் பயிர்ச்செய்கைப் பருவத்தில் பிரச்சினைக்குரிய பிரதேசத்தை பயன்படுத்தும் சுமார் 200,000 கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.[131] ஏப்பிரல் 2020 இலிருந்து, பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த விவசாயிகள் மகாவலி அதிகார ஆதரவோடு பிரதேசத்தில் அத்துமீறியுள்ளார்கள். இதன் பயனாக, கால்நடை மேய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதனால் மாகாணத்தில் பால் உற்பத்தியையும் மற்றும் தேசியளவிலான பால் வழங்கலையும் பாதிக்கிறது. இந்த விடயம் தற்போது மட்டக்களப்பு மேன்முறையீட்டு நீதிமன்று மற்றும் நீதிமன்றங்களின் முன்னுள்ளது.

***இயற்கை வளங்களும் புதிய முரண்பாடுகளும்***

நிலத்திற்கான ஒரு கூடுதல் பரிமாணம் சுற்றுச்சூழல் சீரழிவாகும், புதிய மோதல்களுக்கான சாத்தியத்துடன் இது அண்மைய வருடங்களில் ஒரு துரதிர்ஷ்டவசமான அதிகரிப்பைக் கண்டது. பாதுகாத்தல் ஒரு முன்னுரிமைக்குரியது என உத்தியோகபூர்வ உறுதிமொழிகள் அளிக்கப்பட்ட போதிலும், அண்மையிலான பல்வேறு நிகழ்வுகள் நிலம், நீர், வாழ்வாதரங்கள்

[128]மகாவலி அதிகாரசபைக்குப் பொறுப்பான அமைச்சர் விசேட வலயங்களை உருவாக்குதல், விவசாயம் மற்றும் அபிவிருத்தித் தேவைகளுக்காக நிலங்களைக கையகப்படுத்தவும் மற்றும் பராதீனப்படுத்தவும் பரந்த அதிகாரங்களைக் கொண்டிருந்தார். அந்த அதிகாரங்கள் கடந்த காலத்தில் மக்கட் தொகைப்பரம்பலில் மாற்றங்களைக் கொண்டு வரும் அச்சத்துடன் புதிய குடியேற்றங்களை அறிமுகப்படுத்திய செயல்திட்டங்களை முனனெடுப்பதற்கு உபயோகிக்கப்பட்டன.

[129]இந்தப் பிரச்சினையின் இன மற்றும் அரசியல் பரிமாணம் தொடர்பான மேலும் தகவல்கள் பவானி பொன்சேகா மற்றும் தர்ஷா ஜெகதீஸ்வரன் ஆகியோரின், "இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி கையகப்படுத்தல் மற்றும் தொடர்பான விடயங்களில் அரசியல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்" (Politics, Policies and Practices with Land Acquisition and Related Issues in the North and East of Sri Lanka) என்பதில் காணப்பட முடியும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 19 நவெம்பர் 2013

[130]உதாரணத்திற்கு, முந்திகைக்குளம், படகளுக்குளம், பூமடக்கண்டல் என்பவை தற்போது ஜனகபுர, சமுதுவெவ, நெலும்வெவ என அழைக்கப்படுகின்றன. கள நேர்காணல் பெப்ரெவரி 2021.

[131] கள நேர்காணல், பெப்ரெவரி 2021

மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றில் நீண்டகாலப் பாதிப்புகளைக் கொண்டிருக்கக் கூடியதான அதிகரித்த அழிவுப் போக்குகளை வெளிப்படுத்தின.

பொருளாதார மறுமலர்ச்சியை முன்னுரிமைப்படுத்திய தொழில்நுட்பக் கோட்பாடு மற்றும் இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை மாதிரி இயற்கை வளங்கள், வனஜீவராசிகள் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றைப் பாதுகாத்த நடைமுறைகளுக்கான கவனத்திற் கொள்ளாமையையும் கருதுகிறது. மிக அண்மையில் கண்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ கடல்வாழ் உயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றுக்கு இது வரை பேரழிவான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது, உரிய கவனமின்மை மற்றும் அரசியல் மற்றும் பொருளாதாரச் சலுகைகளால் அதிகம் செல்வாக்கு செலுத்தப்பட்ட தீர்மானங்களுடன் இணைந்ததாக செய்முறைகள் பற்றிய கேள்விகள் உள்ளன.

போருக்குப் பிந்திய வருடங்கள், சுற்றுச்சூழல் மற்றும் வனஜீவராசிகளைப் பாதுகாப்பதற்கு அதிகரித்த கவனத்தைக் கண்டன. சுபிட்சத்திற்கான நோக்கின் ஒரு பகுதி கட்டுப்பாடுகள் மீதான குறித்த கவனத்துடன் "சமநிலையான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகள் ஊடாக நிலைபேண்தகு அபிவிருத்தியை அடைதல்" என்பதாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அரசாங்கத்தின் சிந்தனை 'நகர அழகுபடுத்தல், நகர அபிவிருத்தி மற்றும் நடைபாதைகள் மற்றும் நகரப் பூங்காக்களின் உருவாக்கம்'[132] என்பவற்றை உள்ளடக்குகிறது, ஆனால் இயற்கை வளங்களின் பாதுகாத்தல் மீதான அதன் பாதிப்பு பிரச்சினை கொண்டதாகவுள்ளது. ஜனாதிபதி, தான் எப்போதும் சுற்றுச்சூழலை விரும்புகின்றவர் மற்றும் அதனை மதிக்கின்றவர் என கூறிக் கொண்ட போதிலும், அவரது பார்வையின் கீழேயே சுற்றுச்சூழலின் மிகப் பெரிய அழிப்புகள் இடம்பெறுகின்றன.[133] இது சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் வனஜீவராசிகளின் பாதுகாப்புக்கு சில வடிவிலான பாதுகாப்பை வழங்கும் இருக்கும் கட்டமைப்புகளை நீக்குவதற்கு அல்லது தளர்த்துவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது.

முக்கிய கவனத்தை ஈர்த்ததும் மற்றும் ஒரு கரிசனைக்குரலை எழுப்பிய ஒன்று சுற்றறிக்கைகளை இரத்துச் செய்து வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள்ளிருந்து எஞ்சியுள்ள வனப்பிரதேசங்களை அகற்றி வனப்பகுதிகளின் பெரும் நிலப் பிரதேசத்தை பிரதேச செயலாளர்களிடம் கையளித்ததாகும், இது இந்த நிலங்களின் மேலும் அழிதல் குறித்தான கரிசனைகளை எழுப்பியது.[134]

மேலும், மண் மற்றும் ஏனைய பொருட்களின் போக்குவரத்துச் செய்தலின் அனுமதிகளுக்கான தேவையை இரத்துச் செய்யும் ஒரு பிரேரனையை அமைச்சரவை அனுமதித்தது. நீதிமன்றில் சவால்படுத்தக் கூடிய அனுமதிக்கான தேவைப்பாடு அற்றுப் போனததோடு இது சுரங்க அகழ்வு வேலைகளை ஆரம்பித்து வைக்கும் பயன் கொண்டிருந்தது. அனுமதிகளை நீக்கும் இந்த நடவடிக்கை, அமுல்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால், அது கடுமையான சுற்றுச்சூழல் பின்விளைவுகளுடன் கட்டுப் பாடற்ற விதத்தில் சுரங்க அகழ்வுகளை ஏற்படுத்தியிருக்கும். கணிசமானளவு இலாபப் பரிமாற்றத்திற்காக ஆனால் சுற்றுசூழல் மீது

[132]'சுதந்திர தின உரை' (பெப்ரெவரி 2021), இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் https://www.president.gov.lk/independence-day-speech-2021/

[133]மினோலி டி சொய்சா, 'சூழல்மாசுக்கு உறுதியளித்தல்: ஒரு பசுமை மற்றும் அழகிய நிலத்தைக் கெடுத்தல்' (Committing Ecocide: The Desecration of a Green and Pleasant Land) (பெப்ரெவரி 2021), கிறவுண்ட் வியூஸ் https://groundviews.org/2021/02/13/committing-ecocide-the-desecration-of-a-green-and-pleasant-land/

[134]டினார்ஸர்டே ரஹீம், 'மற்றைய நாட்டு வனங்கள் மற்றும் இலங்கை மழைக்காடுகளின் உயிர்ச்சூழலின் பாதுகாத்தல்' (Other State Forests and the Conservation of Sri Lanka's Rainforest Biota) (நவெம்பர் 2020), கிறவுண்ட் வியூஸ் https://groundviews.org/2020/11/23/other-state-forests-and-the-conservation-of-sri-lankas-rainforest-biota/

பேரழிவை ஏற்படுத்தும் பாதிப்புகளை பல அறிக்கைகளும் குறிப்பிடுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மற்றும் செங்கலடி, மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் மற்றும் பேசாலை மற்றும் ஏனைய பிரதேசங்கள் நீண்ட காலப் பாதிப்புகளுக்கான சாத்தியங்களுடன் சட்ட விரோத மண் அகழ்தல்களைக் கண்டன.[135]

புதிதாக முரண்பாடுகளை உருவாக்கும் வனங்களைப் பாதுகாத்தல் என்ற பெயரில் உபயோகிக்கப்பட்ட முறைமைகள் மேலும் கரிசனைக்குரியனவாக இருந்தன. நிலங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து மற்றும் உபயோகித்த சமூகங்கள் அந்நிலங்களை அணுகுவதைத் தடுப்பதற்கு வனப் பாதுகாப்பு என்ற போலிக் காரணங்களை எவ்வாறு அதிகாரிகள் உபயோகிக்கின்றனர் என்பதை வடக்கு மற்றும் கிழக்கில் பல சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. மேலதிகமாக, தசாப்தங்களாக விவசாயம் செய்வதற்கு அல்லது கால்நடை வளர்ப்பதற்கு நிலங்களை உபயோகித்த உள்ளூர் மக்கள் தற்போது அந்நிலங்களை அணுகுவதிலிருந்து தடுக்கப்படும் அல்லது மட்டுப்படுத்தல்களுக்கு முகங் கொடுக்கும் ஒரு கவலையளிக்கும் போக்கு பல வருடங்களாக உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில், மேய்ச்சல் தேவைகளுக்காக நூற்றாண்டு காலங்களாக அரச நிலகங்களை உபயோ கித்ததாகச் சொல்லும் கால்நடை மேய்ப்போர்கள் அந்நிலங்களிற்கு நுழைவதிலிருந்து வனத் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரால் தடை செய்யப்படுகின்றனர். இவ்வாறான கட்டுப்பாடுகள் வடக்கு மற்றும் கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. அங்கே வனத் திணைக்களம் உள்ளூர் மக்கள் எண்ணற்ற வருடங்களாக உபயோகித்த நிலங்களிற்கு அணுகுவதிலிருந்து தடுக்கின்றதானது, நிலங்களை உபயோகிப்பதிலிருந்தும் மற்றும் அவர்களது நிலங்களிலிருந்து அநேகம் உரிமையிழக்கச் செய்வதின் மூலமாகவும் சிறுபான்மையினரைத் தடுப்பதற்கு இருக்கும் கட்டமைப்புகளை உபயோகிக்கும் மற்றுதொரு மத்திய அரசாங்க நிறுவனமா என்ற அச்சத்தை அது எழுப்புகின்றது.

[135] கள விஜயங்கள் ஜனவரி, பெப்ரெவரி மற்றும் மார்ச் 2021

## 4. அபிவிருத்தி உந்துதல் மற்றும் அதன் தாக்கங்கள்

பொருளாதார மறுமலர்ச்சி, வினைத்திறன் மற்றும் ஸ்திரத்தன்மை என்பன இந்த அரசாங்கத்தின் வெற்றிக்கும் மற்றும் மக்களின் மேம்படுத்தலுக்கும் அவசியமானவை என விளம்பரப்படுத்தப்பட்டன. இது, 2019 மற்றும் 2020 இரண்டினதும் தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் ஜனாதிபதி கோபட்டாபாய ராஜபக்சவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கொள்கை அறிக்கைகள் மற்றும் முதலீடு மற்றும் வேலை வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கான புதிய அபிவிருத்தி முன்னெடுப்புகளின் ஆரம்பித்தல்களிலும் காணப்பட்டது. இருப்பினும், ஆட்சி முறைமை, பொருளாதாரம், அரசியலமைப்பு ஜனநாயகம் மற்றும் பூகோளரசியல் என்பவை மீது அரசாங்கத்தின் கொள்கைத் தெரிவின் திசை தொடர்பில் ஆழ்ந்த கரிசனைகளைச் சுட்டிக்காட்டும் பல்வேறு நிகழ்வுகளுடன், அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அண்மைய அபிவிருத்திகளில் காணப்பட்டவாறு முழுமையாக பயனுறப்படவில்லை. இந்தப் பிரிவு அபிவிருத்தியின் முன்னுரிமைப்படுத்தல், இது வரையான தாக்கம் மற்றும் முரண்பாடுகளை உருவாக்கும் சாத்தியம் கொண்ட மற்றும் இருக்கின்றதை அதிகரிக்கும் கரிசனத்திற்குரிய பகுதிகள் என்பவற்றின் பின்னணியில் பல்வேறு முக்கியமான பிரச்சினைகளை சுருக்கமாக ஆராய்கிறது.

### *கொழும்பு துறைமுக நகர செயல்திட்டம்*

அரசாங்கத்திற்கான ஒரு முக்கிய சட்டமன்ற வெற்றி கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் நிறைவேற்றுதலுடன் கிடைத்ததுடன் இச்சட்டம் துறைமுக நகரிற்கான ஒரு பலம்மிக்க ஆணைக்குழுவுக்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றை வழங்குகிறது. இவை, செயல்திட்டத்தினது அமுல் படுத்தலின் ஆரம்ப நாட்களாக இருக்கும் வேளை, இது வரையான செயன்முறையிலிருந்து ஆட்சிமுறைமை, அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகம் மற்றும் பூகோள அரசியல் என்பவற்றுக்கான பாதிப்புகள் தொடர்பாக பல்வேறு கரிசனைகள் தோன்றியுள்ளன. ஏனைய பல நிகழ்வுகள் இந்தக் கரிசனைகள் பற்றிப் பேசும் வேளையில், ஏனைய விடயங்கள் மற்றும் அத்தகைய பெரும் செயல்திட்டங்களின் செயன்முறை மற்றும் தாக்கம் சூழ்ந்ததாகவுள்ள தெளிவின்மை என்பவற்றைப் புறந்தள்ளி துறைமுக நகர செயல்திட்டம் அடுத்த பிராந்திய பொருளாதார மையமாக இலங்கைக்கு சர்வரோக நிவாரணியாகுதல் என்பது அபிவிருத்தி மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியின் முன்னுரிமைப்படுத்தல் சூழ்ந்ததான பல பிரச்சினைகளை ஈர்க்கிறது.

**செயன்முறைகள் மற்றும் அமுல்படுத்தலுடனான கரிசனைகள்:** சட்ட மூலத்தின் நிறைவேற்றுதல் கட்டத்துடன் பல்வகைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டதையும் அது மட்டுப்படுத்தப்பட்ட பொது விவாதத்துடன் சட்டமூலத்தை அரசாங்கம் விரைவுபடுத்தியதைக் கண்டது. சிங்கள மற்றும் தமிழ் புது வருடம் மற்றும் தொடர்ச்சியாக வந்த பொது விடுமுறைகளிற்கு உடன் முன்னதாக சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் அது நகர்த்தப்பட்ட வேகம் சட்டமூலம் அரசியலமைப்பு ரீதியாக சவாலுக்குட்படுத்தப்படுவதற்கான சாளரம் அநேகம் மூடப்படுவதை ஏற்படுத்தியது. இவ்வாறு இருந்த நிலையிலும், 19 மனுக்கள் மற்றும் ஏனைய பல்வேறு தரப்புகள் சட்டமூலத்தைச் சவால்படுத்தி இடையீடு செய்தமை, உயர் நீதிமன்றம் ஏப்பிரல் மாத நீதிமன்ற விடுமுறையின் போதும் அமர்வுகள் மேற்கொள்வதைக் கண்டது. ஆணைக்குழுவின் அதிகாரக் கட்டமைப்பு, பாராளுமன்றம் மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரசபைகளின் குறைமதிப்பிடல், இலங்கையின் பிரதான நிலப்பரப்பில் போட்டியைக் குறைமதிப்பிடும் வகையில் சலுகைகளை வழங்குதல், மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என பெயரிடுவதற்கு சிலவானவை உட்பட, சட்ட மூலத்தின் பல அம்சங்கள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டன.

மனுதாரர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்த சிலர் அரசாங்கத்தின் கடும் ஆதரவாளர்களாக இருந்தனர், அவர்களின் பொது அறிக்கைகள் சட்டமூலத்தை விமர்சித்து உத்தேசிக்கப்பட்ட செயல்திட்டம் மற்றும் இலங்கையின் இறையாண்மை மீது அதன் பாதிப்பைச் சுட்டிக்காட்டின. எழுப்பப்பட்ட கரிசனைகளுள் ஒன்று, துறைமுக நகர் எவ்வாறு உள்நாட்டு விடயங்களில் சீனாவிற்கு ஒரு கூடுதல் பிடியை வழங்கி நீண்டகால பூகோள அரசியல் மற்றும் சர்வதேச தாக்கங்களைக் கொண்டிருக்கும் வகையில் சர்வதேச செயற்பாட்டாளர் ஒருவர் மீது அதிகமாக தங்கியிருக்கும் நிலையை உருவாக்குகிறது என்பதாகும்.

பரந்த அதிகாரங்களுடன் பயனுறுதியான கண்காணிப்பின்றி அனைத்து அதிகாரம் மிக்க ஓர் ஆணைக்குழுவைக் கொண்டிருப்பதாற்கான முயற்சிகள் உயர் நீதிமன்றத்தில் தன்னுடைய தீர்மானத்தில் பல்வேறு திருத்தங்களுக்கான தேவையைச் சுட்டிக்காட்டியதில் ஒரு பின்னடைவுக்கு முகங் கொடுத்தது. சட்டமூலத்தின் 72 உறுப்புரைகளுள் 25 இற்கு திருத்தங்களை உயர் நீதிமன்றம் யோசனை தெரிவித்ததுடன் அவற்றுள் பல நிறைவேற்றப்படுவதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையையும் மற்றும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பையும் தேவைப்படுத்தி தீர்மானித்தது, குறிப்பிடத்தக்கதாகும்.[136]

பெருந்தொற்றின் மூன்றாவது அலைக்கு மத்தியில், விவாதத்திற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டமை, நாட்டை சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகள் பரவியுள்ள நிலையைக் கருதும் போது இது ஒரு முன்னுரிமைக்குரியதா, எனவும் சட்டமூலத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளவை மற்றும் அவற்றின் பாதிப்புகள் என்ன என்பது பற்றி இன்னமும் பலர் தெரியாதுள்ளதால் இதனை முன்கொண்டு செல்வதில் இந்த அவசரம் ஏன், எனப் பல கேள்விகளை எழுப்பின. விவாதத்தைப் பிற்போடுவதற்கு எதிர்க்கட்சியால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், விவாதம் தொடர்ந்தது. இது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நோய்த் தொற்றுக்கான பரிசோதனையில் தொற்று ஏற்பட்டுள்ளமைக்கு நேர்மறையான பெறுபேற்றைக் கொண்டுள்ள சமயத்தில் இது நடைபெற்றது.

இந்த முக்கியமான சட்டத்தின் சட்டமியற்றும் செயன்முறை இலங்கையில் சட்டமாக்கல் மற்றும் ஆட்சிமுறைமை தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டியது. இலங்கையில் சட்டவாக்கல் செயன்முறையானது கடந்த பல வருடங்களிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் கீழ், முக்கியமான அரசாங்க அதிகாரிகள் சட்டமூலத்தை வரைவதிலும் மற்றும் அதனைக் காப்பாற்றுவதிலும் ஈடுபட்டனர், ஆனால் அண்மைய வருடங்களில் தனியார் சட்ட நிறுவனங்களிலிருந்தான சட்டத்தரணிகளின் கூடுதல் ஊக்கத்துடனான வகிபாங்களுடன் அதிகரித்தளவில் ஒரு மாறுபடும் நிலையை, இது கண்டது. சட்டமூலத்தின் அரசியலமைப்பு ரீதியான தன்மை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட போது இது காணப்படக்கூடியதாக இருந்தது. சட்டமா அதிபர் திணைக்களம் சட்டமூலத்தைக் காப்பதற்கு வாதிடுகையில், இரண்டு சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஆகியோருக்காக முறையே மன்றில் தோன்றி விசாரணை அமர்வின் சமயத்தில் ஒவ்வொருவரும், சட்டமூலத்திற்கு திருத்தங்களைப் பிரேரித்தமை நீதியரசர்கள் குழு மற்றும் மனுதாரர்கள் சார்பில் தோன்றிய சட்டவுரைஞர்களை சட்டமூலத்தின் சார்பில் எதிர்வாதிடல் செயன்முறையை யார் முன்கொண்டு செல்கின்றனர் எனக் கேள்வி எழுப்ப வைத்தது.[137] அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் நலன்கள் அளிக்கப்பட்ட ஏனையவர் சட்டமியற்றும்

---

[136]'இந்தியா பார்த்துக் கொண்டிருக்கையில், துறைமுக நகர் சமனிலையை சீனா நோக்கித் திருப்புகிறது' (Port City tilts balance toward China, as India watches on) (மே 2021), த மோர்னிங்: https://www.themorning.lk/port-city-tilts-balance-toward-china-as-india-watches-on/

[137]துறைமுக நகரச் சட்டமூலம் தொடர்பாக மா.கொ.நி இன் விபரணம் (CPA Commentary on the Port City Bill) - https://www.cpalanka.org/cpa-commentary-on-the-port-city-bill/

செயன்முறையில் தலையீடு செய்யும் அதிகரித்தளவில் கவலையளிக்கும் ஒரு நடைமுறையை வெளிப்படுத்தியமை செயன்முறையின் நேர்மை குறித்து மாத்திரமின்றி அதிகரிக்கும் அரசியல் மயப்படுத்தல் பற்றியும் கேள்விகளை எழுப்புகிறது.

சட்டமூலம், உயர் நீதிமன்றத் தீர்மானத்தில் எழுப்பிய கரிசனைகளைக் கவனத்தில் கொள்வதற்கு பிரேரிக்கப்பட்ட ஒரு தொகையான குழுநிலைத் திருத்தங்களையும் கண்டது. குழுநிலைத் திருத்தங்களைக் கொண்டு வரும் நடைமுறை புதியதல்ல, தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தங்களது சொந்த அரசியல் நலன்களுக்கு பயன்படுவதற்கு இதனை உபயோகித்துள்ளதுடன் சிலசமயங்களில் அதனுடன் முக்கியமான திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இது மிக அண்மையில் அரசியலமைப்பிற்கான 20ஆவது திருத்தத்துடன் அவதானிக்கப்பட்டது, இங்கே முன்னம் பகிரங்கமாக பகிரப்படாத திருத்தங்கள் குழுநிலையில் அறிமுகப்படுத்தப்பட்டன, அதனால் பிரேரிக்கப்பட்டவை என்ன என்பதைத் தெரிந்து பிரஜைகள் சம்பந்தப்படுவதற்கான கதவு பூட்டப்படுகிறது. அவ்வாறானதொரு நடைமுறை, பொது மக்களின் கூர்ந்தாராய்தல் மற்றும் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு மறுப்பதால் கடுமையான கரிசனைக்குரியவை என்பதுடன் கடந்த காலங்களில் காணப்பட்டவாறு, தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் உபயோகிக்கவும் மற்றும் துஷ்பிரயோகிக்கவும் பட்டன. சட்டமியற்றும் செயன்முறையை முற்றிலுமாக குறை மதிப்பிடும் இந்த நடைமுறைகள் கடுமையான கரிசனைக்குரியவை என்பதுடன் உடனடியான கவனத்தையும் தேவைப்படுத்துகின்றன. இந்தக் கவனம் இல்லாத ஒரு நிலை அரசியல்மயப்படுத்தும் நடைமுறைகளை மேலும் பலப்படுத்துவதற்கு இட்டுச்செல்லக் காணப்படும்.

ஒரு தொடர் பொது விடுமுறைகளுக்கு ஒரு சில நாட்கள் முன்னதாக சட்டமூலத்தை சமர்ப்பித்ததும் கூட, சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மையைச் சவாலுக்கு உட்படுத்தி அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட ஒரு செயன்முறையில் ஈடுபடுவதிலிருந்து அரசாங்கம் பிரஜைகளை வேண்டுமென்றே தடை செய்ததா என்ற கேள்வியும் அங்கே வைக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்மானம் தெரிந்து கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே விவாதத்தின் ஒரு நாளை வைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தது என்ற உண்மையும் இந்த குறித்த சட்டத்தை அரசாங்கம் நகர்த்துவதற்கு விரும்பிய வேகம் குறித்தான கரிசனைகளை எழுப்புகிறது.

சட்டமூலத்தின் நிறைவேற்றுதலோடு, துறைமுக நகரம் எவ்வாறு செயற்படுகிறதென்பது காணப்பட வேண்டியுள்ளது. ஆணைக்குழுவின் கட்டமைப்பும் மற்றும் அதிகாரமும் உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் ஒரு விளைவாக பாராளுமன்ற கண்காணிப்பின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டது. ஆரம்ப சட்டமூலத்திற்கு முக்கிய பாதுகாப்பு முறைகளை திருத்தங்கள் அறிமுகப்படுத்திய போதிலும், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை, வேலையாட்கள் தராதரங்கள், வலயப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் தராதரங்கள், உட்பட பிரச்சினைக்குரிய விடயங்களாக அவற்றுள் ஏனைய பல இன்னமும் கவனத்தை தேவைப்படுத்தின. இலங்கை மீதான அதான் தாக்கம் பாரியதாக இருக்கின்ற போதிலும், துறைமுக நகர் செயல்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட இது வரையான செயன்முறை, இன்னமும் விளங்கிக் கொள்வதற்கு கடினமானதாக மூடப்பட்டுள்ளது. பொருளாதார சுபிட்சம் உருவாக்குவதற்கான முயற்சிகள் இலங்கைக்கு அத்தியாவசிமாக இருக்கையில், இவ்வாறான ஒரு செயல்திட்டத்திலிருந்து யார் அதிகம் நன்மை அடையப் போகிறார்கள் என அதன் செயன்முறை மற்றும் விடயங்கள் குறித்தான தற்போதைய அப்பியாசம் முக்கிய கரிசனைகளை எழுப்புகிறது.

இதனை எழுதும் சமயத்தில், ஆணைக்குழுவிற்கு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு, சட்டத்தின் அமுல்படுத்துதல் அதன் ஆரம்பநிலையிருந்தது, ஆனால் துறைமுக நகர்ப் பகுதிக்குள் செயலாற்றத் தேவையான ஒழுங்குவிதிகள் தொடர்பாக இன்னமும் தகவல்கள்

எதுவுமில்லை. அதனால், வரும் மாதங்களில் கவனமான கண்காணிப்பைத் தேவைப் படுத்தும் ஒரு செயல்திட்டம் இதுவாகும்.

**பூகோள அரசியலுடனான பிரச்சினைகள்:** பெரும் சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூகோளரசியல் சமர்கள் தொடர்பாக ஒரு நடுநிலையைக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை அரசாங்கம் பேணியது. எனினும், சீனாவுடன் ஓர் அதிகரித்த சாய்ந்திருத்தலையே அரசாங்கத்தின் நடவடிக்கைககளும் நடைமுறைகளும் காண்பித்தன. தற்போதைய இலங்கை அரசாங்கத்திற்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் (CCP) இற்கும் இடையிலான உறவுமுறை நடைமுறை ராஜதந்திர பிணைப்புகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. இலங்கை பொதுஜனப் பெரமுன சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சி என்பவற்றைப் பின்பற்றுவதற்கு தான் எண்ணுவதாக பசில் ராஜபக்சவின் கூற்று ஒரு கூடுதல் எதேச்சாதிகார ஆட்சிமுறைமை மாதிரியுடனான மேலும் இணைதலையே தெரிவிக்கின்றது.[138]

சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங்கே அவர்களுடன் ஜனாதிபதியின் சந்திப்பு, அதன் வெளியுறவுக் கொள்கையில் சீனா நோக்கிய இலங்கையின் நகர்வு எந்தளவிற்கானது என மேலும் குறிப்புகளை எங்களுக்குத் தருகிறது. சீன அரசின் உத்தியோகபூர்வ செய்தி முகவரான, ஷின்ஹுவா செய்திகள் இந்த சந்திப்பின் போது, *'சீனாவுடனான உறவுகளை அபிவிருத்தி செய்வதை இலங்கை முன்னுரிமைப் படுத்தியுள்ளதாகவும், சீனாவின் முக்கிய நலன்கள் தொடர்பான விடயங்களில் சீனாவின் நிலைப்பாட்டை இலங்கை உறுதியாக ஆதரிக்கிறது'*[139] என ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று தெரிவித்தது. இது, இந்தியாவுடனான பூகோளரசியல் சமர் வெல்லப்பட்டுள்ளது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அரசு நிர்வகிக்கும் ஊடகத்தினால் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றென்பதற்கு முழுமையான சாத்தியமுள்ளது என்பது உண்மையாக இருப்பினும், இக்கூற்று கவனிக்கப்படத்தக்கதொன்றாக உள்ளது.

இலங்கையின் அண்மைக் கால வரலாற்றில் அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமான ஒன்றாக நிரூபிக்கப்படக் கூடிய ஒரு செயல்திட்டத்திற்கான ஒரு முக்கிய உதாரணம், துறைமுக நகராகும். இந்த செயல்திட்டம், அதன் 'பட்டுப்பாதைத் திட்டம்' இன் ஒரு பகுதியாக சீனாவிற்கு பெரும் பூகோளரசியல் பெறுமதியைக் கொண்ட ஒன்றாகும். துறைமுக நகரம் ஒரு முக்கிய பகுதியல் அமைந்துள்ளது, ஒரு காலடியை இங்கே கொண்டிருப்பது ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கிலுள்ள எரிசக்தி வழங்குனர்களுக்கு ஒரு பாதுகாப்பான வர்த்தகப் பாதையை அனுமதிக்கும்.

இந்தியாவிற்கு நெருங்கிய சுற்றமைவிலான ஒரு துறைமுகத்தில் இந்த சம்பந்தப்படுதல் மற்றும் கட்டுப்பாடு சீனாவிற்கு பிராந்தியப் போட்டி மற்றும் பாதுகாப்பு பின்னணிச் சூழலில் மேலும் பூகோளரசியல் தாக்கங்களைக் கொண்டுள்ளது. சீனாவின் பூகோளரசியல் போட்டியாளர்களால் துறைமுக நகரம் 'முத்து மாலை' மூலோபாயத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டதுடன்,[140] அதில் பிராந்தியத்தில் சீன கடற்படையின் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் முகமாக கடல்சார் கட்டுமானச் செயல்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு மற்றும் கடல்வழிப் பாதைகள் வழியாக இணைக்கப்படுகின்றன.

---

[138] உதித்த ஜயசிங்க, '"தசாப்தத்தின் அபிவிருத்தி" இணைந்து கொள்வதற்கு தனியார் துறையை பசில் ராஜபக்ச அழைக்கிறார்' (BR invites private sector to join "decade of development) (ஜூலை 2020), டெய்லி எப்டி https://www.ft.lk/top-story/BR-invites-private-sector-to-join-decade-of-development/26-703841

[139] 'நடைமுறை ஒத்துழைப்பை அனைத்துத் துறைகளுக்கும் அதிகரிப்பதற்கு இலங்கை, சீனா உறுதி' (Sri Lanka, China vow to enhance pragmatic cooperation in all sectors) (ஏப்பிரல் 2021), ஷின்ஹுவா நெட் http://www.xinhuanet.com/english/asiapacific/2021-04/29/c_139913168.htm

[140] சீன அரசாங்கம் முத்து மாலைக் கருதுகோளை, அவதூறானது என வாதிட்டுத் தானே நிராகரிக்கிறது.

துறைமுக நகரம் தொடர்பான விடயங்களில் சீனா எந்தளவிற்கு கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் மற்றும் உள்நாட்டு ஆட்சிமுறைமை மீது அது கொண்டிருக்கும் தாக்கங்கள் தொடர்பாக சிக்கல்கள் உள்ளன. துறைமுக நகரினால் இறையான்மைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பில் மக்கள் கரிசனைகள் அதிகரிக்கின்றன.

### *அபிவிருத்தி தொடர்பான ஏனைய முன்னெடுப்புகள் மற்றும் கரிசனைகள்*

கவனத்தைத் தேவைப்படுத்தும் ஏனைய பல்வேறு அபிவிருத்திச் செயல்திட்டங்கள் தயாராக இருப்பதை ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. நெடுஞ்சாலை நிர்மாணச் செயல்திட்டங்கள் தொடர்பான அண்மைய ஒரு தொகைத் தீர்மானங்கள் அவற்றின் முன்னுரிமைப்படுத்தல் தொடர்பானவை மட்டுமின்றி ஏனைய பாதிப்புகள் பற்றியும் கேள்விகள் எழுப்புகின்றன. உதாரணத்திற்கு, உடனடியான கூடுதல் கவனத்தை தேவைப்படுத்தும் ஏனைய பல கரிசனைகளுடன் அரசாங்கம் நிதிப் பற்றாக்குறைக்கு முகங்கொடுப்பதாக கூறப்பட்ட ஒரு சமயத்தில் ஐந்து புதிய மேம்பாலங்கள் மற்றும் நான்கு ஒழுங்கைகள் கொண்ட உயர்த்தப்பட்ட அதிவேக மார்க்கத்தைக் நிர்மாணிப்பதற்கு ஜூன் மாதத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம்.[141] கொழும்பில் உடைமைகளை அபிவிருத்தி மற்றும் புதுப்பித்தல் முயற்சிகள் மற்றும் மரபுரிமை தலங்களுக்கான பாதிப்புகள் என்பதும் அண்மைக் காலங்களில் கவனத்தைப் பெற்றதோடு செலந்திவ முதலீடுகள் (தனியார்) நிறுவனம் (Selendiva Investments (Pvt) Ltd) தொடர்பில், அதன் செயன்முறைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் வெளிச் சக்திகளுக்கு மேலும் கட்டுப் பாடுகளை அளிப்பதற்கான அண்மைய முயற்சியா இதுவென கேள்விகள் எழுப்பப்பட்டன.[142] வறுமை மற்றும் குறைந்த வருமான வீட்டுவசதி, இடம்பெயர்தல் மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்பான பாதிப்புகளுடன் பலரின் வாழ்வியல் யதார்த்தங்கள் என்பவை, மீது கவனம் செலுத்தத் தவறிய, ‘100 நகரங்களை அழகுபடுத்தல்’ மற்றும் நகர மீளுருவாக்க முயற்சிகள் என்பதற்கான பிரேரணை தொடர்பில் மேலும் கரிசனை எழுப்பப்பட்டது.[143]

‘சுபிட்சத்தின் நோக்கு’ இன் வரையறைக்குள் அடங்கும் இவை அனைத்தும் மற்றும் ஏனையவை அபிவிருத்தி மற்றும் பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தேவையானவை என அறிவிக்கின்றன. ஆயினும் அதன் பல் முனைகள் தொடர்பான கரிசனைகள் உள்ளன. துறைமுக நகர செயல்திட்டத்தைப் பொறுத்தவரை, செயன்முறை மற்றும் பெரும் ஒப்பந்தங்கள் அவற்றுக்கு உரிய தீர்மானங்கள் தேவையான தரநிர்ணயம் சார்ந்த கவனத்திற்கு உட்பட்டனவா என்பது தொடர்பில் கேள்விகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான அபிவிருத்தி முன்னெடுப்புகளால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு ஏனையவற்றிடையே ஆட்சிமுறைமை, உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பற்றி உரிய கவனம் அளிக்கப்படுமா என்பது தொடர்பிலும் கேள்விகள் உள்ளன. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தின் போது, ஆரம்பிக்கப்பட்ட ஒரு முன்னெடுப்பான ‘அழகுமயப்படுத்தல்’ எனும்

---

[141] ஐந்து புதிய மேம்பாலங்கள், நான்கு ஒழங்கைகளுடனான உயர்த்தப்பட்ட அதிவேக மார்க்கப் பணிகள் இன்று ஆரம்பம் (Work begins on five new flyovers, four lane elevated expressway today) டெய்லி நியூஸ், 7 ஜூன் 2021.

[142] நாமினி விஜயதாச, சிங்கப்பூர் வடிவ PPP முயற்சிகள் கொழும்பின் முக்கிய இடத்தில் அடுத்த வாரம் ஆரம்பம், (S’pore style PPP ventures kick off next week for prime Colombo locations) சண்டே டைம்ஸ், 6 ஜூன் 2021

[143] இஷாரா முதுகமுவ, இலங்கை முழுவதிலும் 100 நகரங்களை அழகுபடுத்துவதற்கு அரசாங்கம் பிரேரணையை அனுமதிக்கிறது, (Ishara Mudugamuwa, Govt. approves proposal to beautify 100 cities across Sri Lanka), டெய்லி நியூஸ், 8 ஜூன் 2021; கொழும்பில் கட்டாய வெளியேற்றல்: அழகுபடுத்தலின் அவலட்சண விலை (Forced Evictions in Colombo: The Ugly Price of Beautification), CPA 2014.

முயற்சிகள், எண்ணற்ற சட்ட மற்றும் உரிமைப் பிரச்சினைகளால் நிறைந்திருந்தது.[144] மேலும், இலங்கையில் சீனாவின் வகிபாகத்தின் விரிவடைதலுடன், பூகோளரசியல், மற்றும் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு என்பவை பற்றிய விடயங்களிலும் கவனம் தேவைப் படுத்தப்படுகிறது.

நாட்டில் சீனா கால்தடம் பதிப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு உயர்கின்ற வேளையில் உடன்படிக்கைகள் மற்றும் செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) அல்லது புத்தாயிரமாம் ஆண்டுச் சவால்களுக்கான கூட்டுத் தாபனம் (MCC) போன்ற இந்திய அல்லது அமெரிக்க செயல்திட்ட உடன்படிக்கைகளுக்கு காண்பிக்கப்பட்டது போன்று இந்த எதிர்ப்புகளுக்கு அரசாங்கத்தின் ஒப்புதல் காண்பிக்கப் படவில்லை. சீனா மீதான தங்கியிருப்பைக் குறைப்பதற்கான ஒரு உதாரணமாகக் காணப் பட்ட ஜப்பானின் இலகு ரயில் செயல்திட்டத்தின் இடைநிறுத்தம், நிறுத்தப்பட்ட ஓர் அபிவிருத்திச் செயல்திட்டத்தின் உதாரணமாக அமைந்தது. ஜப்பானிய செயல்திட்டம் 0.1% வட்டியில், ஒரு 12 வருட சலுகைக் காலத்துடனும் 40 வருட முதிர்ச்சிக் காலத்துடன் $1.8 பில்லியன் சலுகை அடிப்படையிலான கடனால் நிதியளிக்கப்பட இருந்த போதிலும், அது செலவு ரீதியாகப் பயனுறுதியற்றது என்பதன அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டது.[145]

கி.கொ.மு மற்றும் எம்.சி.சி என்பவற்றிலிருந்து வெளியேறுவதற்கு இட்டுச் சென்ற விடயங்கள் வெளியான போதிலும், அவை குறிப்பாக அரசாங்கத்தின் தரப்பின் ஒரு தயக்கத்தை சுட்டிக்காட்டின, இந்த சம்பவங்களில் பொதுமக்கள் அழுத்தங்களுக்கான மற்றும் துறைமுக நகரப் பிரச்சினைக்கல்லாததான அவர்களின் பதிலிறுப்பு முக்கிய தீர்மானம் மேற்கொள்பவர்களுடன் சீனாவின் அதிகரித்த ஆதிக்கத்தின் பிரதிபலிப்பாக இருக்கலாம். இந்த உட்கட்டமைப்பு செயல்திட்டங்கள் தொடர்பாக, அரசாங்கத்தின் சார்பில் தீர்மானம் மேற்கொள்தல் பிராந்தியத்தில் சீனாவின் முக்கிய நலன்களை மேம்படுத்தும் பயன்விளைவையே உண்மையில் கொண்டிருந்தது.

இலங்கையின் பொருளாதாரம் தோல்வியடையாது என்பதை உறுதிப்படுத்துவதில் சீனா ஆர்வமாக இருக்கும். அதன் கடன் பொறி ராஜதந்திரத்தின் விளக்கத்தின் பகுதியாக, பொருளாதாரம் தோல்வியடைந்த நாடாக இலங்கையின் ஸ்தானம் என்பது சீன அரசாங்கத்தின் மீது மோசமாகப் பிரதிபலிக்கும் என்பதைக் கருதும். நாட்டில் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் போன்ற பிரச்சினைகளில் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பா என்பவற்றால் இலங்கை மீது இடப்படும் அழுத்தங்களுக்கான ஓர் எதிர்க் கனமளிப்பதாக அதன் வகிபாகத்தில், இலங்கை அரசாங்கத்திற்கான ஒரு பயனுள்ள பாத்திரத்தையும் சீனா வகிக்கிறது.

எவ்வாறாயினும், இலங்கையின் எதிர்காலம் பாதுகாப்பாக உள்ளது என்பதை இது கருதமாட்டாது. பெரும் சக்தியொன்றுடன் மிக நெருக்கமாக இணைந்து கொள்வதென்பது, ஏனைய சக்திகளின் மூலோபாய பதிலிறுப்புகளால் அனுகூலமற்று இருக்கும் வகையில், இலங்கையை பாதிக்கப்படும் நிலை கொண்டதாக ஆக்க முடியும்.

---

[144] கொழும்பில் கட்டாய வெளியேற்றல்: அழகுபடுத்தலின் அவலட்சண விலை (Forced Evictions in Colombo: The Ugly Price of Beautification), மா.கொ.நி 2014

[145] மார்வான் மாக்கன் மார்க்கார், 'ஜப்பான் நிதியளிக்கப்பட்ட கட்டுமான செயல்திட்டத்தை இலங்கை துண்டிக்கிறது' (Sri Lanka to scrap Japan – funded infrastructure projects) (டிசம்பர் 2020), நிக்கி ஆசியா https://asia.nikkei.com/Politics/International-relations/Sri-Lanka-to-scrap-Japan-funded-infrastructure-projects

### *அதிகாரப் பகிர்வு, நல்லிணக்கம் மீதான பாதிப்பு மற்றும் பூகோள அரசியலுடனான தாக்கங்கள்*

அபிவிருத்தி மட்டும் மீதான அரசாங்கத்தின் ஒற்றைக் கவனம் ஏனைய பல பிரச்சினைகள் ஓரந் தள்ளப்படுவதை ஏற்படுத்தியது. பொருளாதார சுபிட்சம் என்ற பெயரில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற பிரச்சினைகள எவ்வாறு ஓரந் தள்ளப்பட்டன என்பதை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் மற்றும் கொள்கை விளக்கங்கள் என்பன சுட்டிக்காட்டின. இந்த விடயங்களில் சீனாவின் ஆர்வமின்மை, அரசியல் மற்றும் ஏனைய உரிமைகள் தொடர்பான கூடுதல் அங்கீகாரத்திற்கான தேவை மீது அதிக தாக்கம் கொண்டிராத ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்களுடன் அதன் முன்னுரிமைகளை அரசாங்கம் தொடர்வதற்கு இயலுமாக விருந்ததையும் கருதியது. குறிப்பாக, இலங்கையில் இனப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வைக் காண்பது, நாட்டின் அரசியல் பாதையில் ஒரு முக்கிய இயக்கியாக வரலாற்றுரீதியாக இருந்து வந்துள்ள இந்தியாவின் ஒரு  தொடர்ச்சியான அழைப்பாக இருந்துள்ளது. இன்றும் கூட இந்நிலைமை அவ்விதமாக, நாட்டின் பல முக்கியமான விடயங்களில் இந்தியாவின் செல்வாக்கு ஒரு தாக்கத்தைக் கொண்டதாகத் தொடர்கிறது, ஆனாலும் உறுதியான முன்னேற்றம் இல்லாததும், மற்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் போன்று இந்தியாவால் ஆதரவளிக்கப்பட்ட சில விடயங்களின் பின்னடைதல் தொடர்பான அச்சம் என்பவையும் சர்வதேச சமூகத்தின் சில பிரிவுகளால் முகங் கொடுக்கப்படும் தற்போதைய குழப்பநிலையையும் சுட்டிக்காட்டுகின்து.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானத்தின் வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதற்கான இந்தியாவின் தீர்மானம் அது தன் செல்வாக்கை சீனாவிற்கு இழக்கத் தயங்குவதைச் சுட்டிக்காட்டுகிறது. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மற்றும் மாகாண மட்டங்களில் அதிகாரப் பகிர்வுக்குமாக இலங்கையைக் கோருவதில் இந்தியா உறுதியாக உள்ளது. உண்மையில், 13ஆவது திருத்தத்திற்கான குறிப்பிடல்கள் உயரதிகாரிகளிடமிருந்து இலங்கை குறித்தான அறிக்கைகளில் ஒரு இணைப்பாகவே மேற்கொள்ளப்படுகிறது..

எவ்வாறாயினும், இலங்கையின் நிலை சீனாவிற்கு சார்பாகச் சாய்ந்து விடக் கூடாதென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்களைத் தேவைப்படுத்தும் புவிசார் மூலோபாயக் கருதுதல்கள் இருந்த போதிலும் கூட யு.என்.எச்.ஆர்.சி இல் இந்தியா வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தமை, இலங்கை அரசாங்கத்தை ஆதரிப்பதற்கான அதன் ஒரு விருப்பின்மையைச் சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டு வாக்காளர்களிடமிருந்து இந்த அரசாங்கம் பெறும் ஆதரவிற்கு எதிராக ஏற்படும் தேர்தல் பின்னடைவைக் கவனத்தில் கொண்டு தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பது இந்தியாவுக்கு முற்றிலுமே சாத்தியமற்றது.

புதிய அரசாங்கத்தின் கீழ், ராஜதந்திர ரீதியில் முக்கியமானவை அதிகாரப் பகிர்வு மற்றும் 13ஆவது திருத்தம் பற்றிய பிரச்சினைகள மட்டுமல்ல. இரண்டு நாடுகளுக்குமிடையில் சில முதலீட்டு உடன்படிக்கைகள் சூழ்ந்ததாகவும் ஓரளவிலான உராய்வுகள் இருந்தன, குறிப்பாக தேசிய சொத்துகளின் பங்குகளை இந்திய நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது சம்பந்தமானவை.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான இந்த உடன்படிக்கைகள் மிகவும் சமீபத்திலானவையும் மற்றும் அநேகம் முக்கியமானவையுமாகும். முன்னைய அரசாங்கத்தின் கீழ் இந்தியா மற்றும் ஜப்பானுடன் கி.கொ.மு தொடர்பாக ஓர் ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மே 2019 இல் கைச்சாத்திடப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இந்தியா மற்றும் ஜப்பான் முனையத்தின் செயற்பாடுகளில் 49% பாத்தியதையைக் கொண்டிருக்கையில் இலங்கை துறைமுக அதிகாரசபை (இ.து.அ.ச) 51% பாத்தியதையைக் கொண்டிருக்கும். இந்த உடன்படிக்கை பின்னதாக புதிய

அமைச்சரவையால் டிசம்பர் 2019 இல் அனுமதிக்கப்பட்டது, ஜனவரி 2021 இல் அது கைவிடப்படுவதற்காக மட்டுமே.[146]

இந்த ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம், தேசிய சொத்துகளை விற்பதற்கு எதிராக பொதுமக்களின் குறிப்பிடத்தக்க போராட்டங்களின் பின்னணியில் வந்தது. இலங்கை துறைமுக அதிகாரசபைத் தொழிற் சங்கங்கள் இந்தச் செயன்முறையில் ஒரு காத்திரமான பாத்திரத்தை வகித்தன, எனினும் இந்தப் பிரச்சினை மீதான அழுத்தம் வீரவன்ச போன்ற தேசியவாத அரசியல்வாதிகளுடன் பௌத்த குரு உறுப்பினர்கள் பங்குபற்றி பொது அறிக்கைகளை விடுத்து போராட்டங்களில் பங்குபற்றி ஒப்பந்தத்தை எதிர்த்தது என ஒரு மிகப் பரந்த அளவிலான செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளிலிருந்து வந்தது. கி.கொ.மு இன் பங்குகளை விற்பதென்பது, நாட்டின் சொத்துக்களைக் கைகழுவி விடும் ஒரு தேசப்பற்றற்ற செயலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக, வாதிடப்பட்டது.

பதிலுக்கு, இந்தியா மற்றும் ஜப்பான் மேற்கு கொள்கலன் முனையத்தில் அதிக பங்குகளின் விற்பனைக்கு விருப்பறிவிக்கப்பட்டனர் (மே.கொ.மு).[147] கி.கொ.மு உடன் ஒப்பிடுகையில் மே.கொ.மு இல் இந்தியப் பங்குக் கொள்வனவிற்கு குறிப்பிடத்த வகையில் குறைந்த எதிர்ப்பே அங்கிருந்தது, இதற்கான காரணம் கி.கொ.மு உடன்படிக்கைக்கு எதிராக இ.து.அ.ச தொழிற்சங்கங்களால் இடப்பட்ட ஆரம்ப வாதங்களிலிருந்து அறிந்து கொள்ளப்படலாம். இதற்கான ஒரு காரணம், இ.து.அ.ச ஏற்கனவே கி.கொ.மு இல் நிதி முதலீடு செய்துள்ளதுடன் செயற்பாடுகள் ஆரம்பித்ததும் அவர்களின் பங்கிலாபத்தின் பங்கு குறைவடைவதைக் காண விரும்பவில்லை என்பதாகும். மேலுமொரு காரணம், கி.கொ.மு இன் பங்கைக் கைவிடுவதற்கான ஒரு பெரும் விருப்பின்மை அதன் அமைவிடமாகும், அது, தெற்காசிய வழி முனையத்தை (South Asia Gateway Terminal) அடுத்தமைந்து சிறிய மற்றும் பெரும் கப்பல்களுக்கு சேவையளிக்கும் ஒரு ‘முனையப் பெட்டகம்’ (box terminal) உருவாக்குவதற்கு இரண்டும் இணைவதை அனுமதித்து, அதிகரித்த வினைத்திறன் மற்றும் இலாபத்திறனை அனுமதிக்கிறது.

அவ்வாறான ஒப்பந்தங்களைச் சூழ்ந்ததான அரசியல் பிரச்சாரங்கள் அதளவில் இலங்கை சொத்துகளின் வெளிநாட்டு சொத்துரிமையை எதிர்க்கின்றதாக ஒரு விளக்கத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற போதிலும், அரசியல் தீர்மானம் மேற்கொள்வதின் அடிப்படையில் மிகவும் முக்கியமான விடயங்களாவன கைவசம் இருக்கும் சொத்துகளுடன் பிணைந்துள்ள நலன்களுடன் பங்குதாரர்களுக்கான குறித்த சூழ்நிலைசார்ந்த பிரதி பலன்களாகும். தேசிய சொத்துகள் கைமாறுவதை அனுமதிக்க விரும்பாத ஒரு கருத்தியல் மீது மட்டுமே கவனம் செலுத்தும் மக்கள் பிரச்சாரம் இந்த யதார்த்தத்திலிருந்து திசைதிருப்புகிறது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையிலான இருதரப்பு உடன்படிக்கைகள் பற்றி இரு பக்கங்களிலிருந்து வரும் முரண்பாடான அறிவிப்புகளின் பின்னணியில் அங்கே மேலும் ராஜதந்திர ரீதியிலான விவகாரங்கள் உள்ளன. பெப்ரெவரி 2021 இல் அமைச்சர் உதய கம்மனபில 2003 இல் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் ஒரு துணைநிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்கள் இலங்கைக்கு

[146] சாருமுனி டி சில்வா, ‘கி.கொ.மு இற்கு ‘உள்நாட்டு பேரத்துடன்’ இலங்கை இந்தியை அவமதித்தது’ (SL snubs India, with ‘domestic deal’ for ECT) (பெப்ரெவரி 2021), டெய்லி எப்டி: https://www.ft.lk/top-story/SL-snubs-India-Japan-with-domestic-deal-for-ECT/26-712480

[147] மீரா ஸ்ரீநிவாசன், ‘மற்றொரு இலங்கைத் துறைமுக செயல்திட்டத்துடன் மீளவும் இந்தியா, ஜப்பான்’ (India, Japan back in another Sri Lanka port project) (மார்ச் 2021), த ஹிந்து https://www.thehindu.com/news/international/sri-lanka-now-clears-indian-investment-at-another-colombo-port-terminal/article33969407.ece

திரும்பக் கையளிக்கப்பட்டு விட்டதாக அறிவித்தார்.[148] இந்தக் கூற்று பின்னர் இந்திய அரசாங்கத்தால் மறுக்கப்பட்டதுடன் அவ்வசதி அமுலில் இருக்கின்ற 'இருதரப்பு உடன்படிக்கைகளுக்கு அமைவாக'[149] செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தது.

தேசிய சொத்துகளின் பங்குகளை இந்தியாவுக்கு விற்பனை செய்தல் மற்றும் பின்னதான ஒப்பந்தங்களின் புதுப்பித்தல் என்பவற்றுக்கான எதிர்ப்பு, சீனாவுடன் இதே போன்ற உடன்படிக்கைகள் தொடர்பில் எதிர்ப்புறமான செயன்முறை இடம்பெறுகையில் மேலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. இறையாண்மை மற்றும் இலங்கை சொத்துகளின் சொத்துரிமை மற்றும் தேசிய ஆட்புலவெல்லை பற்றிய விளக்கங்களும் இதே போன்று பொது அரசியல் உரைகளின் பேசு பொருளாக இருக்கையில், இந்த விளக்கங்கள் சீனாவால் நிதியளிக்கப்படும் மற்றும் ஒருங்கிணைக்கப்படும் செயல்திட்டங்களைப் பொறுத்த வரை, மிக முக்கியமாக, துறைமுக நகரம் மீதான அரசாங்கக் கொள்கை தொடர்பில் குறைந்த ஆதிக்கம் கொண்டிருக்கக் காணப்படுகிறது. இந்தியாவிற்கு, இது வெறுமனே பொருளாதாரப் போட்டிக்கான ஒரு விடயமல்ல. சீனாவின் தொடர் முதலீட்டு செயல்திட்டங்கள் பாக்கிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகள் என இந்தியாவைச் சுற்றிச் சூழ்ந்துள்ள ஒரு பின்னணிச் சூழலில் துறைமுக நகரம் அதன் ஒரு பரந்த தேசிய பாதுகாப்பு விடயத்தின் ஒரு பகுதியாகும்.

### *தீவிரமடையும் சமத்துவமின்மைகள்*

அனைத்து எல்லாவற்றையும் விட அபிவிருத்தி தொடர்பாக வார்த்தை ஜாலக் கவனம் இருந்தாலும், இந்த அபிவிருத்திக்கு தேவையான உழைப்பை வழங்கியவர்களின் தேவைகளுக்கு இந்தக் கவனம் நீடிக்கப்படவில்லை. பணியாட்கள் கணிசமான சிரமங்களுக்கு உட்பட்டதுடன் கொள்கை ரீதியான தவறுகள் மற்றும் இச்சமயத்தில் போதியதல்லாத உதவி காரணமாக கஷ்டம் அனுபவித்தனர். இது பெருந்தொற்றுக் காலத்தின் போது இலங்கையின் முன்னணிப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பதிவு செய்த வருமானங்களுக்கு முரணானதாக இருந்தது.[150] பணியாளர்களால் ஏற்கனவே முகங் கொடுக்கப்பட்ட கடுமையான சமத்துவமின்மைகள்[151] தீவிரமடைந்நது பெருந்தொற்று காரணமாக வெளிப்படுத்தப்பட்டது. புலம்பெயர் பணியாளர்கள், சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்கள் மற்றும் ஏனையவர்கள் உட்பட பல்வேறு குழுக்களால் முகங் கொடுக்கப்பட்ட சிரமங்களை ஆவணப்படுத்திய போதிலும், இந்தப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதற்கு குறைந்தளவிலான அல்லது

---

[148]மீரா ஸ்ரீநிவாசன், 'திருகோணமலை எண்ணெய் குதங்களை இலங்கை மீள எடுக்கவுள்ளது' (Sri Lanka to 're – acquire' Trincomlee oil tanks) (பெப்ரெவரி 2021), த ஹிந்து https://www.thehindu.com/news/international/sri-lanka-to-re-acquire-trincomalee-port-oil-tanks/article33862319.ece

[149]மீரா ஸ்ரீநிவாசன், 'திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக இலங்கையுடனான உடன்படிக்கை இன்னமும் நடைமுறையிலுள்ளது, இந்தியா தெரிவிக்கிறது' (Pact with Sri Lanka on Trincomalee oil farm stands, says India) (பெப்ரெவரி 2021), த ஹிந்து https://www.thehindu.com/news/international/pact-with-sri-lanka-on-trincomalee-oil-farm-stands-says-india/article33876858.ece

[150]'பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் வருமானங்கள் 100 பில்லியன் மைல்கல்லை எட்டியதால் சாதனைகள உடைகின்றன' (Records tumble as listed firms' earnings top 100b milestone) (ஜுன் 2021), டெய்லி எப்டி https://www.ft.lk/front-page/Records-tumble-as-listed-firms-earnings-top-Rs-100-b-milestone/44-719204

[151]விமல் நாணயக்கார, 'ஒரு சமனிலைப்படுத்தும் நடவடிக்கை: இலங்கை பிராந்திய வருமானச் சமத்துவமின்மைகளை வெற்றி கொள்ள முடியுமா?' (A balancing Act; Can Sri Lanka Overcome Regional Income Inequalities?) (டிசம்பர் 2018), டோக்கிங் எக்னோமிஸ் https://www.ips.lk/talkingeconomics/2018/12/27/a-balancing-act-can-sri-lanka-overcome-regional-income-inequalities/

'இலங்கை மத்திய வங்கியின் இலங்கை சமூகப் பொருளாதார தரவு 2020' (Sri Lanka Socio Economic Data 2020' by The Central Bank of Sri Lanka) https://www.cbsl.gov.lk/sites/default/files/ cbslweb_documents/ publications/otherpub/publication_sri_lanka_socio_economic_data_folder_2020_e.pdf

அவை எதுவுமில்லாத நடவடிக்கைகளே கொள்கை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. இது, அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கையின் சமத்துவமற்ற தன்மை மற்றும் சமுதாயத்தின் ஒரு கணிசமான பிரிவின் உரிமைகள் மேல் வணிக சமூகத்திலுள்ள விசுவாசிகளின் கோரிக்கைகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமையை எடுத்துக்காட்ட உதவின.

சு.வ.வ பணியாளர்கள் மற்றும் அவ்வாறே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முடக்க காலங்களின் போது, வேலைத் தலங்களில் போதுமானதல்லாத பாதுகாப்புகள் அற்ற நிலையில் பணியாற்றுவதற்கு தேவைப்படுத்தப்பட்டமை, அவர்களை வைரஸ் தொற்றுக்காளாகும் இடரேதுநிலையிலிட்டது.[152] மேலும், பரிசோதனையில் கொவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்ட பல சு.வ.வ பணியாளர்கள் அல்லது தனிமைப்படுத்தப் பட்டவர்கள் சம்பளமற்ற விடுமுறை எடுப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டமை, அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட ரூ.5000 சலுகைக் கொடுப்பனவை அவர்களில் பலரும் பெறாததின் காரணமாக, அவர்களை வருமானத்திற்கு வழியற்றவர்களாக நிர்க்கதியாக்கியது. இதற்கு மேலதிகமாக, தடுப்பூசியின் முதலாவது சுற்றைக் கூட பெறுவதற்கு இயலாத ஒரு நிலையில், சு.வ.வ பணியாளர்கள் தடுப்பூசி பெறுவதற்கு முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. இது வைரசினால் அவர்கள் பீடிக்கப்படுவதின் இடரேதுநிலையை அதிகரித்ததுடன், அவர்களது ஆரோக்கியம் மற்றும் வாழ்வாதாரங்கள் என்பவற்றுக்கிடையில் தெரிவு செய்ய வேண்டிய ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர்களை இட்டது. இதன் ஒரு பயனாக, இப்பணியாளர்கள் கொவிட்-19 தொற்று தொடர்பில் மிகவும் இடரேதுநிலையிலள்ள குழுக்களில் ஒன்றாக வந்தனர். மிக அண்மையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் ஜி.எஸ்.பி+ இற்கான பாதிப்புகளை கொண்டிருக்கலாம் என்பதால், பொருளாதாரப் பரிமாணத்தில் மேலும் பின்னடைவுகளுக்கான அச்சங்களின் அதிகரித்தல் தொடர்பான வேறு கரிசனைகளும் அங்கே உள்ளன.[153]

பெருந்தொற்றின் போது புலம்பெயர் பணியாளர்களும், வருமானத்துக்கான வழியேதுமின்றி மற்றும் நாட்டிற்கு வெளியே பலரும் சிக்குண்டு தவிப்பதுடன், கணிசமானளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். திருப்பியனுப்பும் கொள்கை சீரற்றதாக இருந்தது, குறிப்பாக கொவிட்-19 பதிலிறுப்பின் ஆரம்பக் கட்டங்களில், விமானப் பயணங்களுக்கு பணம் செலுத்தக் கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதே வேளை பொருளாதார ரீதியாக விளிம்புநிலையிலுள்ள புலம்பெயர்ந்தோர் தங்களைக் தாங்களே காத்துக் கொள்வதற்கு விடப்பட்டு, தங்களது சொந்த நாடுகளுக்குத் திரும்புவதற்கு ஏதுவாக தனியார் நன்கொடைகள் மீது அநேகம் தங்கியிருந்தனர்.[154]

அவர்களது தேவைகளைக் கவனத்தில் கொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப் படுத்துவதிலுமான தவறுதல்கள் பணியாளர்கள் கவனத்தில் கொள்ளப்படாத ஒரு பெரிய தோற்றப்பாட்டையே உரைக்கின்றன. அரசாங்கமும் அதன் கூட்டாண்மை ஆதரவாளர்களும் இப்பணியாளர்களின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு நாணய வருமானங்களுக்கான

[152]'கொவிட்-19 பரவலின் ஆறு மாத நிறைவு மீது பிராண்டிக்ஸ் மற்றும் உலக வங்கி என்பவற்றிடமிருந்து இலங்கைச் சங்கம் பணியாளர்கள் உரிமைகளுக்கான மரியாதையைக் கோருகிறது' (Sri Lankan Union Demand Respect for Workers Rights from Brandix and World Bank on Six Month Anniversary of Covid – 19 Outbreak) https://asia.floorwage.org/wp-content/uploads/2021/04/Sri-Lanka-Press-statement-08.04.2021.pdf

[153]'ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தீர்மானம் ஜி.எஸ்.பி பிளஸ் மீது கை வைக்கிறது' (EU Parliament Resolution throws down the gauntlet on GSP+) (ஜுன் 2020), டெய்லி எப்டி https://www.ft.lk/news/EU-Parliament-Resolution-throws-down-the-gauntlet-on-GSP/56-719095

[154]மிஹி பெரெரா, 'ஆர்ப்பாட்டக்காரர்கள் புலம்பெயர் பணியாளர்களின் முன்கூட்டிய நாடு திரும்புதலுக்கு வலியுறுத்துகின்றனர்' (Protesters urge early repatriation of migrant workers) (ஜனவரி 2021), த மோர்னிங் https://www.themorning.lk/protesters-urge-early-repatriation-of-migrant-workers/

பங்களிப்பின் அனுகூலங்களை அறுவடை செய்கையில், இந்தப் பணியாளர்களே அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கின் விலையை பொறுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இந்தப் பிரிவில் எழுப்பப்பட்ட சில விடயங்களுடன் கண்டவாறு, ஏனைய விடயங்களுக்கு மேலாக அபிவிருத்தி முன்னெடுப்பை முன்னுரிமைப்படுத்துவது பல்வித பாதிப்புகளைக் கொண்டு வருகிறது. பல்வேறு இருக்கின்ற மற்றும் புதிய முன்னெடுப்புகள் அபிவிருத்தியின் விளக்கம் எவ்வாறு ஆட்சிமுறைமை, சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர் தராதரங்களின் விலையில் முன்னோக்கித் தள்ளப்பட்டன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இருக்கும் பாதுகாப்புகளை பின்தள்ளும் முயற்சிகளுடன் ஒரு வளச் சுரண்டலுக்கு வசதியளிக்கும் சாத்தியத்தோடு பணத் தூய்மைப்படுத்தல் மற்றும் ஊழலுக்குக்கான வாய்ப்புகளை இப்பெரும் அபிவிருத்தி செயல்திட்டங்கள் அநேகம் வழங்கும் என்ற கரிசனையும் அங்கு உள்ளது. அவ்வாறான ஒரு பின்னணியில், தேர்ந்தெடுத்த அபிவிருத்தி மாதிரி மற்றும் ஏற்படுத்தும் தாக்கங்களின் வலுவான கண்காணிப்பு என்பவை முக்கியமானதாகும்.

## முடிவுரை

அதிகரித்த பொருளாதார மற்றும் சுகாதார சவால்கள் மற்றும் இனத் தேசியவாத சொல்லங்காரங்கள் என்பவற்றுடன் அதிகரிக்கும் மற்றும் உருவாகும் புதிதான அச்சங்கள் மற்றும் சமத்துவமின்மைகளுடன் ஆட்சி முறைமை, இராணுவமயப்படுத்தல், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியில் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பல்வித சவால்களை, இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. 2019 மற்றும் 2020 என்பவற்றில் இலட்சிய வடிவ வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன, இருந்தபோதிலும், தற்போதுள்ள யதார்த்தம் இந்த வாக்குறுதியளிக்கப்பட்ட 'சுபிட்சத்திற்கான நோக்கு' என்பதிலிருந்து வெகுவாக விலகியுள்ளது என்பதைக் காட்டுகிறது.

அரசாங்கத்திற்குள் இருக்கும் விரிசல்கள் மற்றும் எதிர்காலத்தில் சாத்தியமான தலைமைத்துவச் சமர்கள் என்பவற்றின் மத்தியில் ஓர் இருண்ட பார்வை தீவிரமடைகிறது. அத்தோடு இது, பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகள் ஏதேனும் பயனுறுதியான எதிர்ப்பை மேற்கொள்வதற்கு ஓர் இயலுநிலை இல்லாத சமயத்திலானதாக உள்ளது. வாழ்வியல் யதார்த்தங்களை அங்கீகரித்து கவனம் செலுத்துகின்ற மற்றும் ஜனநாயகச் செயன்முறை குறித்த நம்பிக்கையை மக்களுக்கு அளிக்கின்ற உறுதியான அரசியல் தலைமைத்துவம், கொள்கை ஒத்திசைவு மற்றும் தெளிவான மற்றும் சட்ட நடைமுறைகள் என்பவையே இந்தத் தருணத்திற்கான தேவையாகும். பயங்கரவாதத் தாக்குதல்கள், அரச அனுசரனையிலான வன்முறை மற்றும் அச்சம் மற்றும் குரோதப் பிரச்சாரங்கள் என்பன எவ்வாறு பலரை விழுங்கியும் மற்றும் தேர்தல்களில் தெரிவுகள் தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தின என்பதற்கு இலங்கையின் சமீபத்தைய கடந்தகாலமே ஒரு நினைவூட்டியாகும். இதனால், இலங்கையின் அரசியலமைப்பு ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு வலுவான மற்றும் அமைதியான செயற்பாடுகளுடன் தலைமைத்துவப் போட்டிகள், அரசியல் உருவாக்கங்கள் மற்றும் கொள்கை முன்னெடுப்புகளில் நெருக்கமான கவனம் தேவை.

பதிப்பகத்தார்: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி),
கொழும்பு, இலங்கை

ISBN இலக்கம்: ISBN978-624-5914-03-6

9 786245 914036